வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

வார மலர்




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 21.08.2022 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 257 | பக்கங்கள் : 20



07
அம்பாந்தோட்டையில் மையங்கொள்ளும் அபாயம்!



08
முன்னாள் ஜனாதிபதிகள்



09
கப்பலல்ல, கடன் வலை!



10
ரிஷி சுனக்: வெள்ளை இனம் அல்லாத பிரதமரை பிரிட்டன் மக்கள் ஏற்க தயாரா?

## மிக மோசமான சமூக, பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள இலங்கை!

### ஐக்கிய நாடுகள் சபை சுட்டிக்காட்டு

*நியூயோர்க், ஓக. 21*

இலங்கையின் பொருளாதார நெருக்கடி நாட்டின் சுகாதாரக் கட்டமைப்பை வீழ்ச்சியின் இறுதிக் கட்டத்துக்கு இட்டுச்சென்றுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

இலங்கை அதன் வரலாற்றில் மிக மோசமான சமூக-பொருளாதார நெருக்கடியின் மத்தியில் உள்ளதாகவும் ஐக்கிய நாடுகள் சபை கூறியுள்ளது.

இந்த நிலைமை கர்ப்பிணிப் பெண்களின் வாழ்வாதாரத்தை

19

## 30 அமைச்சர்களை உள்ளடக்கி அடுத்த வாரம் அமைச்சரவை!

### 40 பேருக்கு இராஜாங்க அமைச்சுப் பதவி

*கொழும்பு, ஓக. 21*

அடுத்த வாரத்துக்குள் புதிய அமைச்சரவையை நியமிப்பதற்கான நடவடிக்கைகளில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீவிரமாக ஈடுபட்டுள்ளார் என கொழும்பு அரசியல் வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது.

30 அமைச்சர்களைக் கொண்டதாக இந்த அமைச்சரவை அமையவுள்ளது என்றும், 40 பேருக்கு இராஜாங்க அமைச்சுப் பதவிகள் வழங்கப்

19

# இலங்கை திரும்புவதை ஒத்திவைத்தார் கோட்டா!



## ரணிலுடன் தொலைபேசியில் உரையாடிய பின்னர் தீர்மானம்

கொழும்பு, ஓக. 21

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இம்மாத இறுதியில் நாடு திரும்புவார் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தாலும் அந்த திட்டத்தை அவர் திடீரென ஒத்திவைத்துள்ளார் என அறியமுடிகின்றது.

19



## கூடுதலான அமைச்சுக்களை கோரிய பொதுஜன பெரமுன!

### மறுப்பு தெரிவித்தார் ரணில்

*கொழும்பு, ஓக. 21*

சர்வகட்சி அரசாங்கத்தில் பொதுஜன பெரமுனவுக்கு மேலும் அமைச்சுப் பதவிகளை வழங்க ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மறுத்துவிட்டார் என அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பது தொடர்பாக ஜனாதிபதி மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர்களுக்கு இடையில் விசேட

19

## கொரோனா மரணம் 35 வீதத்தால் உயர்வு

*ஜெனிவா, ஓக. 21*

உலகெங்கும் கடந்த 4 வாரங்களில் கொரோனா இறப்பு 35 வீதத்தால் அதிகரித்துள்ளது என உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

உலகம் முழுவதும் கொரோனாப் பாதிப்பு தொடர்ந்து வருகின்றது. தொற்று பாதிப்பைக்

19

## நாடு முழுவதும் ஆயுதம் தாங்கிய முப்படையினர்

*கொழும்பு, ஓக. 21*

நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும், பொதுமக்கள் அமைதியைப் பேணுவதற்காக, ஆயுதம் தாங்கிய முப்படையினரை ஈடுபடுத்துவதற்கான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் வெளியிடப்பட்

19

## மணல் கடத்தி வந்த வாகனம் புரண்டதில் இளைஞர் மரணம்!

### கொடிகாமத்தில் நேற்று சம்பவம்

*யாழ்ப்பாணம், ஓக. 21*

மணல் கடத்தி வந்த வாகனம் புரண்டதில் அதில் சென்ற இளைஞர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

நேற்று காலை புலோலி- கொடிகாமம் வீதியில் உள்ள முள்ளிப் பகுதியில் இச்சம்பவம்

19

## நாணய நிதிய அதிகாரிகள் குழு 24ஆம் திகதி கொழும்பு வருகிறது

*கொழும்பு, ஓக. 21*

பொருளாதார மற்றும் நிதி சீர்திருத்தங்கள், கொள்கைகள் குறித்து இலங்கை அதிகாரிகளுடன் தொடர்ந்து கலந்துரையாடுவதற்காக சர்வதேச நாணய நிதிய அதிகாரிகள் குழு அடுத்த வாரம் கொழும்புக்கு வருகிறது.

இந்தக் குழுவின் விஜயம் எதிர்வரும் 24 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதிவரையான காலப்பகுதியில் அமையவுள்ளதாக இலங்கை தொடர்பில் வெளியிட்ட அறிக்கையில், சர்வதேச

19



## யாழ். வந்தார் பந்துல

*யாழ்ப்பாணம், ஓக. 21*

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்த்தன இரண்டு நாள் உத்தியோக பூர்வ விஜயமாக யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்தார்.

19

## அரசுக்கு எதிர்ப்புத் தெரிவித்து தேசிய மக்கள் சக்தி போராட்டம்



*கொழும்பு, ஓக. 21*

கைது நடவடிக்கை, பொருட்களின் விலையேற்றம் உள்ளிட்ட பல்வேறு விடயங்களைக்

19

## தீர்க்கமான முடிவொன்றை எடுக்கவுள்ளது டலஸ் அணி!

*கொழும்பு, ஓக. 21*

நாட்டின் நலன் கருதி தீர்க்கமான சில முடிவுகள் எடுக்கப்படவுள்ளன என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

டலஸ் ஆதரவு அணி பாராளுமன்ற உறுப்பி

19

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# இப்படியும் நடக்கிறது!

புலம்பெயர்ந்தோர் அலுவலகம் ஒன்று ஆரம்பிக்கப்படும் என்று ஜனாதிபதி அண்மையில் அறிவித்திருந்தமை பலருக்கும் நினைவிருக்கலாம்.

ரணில் பதவியேற்ற காலத்திலிருந்து புலம்பெயர்ந்த தமிழர்களின் உதவியை பெறுவதில் தொடர்ந்து அக்கறை காட்டிவருகின்றார்.

முன்னர் அவர் நல்லாட்சி அரசின் காலத்தில் பிரதமராக இருந்தபோதும் அவர் இது விடயத்தில் அக்கறை காட்டியது தெரிந்ததே. அப்போது நிதி அமைச்சராக இருந்த மங்கள சமர வீர ஊடாக புலம்பெயர்ந்த சில அமைப்புக்களுடன் தொடர்பை ஏற்படுத்தி, அவர்களூடாக சில நகர்வுகளுக்கு முயன்றதும் அப்போது பேசப்பட்டது.

ஆனால், அவர் காலத்தில் அதாவது மங்கள சமரவீரவின் ஊடாக அவர் நடத்திய தொடர்பாடல்கள் நாட்டுக்கு பய னுள்ளதாக இருந்ததா? அதனால் ஏதாவது பயனை இந்த நாடு பெற்றதா என்பது அவர்களுக்கு மாத்திரமே தெரிந்த சங்கதி.

புலம்பெயர்ந்த தமிழர்கள் என்றால் சிலருடைய பெயர்கள் மாத்திரமே பலருக்கும் ஞாபகத்தில் வரும். அவர்கள் அங்குள்ள தமிழர்களால் மதிக்கப்படுகின்றவர்களா? அவர்களின் பேச்சுக்கு புலம்பெயர் தமிழர்கள் கட்டுப்படுவார்களா என்பதைப் பற்றிய எந்தவித தெளிவும் இல்லாமலே அப்போது சில அமைப்புக் களுடன் நல்லாட்சி அரசு தொடர்பாடலை முன்னெடுத்தது. அதற்கு இங்குள்ள சில தமிழ் அரசியல்வாதிகளும் காரணம். அந்த அரசியல்வாதிகளை ஏற்றுக்கொள்கின்ற அமைப்புக்களை மாத்திரமே அவர்கள் அரசுக்கு அறிமுகம் செய்து வைத்தனர்.

ஆனால், அந்தக் காலத்திலேயே அவர்கள் விசேட அதிரடிப் படையின் பாதுகாப்புடனேயே நடமாடவேண்டி வந்தது ஏன் என்பதும் இரகசியமானதல்ல. புலம்பெயர் தமிழர்கள் சிலரால் அவர்களுக்கு ஆபத்து இருப்பதாக கூறியே பாதுகாப்பு வழங்க வேண்டியிருந்தது.

இதன்மூலம் புலம்பெயர் தமிழர்களின் ஒருசாரார் ஏற்றுக் கொள்ளாதவர்களே இன்னுமொரு புலம்பெயர் அமைப்பை அரசுக்கு அறிமுகம் செய்து வைத்தனர். இவையெல்லாம் பழைய சங்கதிகள்.

ஆனால் நாம் இப்போது சொல்ல வருவது, அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, புலம்பெயர்ந்தோர் நலனை யும் அவர்களுடனான தொடர்பாடலையும் கவனிக்க கொழும் பில் தனியான அலுவலகம் ஒன்றை அமைக்கவிருப்பதாக தெரிவித்திருந்ததும், கொழும்பில் சிலர் தங்களையே புலம் பெயர் தமிழர்களின் பிரதிநிதிகளாகவும், தாங்களே அவர்களின் பிரதிநிதிகள் என்றும் பகிரங்கமாகக் கூறத் தொடங்கிவிட்ட தைக் காணமுடிகின்றது.

அண்மையில் ஒரு சிங்கள சமூகவலைத்தள ஊடகம் ஒன்றில் ஒருவர் தன்னைத் தானே புலம்பெயர் தமிழர்களின் தலைவராக சித்தரித்து ஒரு பேட்டியை வழங்கியிருந்தார்.

அவர் யார் என்று எந்தவொரு புலம்பெயர் தமிழராவது அறிந்திருப்பாரா என்பது தெரியவில்லை.

சில ஆண்டுகளுக்கு முன்னர் திருகோணமலையில் புதிதாக அரசியல் கட்சி ஒன்றை ஆரம்பிப்பதாக அறிவித்துவிட்டு சில ஊடக சந்திப்புக்களை நடத்திய ஒருவர், பின்னர் சில காலங்க ளின் பின்னர், கோட்டாபய அரசியலுக்கு வருவதற்கு முன்ன தாக தொடங்கிய 'வியத்மக' என்ற அமைப்பில் தானே முக்கி யஸ்தர் என்று சொல்லிக் கொண்டு திரிந்ததை காணமுடிந்தது.

அவர் இப்போது தானே புலம்பெயர் தமிழ்களின் பிரதிநிதி என்றும் தான் நினைத்தால் இலங்கைக்கு பில்லியன் கணக்கில் டொலர்களைக் கொண்டுவரமுடியும் என்றும் கூறித்திரியத் தொடங்கியிருக்கிறார்.

அந்த குறித்த சிங்கள சமூகவலைத்தள ஊடகம், எப்போதும் சர்ச்சைக்குரிய விடயங்களை அலசுவதில் பெயர் பெற்றது. அதில் கலந்துகொண்டு சர்ச்சைக்குரிய வகையில் பேசினால், அது சிங்கள மக்கள் மத்தியில் பிரபல்யமாகிவிடும். அந்தப் பிரபல்யத்தை வைத்துக்கொண்டு, சம்பந்தப்பட்டவர்களுடன் ஊடாடுவதை நோக்கமாகக் கொண்டே பலரும் இதுபோன்ற புரளிகளைக் கிளப்பிக்கொண்டிருக்கின்றனர்.

முன்னதாக இப்படித்தான் ஒருவர் அந்த ஊடகத்தில் தோன்றி புலிகளை மிகக்கடுமையாக விமர்சித்து பேட்டியளித்தார். அவரது வாதங்கள் நியாயமானவை போல தோன்றினாலும் அவரது நோக்கம் என்ன என்பதை எவரும் அறிந்திருக்க வில்லை. சில நாட்களில் அவர் எல்லா அரசில்வாதிகளினதும் அறிமுகத்தை பெறமுடிந்தது. அதுபோலவே இப்போது சிலர் தாங்களே புலம்பெயர் தமிழர்களின் பிரதிநிதிகள் என்றும் தாங் கள் நினைத்தால் பில்லியன் கணக்கில் டொலர்களைக் கொண்டு வரமுடியும் என்றும் கதையளக்கத் தொடங்கிருக்கின்றனர்.

அதற்காகவே அந்த ஊடகத்திற்கு பணம் கொடுத்தும் பேட்டியளிக்க காத்திருக்கின்றனராம். அதில் பேசுவதற்கு சிங்களம் தெரிவது மாத்திரமே அவர்களுக்கு இருக்கும் ஒரே தகுதி.!

- ஊர்க்குருவி

# ஜனாதிபதி மாளிகையை ஹோட்டல் ஆக்கவேண்டும்

## சுற்றுலா சாரதி வழிகாட்டிகள் சங்கம் யோசனை

கொழும்பு, ஓக. 21

கண்டி, நுவரெலியா மற் றும் அனுராதபுரத்தில் உள்ள ஜனாதிபதி மாளிகைகளை ஆடம்பர ஹோட்டல்களாக மாற்றி உயர்தர சுற்றுலா பய ணிகளுக்கு திறக்குமாறு சுற் றுலா சாரதி வழிகாட்டி விரி வுரையாளர்கள் சங்கம் அர சாங்கத்திற்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

வருடத்திற்கு ஒரு முறை கூட ஜனாதிபதிகள் இந்த மாளிகைகளுக்கு விஜயம் செய்யாத சந்தர்ப்பங்களும் உண்டு எனவும், இவ்வாறான சூழ்நிலையில் இந்த மாளிகை களை பராமரிப்பது மக்களின் பணத்தை விரயமாக்கும் நடவடிக்கையாகும் எனவும் சுற்றுலா சாரதி வழிகாட்டி விரிவுரையாளர்கள் சங்கத் தின் தலைவர் ரஞ்சித் சுதசிங்க தெரிவித்தார்.

ஒரு வருடத்தில் இந்தக் கட்டடங்களைப் பராமரிப்ப தற்கு ஆகும் செலவை ஒப்பிடு கையில், ஐந்து நட்சத்திர ஹோட்டலாக்கி விட்டு, ஜனாதிபதி அங்கு சென்றால், அதன் ஒரு பகுதியை எத் தனை நாட்களுக்கு அவருக்கு ஒதுக்கி கொடுத்தாலும் நட்ட மில்லை என்றும் அவர் சுட் டிக்காட்டினார்.

கடந்த காலங்களில் வீதி வசதிகள் குறைவாக இருந்த போது அரச தலைவர்கள் தங்குவதற்காக கட்டப்பட்ட இந்த மாளிகைகள் நவீன போக்குவரத்து வசதிகள் உள்ள இக்காலத்தில் தேவை யில்லை என்றும் விரைவில் சில நடவடிக்கைகள் எடுக்கப் படவேண்டும் என்றும் அர சுக்கு பரிந்துரைத்ததாக அவர் கூறினார்.

(அ)

# அடுத்த வாரம் விடுதலை செய்யப்படுவார் ரஞ்சன்



கொழும்பு, ஓக. 21

தற்போது சிறைத்தண் டனை அனுபவித்து வரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராம நாயக்க ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ் அடுத்த வாரம் விடுதலை செய்யப்படுவார் என தக வல்கள் தெரிவிக்கின்றன.

ரஞ்சன் ராமநாயக்க தொடர்பான அனைத்து பரிந்துரைகளையும் ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்கவி டம் கையளித்துள்ளதாக நீதி அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டின் பேரில் நான்கு வருட கடூழியச் சிறைத்தண் டனை விதிக்கப்பட்ட ரஞ்சன் ராமநாயக்க, குற்றம் தொடர் பான மன்னிப்புக் கடிதத்தில் அண்மையில் கையொப்ப மிட்டார்.

ரஞ்சன் ராமநாயக்கவை ஜனாதிபதியின் பொது மன் னிப்பின் கீழ் விடுதலை செய் யுமாறு எதிர்க்கட்சிகள், கலைஞர்கள் மற்றும் சிவில் அமைப்புக்கள் தொடர்ந்தும் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத் தக்கது.

(அ)

# பொதுத் தேர்தலை நடத்தினால் அரசியல்வாதிகள் பாடம் கற்பர்

## முருந்தெட்டுவே ஆனந்த தேரர் கூறுகிறார்

கொழும்பு, ஓக. 21

நாடு மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள பின் னணியில் அரசியல்வாதிகள் அமைச்சுப் பதவிகளுக்காக போட்டிப்போட்டுக்கொண் டிருக்கிறார்கள் என அபய ராம விகாரையின் விகாராதி பதி முருந்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.

அபயராம விகாரையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட் டார்.

பொதுத்தேர்தலை நடத்தி னால் நாட்டு மக்கள் பெரும் பாலான அரசியல்வாதி களுக்கு தக்க பாடத்தை



புகட்டுவார்கள்.

சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்காவிடின் பொதுத் தேர்தலை நடத்துங்கள் என் பதை அரசாங்கத்திடம் வலி யுறுத்தியுள்ளோம்.

பெரும்பாலான நாடுகள் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டபோது அந் நாட்டு அரசியல்வாதிகள் அர சியல், கட்சி பேதங்களை துறந்து பொதுக் கொள்கை யின் அடிப்படையில் ஒன்றி ணைந்து செயற்பட்டு, நாட்டை கட்டியெழுப்பியுள் ளார்கள்.

இதேவேளை தாய் லாந்து, தென்கொரியா ஆகிய நாடுகள் பொருளாதார நெருக்கடியை எதிர் கொண்டபோது அந்நாட்டு மக்கள் தமது சொத்துக் களையும், தங்கத்தையும் அரசாங்கத்துக்கு வழங்கி பொருளாதார நெருக்கடியை வெற்றிக்கொண்டார்கள். அந்த நாட்டு அரசாங்கங்கள் அந்நாட்டு மக்களை ஒரு போதும் நெருக்கடிக்குள் ளாக்கவில்லை. யார் ஜனாதி பதி, யார் பிரதமர், யாருக்கு எந்த அமைச்சு என்பதற்கு மாத்திரம் அவதானம் செலுத் தப்படுகிறது - என்றார். (அ)

# முன்னாள் ஜனாதிபதிக்கான பாதுகாப்பில் விசேட கவனம்

கொழும்பு, ஓக. 21

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் மிரிஹான வீட்டுக்கும் அத னைச் சூழவுள்ள பகுதிக்கும் பாதுகாப்பு ஏற்பாடுகளை அதிகரிக்குமாறு உத்தரவிடப் பட்டுள்ளது.

நேற்று முன்தினம் வெள் ளிக்கிழமை இடம் பெற்ற பொலிஸ் உத்தியோ கத்தர்க ளுடனான கலந்துரையாட லின்போதே இந்த அறிவுறுத் தல்கள் வழங்கப்பட்டதாக பொலிஸ் வட்டாரங்கள் மூலம் தெரியவந்துள் ளது.

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எதிர்வரும் 24ஆம் திகதி இலங்கைக்கு வரவுள் ளார் என வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட் டத்தரணி அலி சப்ரி உறுதிப் படுத்தியுள்ளமை குறிப்பிடத் தக்கது.

(அ)

# கோட்டா வெளிநாடுகளில் ஒளிந்து வாழ்வதை அனுமதிக்க முடியாது!

## கூறுகின்றார் பிரசன்ன ரணதுங்க

கொழும்பு, ஓக.21

**“இலங்கையின் முன்னாள் ஜனாதிபதியான கோட்டா பய ராஜபக்ஷ, வெளிநாடுகளில் ஒளிந்து வாழ்வதை அனுமதிக்க முடியாது. நாடு திரும்பும் அவர் மீண்டும் அரசியலுக்கு வருவது தொடர்பில் எதனையும் அறி விக்கவில்லை. அரசியலுக்கு வரும் முடிவை அவர் எடுப்பார் என நான் நம்பவில்லை.”**



- இவ்வாறு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறிய தாவது:-

இந்த நாட்டின் சாதாரண குடிமக்களுக்கு இருக்கும் சுதந்திரம் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் இருக்கவேண்டும். அவர் தனது அமெரிக்க குடியுரிமையைத் துறந்து, இந்த நாட்டுக்காகப் பணியாற்றினார். எனவே, அவர் வெளிநாடுகளில் ஒளிந்து வாழ்வதை அனுமதிக்க முடியாது. இது அவரது மனித உரிமை மீறலாகும்.

எனவே, முன்னாள் ஜனாதிபதியின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி, அவர் இந்த நாட்டுக்குத் திரும்புவதற்கு தேவையான வசதிகளை செய்து கொடுக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தோம்.

அதேபோன்று இடைக்கால அரசையோ அல்லது இடைக்கால நிர்வாகத்தையோ விரைவில் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்தோம். ஏனெனில், இந்தப் பிரச்னையை மேலும் இழுத்தடிக்க அனுமதிக்க முடியாது.

நாடு டொலர் நெருக்கடியைச் சந்தித்து வருகின்றது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மக்களின் பிரச்னைகளை தீர்ப்பதற்கு ஜனாதிபதிக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்குகின்றது.

இன்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு பாராளுமன்றத்தில் 145 எம்.பிக்கள் உள்ளனர் - என்றார். (அ)

# ரணில் ராஜபக்ஷ சர்வாதிகாரி!

## ஹிருணிக்கா குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக. 21

“ராஜபக்ஷக்களை விடவும் மிகவும் மோசமான சர்வாதிகாரியே ‘ரணில் ராஜபக்ஷ’ என்பவர்.” - என்று விளாசித் தள்ளியுள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் ஹிருணிக்கா பிரேமச்சந்திர.

குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்டுவரும் விசாரணை தொடர்பில், வாக்குமூலம் பெறுவதற்காக ஹிருணிக்கா பிரேமசந்திர நேற்று சி.ஐ.டிக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

இதற்கமைய நேற்று முற்பகல் விசாரணைக்கு வந்த ஹிருணிக்கா, சி.ஐ.டி அலுவலகத்துக்குள் செல்வதற்கு முன்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டார். அவ்வேளையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

“போராட்டக்காரர்களின் கருணையால்தான் ரணில், ஜனாதிபதியானார். அந்த போராட்டம் தொடர்பில் விசாரணை நடத்தவே அழைக்கப்பட்டிருப்பதாக நம்புகின்றேன். போராட்டக்காரர்கள் வேட்டையாடப்படுகின்றனர்.




இதன் ஓர் அங்கமாக நானும் இலக்கு வைக்கப்பட்டுள்ளேன். அமைதியாகவே போராடினோம், எமது போராட்டம் ராஜபக்ஷக்களுக்கு மட்டுமே தலையிடியாக அமைந்தது.

எது எப்படி இருந்தாலும் ஒடுக்குமுறை செயலை வன்மையாகக் கண்டிக்கின்றேன். பல்கலைக்கழக மாணவர்கள்கூட பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுகின்றனர். ராஜபக்ஷக்களைவிடம், மோசமான சர்வாதிகாரியே ரணில், ராஜபக்ஷ.” - என்றும் ஹிருணிக்கா குறிப்பிட்டார்.

# விசேட தேவையுள்ளோருக்கு புதிய வாக்குச்சீட்டு அறிமுகம்

கொழும்பு, ஓக. 21

விசேட தேவையுடையவர்கள் வீட்டிலிருந்தே வாக்களிக்கக்கூடிய வசதி எதிர்வரும் காலங்களில் ஏற்படுத்தி கொடுக்கப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விசேட தேவையுடையவர்களுக்கு புதிய வாக்குச் சீட்டு அறிமுகப்படுத்தப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ)

# இலங்கை மின்சார சபை சீரமைக்கப்படவேண்டும்

## ஜனக்க ரத்நாயக்க வலியுறுத்து

கொழும்பு, ஓக. 21

இலங்கை மின்சார சபை மறுசீரமைக்கப்படவேண்டும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க தெரிவித் துள்ளார்.

ஜனாதிபதியின் இந்த வேலைத் திட்டத்துக்கு, தமது ஆணைக்குழுவின் ஒத்துழைப்பு வழங்கப்படுவதாக அவர் கூறினார்.

கணக்கியல், முகாமைத்துவம், இயக்கம் மற்றும் பரிமாற்றம் முதலான பணிகளை, மின்சார சபையில் உள்ள பொறியியலாளர்களே செய்கின்றனர்.

தொழில்நுட்பவியலாளர்கள், தொழில்நுட்பப் பணியையே செய்யவேண்டும்.

எனவே, இதற்கு சிறந்த முகாமைத்துவ குழு அவசியமாகும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# ஜனாதிபதியின் வேலைத்திட்டங்களுக்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியம்

## பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 21

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் முன்னெடுத்திருக்கும் வேலைத்திட்டங் களுக்கு அரச, தனியார் பிரிவு கள் உள்ளடங்கலாக மக்களின் ஒத்துழைப்பு அவசியம் என்று பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

எரிசக்தி துறையில் காணப் பட்ட அடிப்படை பிரச்னை களை தீர்ப்பதற்கு அரசாங்கம் மேற்கொண்ட விரைவான நடவடிக்கையினால், மக்களுக்கு ஓரளவு நிவாரணம் கிடைத்துள்ளது என்றும் அவர் கூறினார்.

மாகாண ஆளுநர்களுடன் பிரதமர் அலுவலகத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே பிரதமர் தினேஷ் குணவர்த்தன இந்த விட யங்களை தெரிவித்தார். (அ)




# நுரைச்சோலை கோளாறு இன்று கண்டறியப்படும்

கொழும்பு, ஓக. 21

திடீரென செயலிழந்த நுரைச்சோலை மின்னுற்பத்தி நிலையத்தின், முதலாவது மின்பிறப்பாக்கியில், தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டுள்ள இடத்தை இன்று ஞாயிற்றுக் கிழமை கண்டறிய முடியும் என அந்த மின்னுற்பத்தி நிலையத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து, குறித்த இடத்துக்கு சென்று, சீரமைப்புப் பணிகளை முன்னெடுக்க திட்டமிட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். அதற்காக, மேலும் 8 நாட்கள் எடுக்கும் என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார். (அ)

# பெரும்போகத்துக்கான உரத்தை தாமதமின்றி வழங்க நடவடிக்கை

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 21

பெரும்போகத்துக்கு தேவையான உரங்களை விவசாயிகளுக்கு தாமதமின்றி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

இம்முறை பெரும்போகத்தை வெற்றியடையச் செய்வதன் மூலம் நாட்டின் பொருளாதாரப் பிரச்னைகள் களையப்படும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.


ரணில் விக்கிரமசிங்க நேற்றுக் காலை வடமத்திய மாவட்ட பிரதம சங்கநாயக கலாநிதி வணக்கத்துக்குரிய பல்லேகம சிறினிவாச தேரரை நேரில் சென்று சந்தித்ததன் பின்னர் தேரருடனான கலந்துரையாடலின்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று காலை வரலாற்று சிறப்புமிக்க ஜயஸ்ரீ மகா போதிக்கு சென்று ஆசி பெற்றார்.

அங்கு மகா சங்கத்தினர் பிரித் பாராயணம் செய்து ஜனாதிபதிக்கு ஆசி வழங்கினர்.

நாயக்க தேரருடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் ஜனாதிபதி மேலும் கருத்துத் தெரிவிக்கையில், விவசாய பொருளாதாரத்தில் அதிக கவனம் செலுத்தி பொருளாதார பிரச்னைகளை தீர்க்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தெரிவித்தார்.

மகா விகாரையின் அகழ்வுப் பணிகளை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார். இதன் மூலம் மியன்மார், பர்மா போன்ற நாடுகளில் இருந்து பெருமளவிலான சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு அழைத்து வர முடியும் எனவும்



அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான எஸ்.எம். சந்திரசேன, பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திசாநாயக்க, ஷெஹான் சேமசிங்க, ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானி மற்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்க, ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான ருவான் விஜயவர்தன, முன்னாள் அமைச்சர்களான தயா கமகே, அனோமா கமகே., எஸ்.டி. சேமசிங்க, வடமத்திய மாகாண முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் கஸ்தூரி அனுராதநாயக்க ஆகியோர் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர். (அ)

# புதிய அரச கட்டமைப்பை உடன் உருவாக்கவேண்டும்

## ஜனாதிபதியிடம் மொட்டு கட்சி கோரிக்கை

கொழும்பு, ஒக. 21

**நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் பல்வேறு தரப்பினரையும் ஒன்றிணைத்துத் தாம் அமைக்க உத்தேசித்துள்ள புதிய அரசை மேலும் தாமதமின்றி விரைந்து ஏற்படுத்தும்படி ஆளும் கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தர்கள், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரியுள்ளனர்.**

பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் நிதி அமைச்சருமான பஸில் ராஜபக்ஷ, பொதுச் செயலாளர் சாகர காரியவசம், அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, பாராளுமன்ற உறுப்பினர்களான ரோஹித அபேகுணவர்த்தன, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, பவித்ரா வன்னியாராச்சி, நாமல் ராஜபக்ஷ, சஞ்சீவ எதிரிமன்ன ஆகியோர் கூட்டாக இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

சர்வகட்சி அரசோ, சர்வகட்சி ஆட்சியோ, தேசிய அரசோ எது என்றாலும், மேலும் தாமதிக்காமல் விரைந்து அதனை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி 'மொட்டுக்' கட்சியினர் ஜனாதிபதியைக் கோரியுள்ளனர்.

ஜனாதிபதியின் அரசியல் நடவடிக்கைகளுக்கு 'மொட்டு'க் கட்சி நிபந்தனையின்றி முழு ஒத்துழைப்பு தரும் என்றும் அவர்கள் உறுதியளித்துள்ளனர். (அ)



# இலங்கைக்கு ஒஸ்ரியா அரசினால் மருந்துப்பொருட்கள் நன்கொடை

கொழும்பு, ஒக. 21

நாட்டில் நிலவும் மருந்து தட்டுப்பாட்டினைக் கருத்திற் கொண்டு நான்கு மில்லியன் ரூபா பெறுமதியான அத்தியாவசிய மருந்துகளின் ஒரு தொகுதியை ஒஸ்ரியா அரசாங்கம் இலங்கைக்கு நன்கொடையாக வழங்கியுள்ளது.

நோயாளிகளுக்கு தேவைப்படும் மருந்துகளுக்காக இலங்கை அரசாங்கம் வெளிநாடுகளிடம் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்கவே இந்த மருந்துகள் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளன. (அ)



# ஐ.நா. ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் பணிப்பாளர் யாழ்.மேயருடன் பேச்சு

யாழ்ப்பாணம், ஒக. 21

ஐக்கிய நாடுகள் சபையின் ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் பணிப்பாளருக்கும் யாழ்ப்பாண மாநகர சபை முதல்வருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று காலை இடம்பெற்றது.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் பணிப்பாளர் அடங்கிய குழுவினர் நேற்று யாழ். மாநகர சபை முதல்வரை சந்தித்து தற்போது நிலைமைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டனர்.

இந்த சந்திப்பின்போது தற்போதைய பொருளாதார நெருக்கடி மற்றும் யுத்தத்தின் பின் நாட்டில் பல சொத்துக்கள் சேதம் ஆக்கப்பட்டமை, வெளிநாட்டில் உள்ள புலம்பெயர்ந்தவர்கள் எமது நாட்டில் முதலீடுகளை மேற்கொள்ள முன்வருகின்றபோதிலும் எமது நாட்டில் உள்ள முரண்பாடான கொள்கைகள் காரணமாக அவர்கள் தமது முதலீட்டை மேற்கொள்ளாத நிலை காணப்பட்டு வருவதாக மாநகர சபை முதல்வர் ஐக்கிய நாடுகள் சபையின் பணிப்பாளரிடம் தெரிவித்தார்.

தற்போது ஆட்சியிலுள்ள ஜனாதிபதி பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்க வேண்டும் எனவும், குறித்த ஜனாதிபதி பிரதமராக பதவி வகித்த காலப் பகுதியிலே ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டத்துடன் பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவதற்கு ஆதரவு தெரிவித்த நிலையில் தற்போது பயங்கரவாத தடை சட்டத்தை நடைமுறையில் வைத்திருப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது என்னும் விடயத்தையும் குறித்த பிரதிநிதிகளிடம் தெரிவித்தார் என மாநகர முதல்வர் குறிப்பிட்டார். (அ)

# இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகள் உள்ள தாய்மார் வெளிநாடு செல்ல அனுமதியில்லை!

கொழும்பு, ஒக. 21

இரண்டு வயதுக்கு குறைந்த குழந்தைகள் உள்ள தாய்மார்களுக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்புக்குச் செல்ல அனுமதி வழங்கப்படமாட்டாது என இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

அவ்வாறான பெண்கள், இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தில் பதிவை பெற்றுக்கொள்வதற்கும் சந்தர்ப்பம் கிடைக்காது என்றும் அந்த பணியகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவுகளை பெற்றுக்கொள்ளும் போது தாய்மார்கள், தங்களுக்கு பிள்ளைகள் இருக்கின்றனர் அல்லது இல்லை என்பதையும் அல்லது இரண்டு வயதுக்கு மேற்பட்ட, 18 வயதுக்கு குறைந்த பிள்ளைகள் உள்ள தாய்மார்கள், அந்த பிள்ளைகளின் பாதுகாப்பு மற்றும் கல்வி தொடர்பில் எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்தும் சத்தியக்கடதாசி வழங்க வேண்டும்.

அந்த சத்தியக்கடதாசியானது, தமது பிரிவுக்கான கிராம உத்தியோகத்தர் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டு பிரதேச செயலகத்தில் கையளிக்கப்பட வேண்டும் என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது. (அ)

# முட்டைகளை அதிக விலைக்கு விற்பவர்கள் மீது நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக. 21

யாழ்ப்பாணத்தில் கூடிய விலைக்கு முட்டைகளை விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பாவனையாளர் அதிகார சபையின் யாழ்.மாவட்ட இணைப்பு அதிகாரி அறிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முட்டைக்கான நிர்ணய விலையை பாவனையாளர்கள் அதிகார சபை விசேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வெளியிட்டுள்ளது.

வெள்ளை நிற முட்டை 43 ரூபாவும், பழுப்பு நிற முட்டை 45 ரூபாவுக்கு விற்பனை செய்ய நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

ஆகவே விற்பனையாளர்கள் மற்றும் வர்த்தகர்கள், அதி கூடிய விலைக்கு முட்டையை விற்பனை செய்தல், விலைப் பட்டியல்களை காட்சிப்படுத்தாமை, போன்றவற்றுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

தற்போது இது தொடர்பில் யாழ்.மாவட்ட வர்த்தகர்களுக்கு, பாவனையாளர்கள் அதிகார சபையின் புலனாய்வு அதிகாரிகள் ஊடாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகின்றது - என்றார். (அ)

# மின் பாவனை வீதம் குறைவு!

கொழும்பு, ஒக. 21

நாட்டில் மின்சார பாவனை 20 வீதத்திற்கும் மேலாக குறைந்துள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிக்கை வெளியிட்டுள்ளது.

மின்சார பாவனை அதிகமாக உள்ள காலப்பகுதியில் மின்சாரப் பாவனை குறைந்துள்ளதாக அதன் தலைவர் ஜனக ரத்னாயக தெரிவித்தார்.

எவ்வாறாயினும், தற்போதைய மின்சார பாவனை 20 வீதத்திற்கும் மேலாக குறைந்துள்ளது

மின் பாவனையை குறைப்பதற்கு தெளிவான வேலைத்திட்டம் ஒன்று தேவை என இலங்கை மின்சார சபையின் பொறியியல் சங்கத்தின் தலைவர் அனில் ரஞ்சத் இந்துவர தெரிவித்துள்ளார்.

மன்னார் மற்றும் பூநகரி ஆகிய பிரதேசங்களில் இரண்டு காற்றாலை மின் உற்பத்தித் திட்டங்களை நிறுவ அதானி கிரீன் எனர்ஜி நிறுவனத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு 500 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேல் முதலீடு செய்யப்படவுள்ளது.

# ஒவ்வொரு இலங்கை குடிமகனும் 10 இலட்சம் ரூபா கடனாளிகள்!

கொழும்பு, ஒக. 21

இலங்கையில் தனிநபர் கடன் தொகை தற்போது 1 மில்லியன் ரூபாவை கடந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை மத்திய வங்கியின் அறிக்கையின்படி, ஏப்ரல் 2022க்குள், மத்திய அரசு செலுத்த வேண்டிய மொத்த கடன் தொகை 4 மாதங்களுக்குள் 32 சதவீதம் அதிகரித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் தரவுகளின்படி, 2022 ஏப்ரல் மாதத்துக்குள் மத்திய அரசாங்கம் செலுத்தவேண்டிய மொத்த கடன் தொகை 23,310.1 பில்லியன் ரூபா என தெரிவிக்கப்பட்டுள்ளது.

12,442.3 பில்லியன் ரூபா உள்நாட்டுக் கடன்களாகவும் 10,867.8 பில்லியன் ரூபா வெளிநாட்டுக் கடன்களாகவும் இருப்பதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

2021 ஆம் ஆண்டின் இறுதியில் 17,589.4 பில்லியன் ரூபாவாக பதிவாகியிருந்த மத்திய அரசாங்கத்தின் மொத்தக் கடன் 04 மாத காலப்பகுதிக்குள் 5,720.7 பில்லியன் ரூபா அல்லது 32.52 வீதம் அதிகரித்துள்ளது என்பது விசேட அம்சமாகும்.

அதேவேளை, இலங்கையில் தனிநபர் கடனின் அளவும் விரைவான அதிகரிப்பை சந்தித்துள்ளது.

இந்த நாட்டின் சனத்தொகை 22 மில்லியன், அதன்படி இலங்கையின் ஒவ்வொரு குடிமகனும் 10 இலட்சம் ரூபா கடனாளிகளாக இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# நான்காவது தடுப்பூசியை விரைவாக செலுத்துங்கள்

## சுகாதார அமைச்சு கோரிக்கை

கொழும்பு, ஒக. 21

நான்காவது கோவிட் தடுப்பூசியை விரைவாக செலுத்திக் கொள்ளுமாறு பொதுமக்களை சுகாதார அமைச்சு அறிவுத்தியுள்ளது.

இதேவேளை, நாட்டில் குறைந்த எண்ணிக்கையிலான மக்களே நான்காவது தடுப்பூசி செலுத்தி கொண்டுள்ளதாகவும், மூன்றாவது தடுப்பூசியை செலுத்திக் கொள்ளாதவர்கள் தடுப்பூசியை செலுத்திக் கொள்ளுமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஹேமந்த ஹேரத் வலியுறுத்தியுள்ளார்

மேலும் நான்காவது தடுப்பூசி செலுத்தி கொண்டவர்களுக்கு பக்க விளைவுகள் ஏதும் ஏற்பட்டதாக இதுவரை பதிவாகவில்லை என்பதோடு நாளாந்தம் 100 கொவிட் தொற்றாளர்கள் இனங்காணப்படுகின்றனர் எனவும் சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (அ)

ஈழநாடு
Eelanadu
21.08.2022 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், ஆவணி 05

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# ஜெனிவா சவால்?

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் அடுத்த மாதம் இடம்பெறவுள்ளது. இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கட்சிகளும் புலம்பெயர் அமைப்புக்களும் வழமைபோல் கடிதங்களை அனுப்பிவைத்திருக்கின்றன. இலங்கையின் மனித உரிமைகள் விவகாரத்தில், மீளவும் அமெரிக்கா நேரடியாக தலையீடு செய்யவுள்ளது. இந்த நிலையில்தான், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஜெனிவா சவாலாக அமையாதென்று குறிப்பிட்டிருக்கின்றார்.

47 உறுப்பு நாடுகளை கொண்டிருக்கும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையானது, 2006இல் உருவாக்கப்பட்டது. அதுவரையில், ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழு என்னும் பெயரிலேயே இது அழைக்கப்பட்டது. பேரவையாக மாற்றப்பட்டபோது, அப்போது அமெரிக்காவை ஆட்சி செய்த, ஜோர்ஜ்.டபிள்யு. புஸ் தலைமையிலான குடியரசு கட்சி நிர்வாகம், மனித உரிமைகள் பேரவையுடன் இணைந்து கொள்ள மறுத்திருந்தது. ஆனால் 2009இல் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பராக் ஒபாமா தலைமையிலான ஜனநாயகக் கட்சியின் நிர்வாகம் பேரவையுடன் இணைந்து செயற்படும் கொள்கை நிலைப்பாட்டை எடுத்தது.

பேரவையுடன் இணைந்து செயற்படுவதன் மூலம்தான், பேரவையின் செயற்பாடுகளை வீரியமுள்ளதாக்க முடியுமென்பதே ஒபாமா நிர்வாகத்தின் நிலைப்பாடாக இருந்தது. பேரவையின் செயற்பாடுகள் மிகவும் பலவீனமாக இருக்கின்றன. இந்த நிலையில், மனித உரிமைகள் அமெரிக்க வெளிவிவகாரக் கொள்கையின் அங்கம் என்னும் வகையில், பேரவையில் அங்கம் வகிப்பதன் ஊடாகவே, பேரவையின் செயற்பாடுகளை தாக்கமுள்ளதாக்க முடியுமென்று, அப்போதையே அமெரிக்க ராஜாங்கச் செயலர் ஹிலாரி கிளின்ரன் தெரிவித்திருந்தார்.

இவ்வாறானதொரு நிலையில்தான், இலங்கையின் இறுதி யுத்தம் மோசமான மனித அழிவுகளுடன் முடிவுக்கு வந்தது. யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்த மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம், மனித உரிமைகள் தொடர்பான கேள்விகளுக்கு பதிலளிக்க மறுத்துவந்த நிலையில்தான், 2012இல், மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்க அனுசரணையுடன் முதலாவது பொறுப்புக் கூறல் பிரேரணை கொண்டுவரப்பட்டது. அன்றைய சூழலில் அமெரிக்க பிரேரணை என்றே அது அழைக்கப்பட்டது. அமெரிக்கா அனுசரணை வழங்காதிருந்திருந்தால், அவ்வாறானதொரு பிரேரணையை கொண்டு வந்திருக்க முடியாது.

அமெரிக்க ஆதரவுடன் கொண்டுவரப்பட்ட பொறுப்புக் கூறல் பிரேரணைக்கு பதிலளிக்கும் பொறுப்பை, மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் தட்டிக்கழித்தது. இந்த நிலையிலேயே மேலும் பிரேரணைகள் கொண்டுவரப்பட்டன. ஆட்சி மாற்றத்தை தொடர்ந்து கொழும்பின் எதிர்ப்புப் போக்கில் சடுதியான மாற்றமொன்று ஏற்பட்டது. 2015இல் கொண்டுவரப்பட்ட பிரேரணைக்கு இணையனுசரணை வழங்கி, அதனை அமுல்படுத்துவதாக ரணில் - மைத்திரி அரசாங்கம் வாக்குறுதியளித்தது. சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் எதிர்பார்த்த விளைவுகள் ஏற்படவில்லை.

மீண்டும் கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் ராஜபக்ஷக்களின் அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட்ட போது, மகிந்த காலத்து கொள்கையே தூசுதட்டப்பட்டது. மீளவும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையுடன் மோதும் கொள்கை நிலைப்பாட்டையே கோட்டாபய அரசாங்கம் கடைப்பிடித்தது. இந்த நிலையில் சற்றும் எதிர்பாராத வகையில் நல்லாட்சி அரசாங்கமென்று அழைக்கப்பட்ட ஆட்சியின் பிரதமர் ரணில் விக்கிரசிங்கவும், பேரவையுடன் மோதும் கொள்கை நிலைப்பாட்டை கொண்டிருந்த ராஜபக்ஷவினரும் ஓரணியில் இருக்கின்றனர். இவ்வாறானதொரு புதிய அரசியல் சூழலில்தான் அடுத்த மாதம் ஜெனிவா கூட்டத் தொடரில் இலங்கை விவகாரம் மீளவும் எடுத்துக் கொள்ளப்படப் போகின்றது.

பொருளாதார நெருக்கடியை ஒரு துருப்புச் சீட்டாக அரசாங்கம் முன்வைக்கலாம். இந்த அடிப்படையில்தான் ஜெனிவா சவாலாக அமையப் போவதில்லையென்று ரணில் கூறுகின்றார். ஆனால் தங்களின் பிடியை முழுமையாக கைவிடாத வகையிலேயே அமெரிக்கா தலைமையிலான மேற்குலகு முடிவுகளை கைக்கொள்ளும். அதேவேளை, இலங்கை விவகாரம் மனித உரிமை சிந்தனைகள் மீது நம்பிக்கையுள்ள உலக சமூகத்தினர் மத்தியிலும் அவநம்பிக்கையை ஏற்படுத்திவிடக் கூடாதென்னும் கரிசனையும் குறித்த நாடுகளிடம் இருக்கும். அதேவேளை தமிழர்கள் எதிர்பார்ப்பது போன்று அதிக கடுமையான அழுத்தங்களையும் வழங்குவார்களா என்பதும் கேள்வி.

ஏனெனில் அதிக அழுத்தங்களை பிரயோகிக்கும்போது, அது நாடுகளை தனிமைப்படுத்தவே வழிவகுக்கும்மென்னும் பார்வை அமெரிக்க கொள்கை வகுப்பாளர்கள் மத்தியிலுண்டு. ஜோன் ஹெரி அமெரிக்க செனட் வெளிவிவகார குழுவின் தலைவராக இருந்தபோது, இலங்கை தொடர்பில் அவ்வாறானதொரு அறிக்கை வெளியிடப்பட்டிருந்தது.

ஆனால் ஏனையவர்களை விடவும் ரணில் விக்கிரமசிங்க இந்த விடயங்களை பக்குவமாக அணுகக்கூடிய அனுபவங்களை கொண்டிருக்கின்றார் என்பது உண்மைதான். எனவே ரணிலை குறைத்து மதிப்பிடுவது சரியாக இருக்காது. அதிகம் எதிர்க்காமல், அமுல்படுத்துவோம் ஆனால் காலம் தேவையென்னும் தந்திரோபாயத்தையே ரணில் கைக்கொள்ளக்கூடும்.



# உயிருள்ள மீன்கள், நண்டுகளுக்கும் சீனாவில் கொரோனா பரிசோதனை

*பல லட்சம் மக்களுக்கு மட்டுமில்லாமல் மீன்களுக்கும், நண்டுகளுக்கும் கோவிட் பரிசோதனை செய்கிறது சீனா.*

*சீனாவின் கடலோர மாநகரமான ஜியாமெனில் 40 பேருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்டதை அடுத்து சுமார் 50 லட்சம் மக்களுக்கு கோவிட் பரிசோதனை செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது. ஆனால், பரிசோதனை மக்களுக்கு மட்டுமே அல்ல. சிலவகை கடல் வாழ் உயிரிகளுக்கும் இந்த முறை கோவிட் பரிசோதனை செய்யப்படும் என்று அரசு அறிக்கை ஒன்று கூறுகிறது.*

*மீனவர்கள் துறைக்குத் திரும்பும்போது, மீனவர்களும், அவர்களின் கடல் உணவுகளும் பரிசோதனைக்கு உள்ளாகவேண்டும் என்று ஜியாமெனில் உள்ள ஜிமெய் கடலோர மாவட்ட பெருந்தொற்று கட்டுப்பாட்டுக் குழு ஓர் அறிக்கை வெளியிட்டது.*

*இதையடுத்து, உயிரோடு இருக்கும் மீன்களுக்கும், நண்டுகளுக்கும் மருத்துவப் பணியாளர்கள் கோவிட் நோய்க்கான பி.சி.ஆர். பரிசோதனை செய்வதைக் காட்டும் காணொளி டிக்டாக் போல சீன மொழியில் செயல்படும் டுயின் உள்ளிட்ட பல சமூக ஊடகத் தளங்களில் பகிரப்பட்டது.*

*இது விநோதமாகத் தோன்றினாலும், இப்படி உயிருள்ள மீனுக்கு கோவிட் பரிசோதனை செய்யப்படுவது இது முதல் முறை அல்ல.*

*ஜியாமென் நகராட்சி கடல் சார் மேம்பாட்டு அமைப்பை சேர்ந்த ஓர் ஊழியர் இது பற்றி சௌத் சீனா மோர்னிங் போஸ்ட் நாளேட்டிடம் பேசும்போது, ஹைனானில் நடந்த தீவிர தொற்றுப் பரவலில் இருந்து பாடம் கற்றுக்கொண்டு இப்படி செய்வதாக கூறினார்.*

*“உள்ளூர் மீனவர்களுக்கும் கடல் தாண்டி இருக்கும் மீனவர்களுக்கும் இடையே நடந்த கடல் சார்ந்த பொருள் பரிமாற்றத்தால் இந்த பரவல் முதலில் தூண்டப்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகிறது.”*

*ஓகஸ்ட் மாதம் பிறந்ததில் இருந்து மற்றொரு கடலோர மாகாணமான ஹைனானில் 10 ஆயிரம் பேருக்கு மேல் கோவிட் தோற்று ஏற்பட்டுள்ளது. இந்த பரவலுக்கும் மீனவ சமுதாயத்துக்கும் தொடர்பிருப்பதாக அதிகாரிகள் கூறுகிறார்கள்.*

*கொரோனா பரவலுக்கும் கடல் சார் உயிர்களுக்கும் தொடர்பு இருக்கலாம் என்று நீண்ட காலமாக ஊடகங்கள் கவலைகளை வெளியிட்டு வருகின்றன. மத்திய சீனாவில் உள்ள வுஹான் நகரில் உள்ள உயிருள்ள ஜீவராசிகளையும், கடல் உணவுகளையும் விற்கும் ஒரு சந்தையில்தான் உலகிலேயே முதல் முறையாக கோவிட் தொற்று பரவியதாக கூறப்பட்டுவந்தது குறிப்பிடத்தக்கது.*


*கடல் உணவுகளில் கொரோனா வாழ்வது சாத்தியமல்ல என்றபோதும், சீனாவில் நடந்த பல பரவல்கள் குளிர்ப்பதனப் பொருள்கள், கடல் உணவுகளைக் கையாளும் துறைமுகத் தொழிலாளர்களோடு தொடர்பு படுத்தப்படுகிறது.*

*இது போன்ற ஒரு பரவல் 2020 இல் தலைநகர் பீஜிங்கில் ஏற்பட்டபோது சல்மோன் மீன்கள் குறித்த பீதி பரவியது. இறக்குமதி செய்யப்பட்ட சல்மோன் மீன்களை வெட்டும் பலகைகளில் கோவிட் 19 வைரஸ் காணப்பட்டதாக அரசு ஊடகம் அப்போது தெரிவித்தது.*

*இதனால், இந்த வகை மீன்கள் கடைகளில் இருந்து அகற்றப்பட்டன. இறக்குமதி நிறுத்தப்பட்டது.*

*மே மாதம் நீர் யானைகளுக்கு கோவிட் பரிசோதனை செய்யும் படங்களை சீன அரசு ஊடகம் பகிர்ந்தது. அத்துடன், வாரம் இரு முறை இந்த விலங்குகளுக்கு கோவிட் பரிசோதனை செய்வது அவசியம் என்றும் கூறப்பட்டது.*

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



பகிர்வு -43

# உலக புகைப்பட தினம்

கணபதி சர்வானந்தா

உலக புகைப்பட தினம் என்றதும் எனக்கு நான் பிறந்து ஆறு மாதத்தில் எடுத்த புகைப்படம் தான் ஞாபகத்துக்கு வந்தது. அதுவும் கொழும்பில் இருந்து வந்த ராஜா அண்ணா எடுத்தது. 1983 வரை அது சட்டம் இடப்பட்டு எங்களது வீட்டு வரவேற்பறையில் தொங்க விடப்பட்டிருந்த விடயம் எனது மனப்பதிவில் உண்டு. அதன் பின்பு சண்டை, சச்சரவு, பீரங்கித் தாக்குதல், வான் வழித் தாக்குதல், இடம் பெயர்வு எனப் பல வந்தன. அதனால் அந்தப் புகைப்படமும் காணாமல் போயிற்று. யுத்த காலத்தில் ஏற்பட்ட அதிர்வுகள் மனதில் இருந்த பலவற்றை அழித்துவிட்டன. அதிலிருந்து மீண்டுவர நினைத்தும் பயனில்லை. காட்சிகளை மீள எண்ணிப் பார்த்தாலும் அவை அத்தனை சுகத்தைத் தரவல்லனவாகத் தெரியவில்லை.

இருந்தும் அக்காலத்தே எமது வீட்டில் இருந்த மீளப் பெறமுடியாத அரும்பொருட்கள் பலவற்றை இழந்த பின்னரே– எனக்கு ஆவணமாக்கலின் முக்கியத்துவம் புரியத் தொடங்கியது. எம்மிடம் இருந்ததும், எம்முடன் இருந்ததுமான பல விடயங்களைப் பாதுகாக்கத் தவறிவிட்டோம் என்ற ஆதங்கம் என்னிடத்தில் உண்டு.

பழையன பலவற்றைப் பாதுகாத்து அடுத்த சந்ததியினருக்குக் கடத்தத் தவறியதன் விளைவு சமூகத்தில் ஒரு வெற்றிடம் தோன்றக் காரணமாக இருப்பதை மறுப்பதற்கில்லை. அப்போது ஆவணமாக்கலின் முக்கியத்துவத்தை சொல்லித்தர யாரும் இருக்கவில்லை. கல்வி முறையிலும் அதற்கான இடம் இருந்ததாக எனக்கு ஞாபகமில்லை. மேற்படிப்புகளில் மட்டும் சொல்லித்தரும் கல்வியாகவே ஆவணமாக்கல் என்ற விடயம் காணப்பட்டது.

ஆவணமாக்கல் என்று வரும்போது புகைப்படம் என்ற விடயம் முக்கியம் பெறுகிறது. நான் சிறுவனாக இருந்தபோது குறிப்பாகத் திருமணச் சடங்குகளிலும் அது தொடர்பான வைபவங்களிலுமே புகைப்படக் கருவியான “கமெரா” வைப் பார்த்திருக்கிறேன். அதுவும் பிரகாசமான ஒளியை ஏற்படுத்தக் கூடிய தற்காலிக மின் குமிழ்களைப் பொருத்தக் கூடிய உப உறுப்புகளோடு அதனைப் பார்த்ததாக ஞாபகம். பணக்காரர் வீட்டுத் திருமணங்களிலேதான் புகைப்படம் எடுப்பார்கள். அதுவும் திரையில் பார்க்கும் அசையும் படங்களை அப்போது யாரும் எடுத்ததில்லை. அதற்குரிய வசதி வாய்ப்பும் இருந்ததில்லை. ஒரு பணக்காரர் வீட்டுத் திருமணத்தில் முதன் முதலில் அசையும் படத்தை எடுக்கும் கருவியை நான் பார்த்தேன். கொழும்பில் இருந்து வந்த தொழில் நுட்பவியலாளர்களைக் கொண்டே அக்கருவி இயக்கப்பட்டுப் படம் பதிவு எடுக்கப்பட்டது. அதுவும் எடுத்த பின்னர் அதனைக் கொழும்புக்குக் கொண்டு சென்று அதனைச் சென்னைக்கு அனுப்பிக் கழிவிப் பல மாதங்களுக்குப் பின்னரே காட்சிப்படுத்தினர்.

அது பேசாத படமாகவே காட்சிப்படுத்தப்பட்டது. காட்சிகள் திரையில் அதி வேகமாக நகர்ந்தன. பார்க்க விசித்திரமாக இருந்தது. புகைப்படங்களும் அப்படியே.எடுத்த உடனே பார்க்க முடியாது. பல நாட்கள் காத்திருக்க வேண்டும். இன்று போல தொழில் நுட்பம் வளராத காலமது. அத்துடன் சாமானியர்கள் புகைப்படம் எடுக்க வேண்டும் என்றால் பேருந்தைப் பிடித்து நகரத்துக்குச் செல்ல வேண்டும். அவர்கள் தமது திருமணத்தை படத்தினூடாகப் பதிவிட வேண்டும் என்றால் திருமணக் கோலத்தில் மோட்டார் கார் ஒன்றைப் பிடித்து நகரத்திலுள்ள ஸ்ரூடியோவுக்குச் செல்ல வேண்டும். அதுவே அப்போதைய நடைமுறை. அதனை மீள எண்ணிப் பார்க்க நண்பர் பிரபாகரின் கீழுள்ள பதிவு எனக்கு உதவியிருக்கிறது.

நண்பர் பிரபாகர் வட மாணிக்கம் தன் முகநூல் பக்கத்தில் இது போன்றதொரு பதிவினையிட்டு எனது ஆதங்கத்தை அதிகரித்திருக்கிறார். இதோ அப் பதிவு உங்களுக்காக...

1960களில் எனக்கு ஒரு வயதாக இருக்கும்போது எடுக்கப்பட்ட குடும்பப் புகைப்படம் ஒன்று எங்கள் வீட்டில் இருந்தது. ஒன்று என்றால் ஒன்றேதான். எங்கள் குடும்பம் என்பது சிறிய குடும்பம்தான். நான்கு சகோதரிகளுடன் கடைசியாக நான். மொத்தம் 7 பேர். ஆம். என் சிறிய தந்தையாருக்கு எட்டு குழந்தைகள் உட்பட 10 பேர். என் பெற்றோர்கள் இருவரும் ஒரு ஈராசிரியர் பள்ளியில் பணியாற்றிக்கொண்டிருந்தார்கள். கமுதிக்கு அருகில் உள்ள நெருஞ்சிப்பட்டி என்றொரு சிற்றூர். அந்த ஊருக்கு அப்போது மின்சாரம் வந்திருக்கவில்லை. பேருந்து பிடிக்கச் சில கிலோமீற்றர்கள் நடக்க வேண்டும். சில மணிநேரங்களுக்கு ஒரு முறை பேருந்து வரும். கூட்டம் அதிகமாக இருந்தால் நிற்காமலேயே போய்விடும். இத்தனை விபரங்கள் எதற்காகத் தருகிறேன் என்றால் அந்த புகைப்படம் எவ்வளவு பெறுமதியானது என்பதைச் சொல்லத்தான். அதாவது 15 வயதிருக்கும் மூத்த சகோதரியிலிருந்து ஒரு வயது குழந்தையான என் வரைக்கும் அனைவரையும் கூட்டிச்சேர்த்து, நடந்து பேருந்து பிடித்து கமுதிக்கு (1960களில் கமுதியில் ஸ்ரூடியோக்கள் இருந்ததா என்று தெரியவில்லை) அல்லது அருப்புக்கோட்டைக்குச் சென்று (3 மணிநேர பயணமாக இருந்திருக்கும் அப்போது) ஒரு சம்பிரதாயமான ஸ்ரூடியோவில் அந்த புகைப் படத்தை எடுத்திருக்கவேண்டும். பெற்றோர்கள் அமர்ந்திருக்க, சகோதரிகள் நிற்கிறார்கள். அம்மாவின் கைகளில் நான் சமர்த்தாக இருக்கிறேன். ஓரத்தில் ஒரு மர ஸ்டாண்டில் மலர்ச் சாடி அருகே எனக்கு முந்தைய சகோதரி ஒரு மரக்குதிரையில் அமர்ந்திருக்கிறார். குதிரை அவர் மேல் அமர்ந்திருப்பது போன்ற அசௌகரியமான முகபாவத்துடன். 40 ஆண்டுகளுக்கும் மேலாக அந்த புகைப்படம் வீட்டுச் சுவரில் தொங்கியபடியிருந்திருக்கிறது.

1990 களில் இருக்கும், அம்மாவைப் பார்ப்பதற்காக ஊருக்குச் சென்றிருந்த ஒரு நாள் அந்தப் புகைப்படத்தை அது இருந்த இடத்தில் காணவில்லை. அம்மா அந்தப் புகைப்படம் எங்கே? என்று கேட்டபோது, கீழே விழுந்து கண்ணாடி உடைந்து விட்டது. மேலே பரணில் போட்டிருக்கிறேன் என்றார்கள். அவசரமாக மேலே ஏறித் தேடி எடுத்தபோது அது முற்றிலுமாகச் செல்லரித்து வெறும் அட்டை மட்டுமே எஞ்சியிருந்தது. அந்தப் புகைப்படத்தை பாதுகாத்திருக்கக்கூடிய எத்தனையோ வாய்ப்புகளை தவறவிட்டிருந்தேன். இப்போது பார்க்கையில் என் மனைவியை, மகளை, நண்பர்களை, மாணவர்களை, இயற்கையை, பயணங்களைப் பதிவு செய்த நூற்றுக்கணக்கான புகைப்படங்கள் ஆல்பமாகவும், கணினியிலும் கொட்டிக்கிடக்கின்றன. எல்லாவற்றுக்கும் மேல் என் மகளின் செல்ல நாய் நூற்றுக்கணக்கான படங்களில் இருக்கிறது. ஆனால் எனக்கு விலைமதிப்பான அந்த படம் மட்டும் என்னிடம் இல்லை. என்ன செய்வது? இது புகைப்படங்களின் யுகமல்லவா. இன்று உலக புகைப்பட தினமாமே!

# இந்தவார ராசிபலன் 21.08.2022 - 30.08.2022

நல்ல நேரம்: 7.30 - 9.00 ராகு காலம் : 04.30 - 06.00 திதி : தசமி

ஓகஸ்ட் 21 ஞாயிற்றுக்கிழமை
சுபகிருது வருடம் - ஆவணி 05

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

தொழில் சம்பந்தமாக வெளியூர் பயணம் மேற்கொள்வீர்கள். செலவுகள் அதிகரித்தாலும் அதற்கேற்ற வருவாய் உண்டாகும். உங்கள் மனம் விரும்பிய வகையில் செயல்படுவீர்கள். மனதிற்கினிய சம்பவங்கள் நடந்தேறும். வெளித்தொடர்புகள் ஆதாயம் தரும். யோசிக்காமல் செய்யும் வேலைகளில் நெருக்கடி உண்டாகும். வார்த்தைகளில் கவனம் தேவை. தவறான எண்ணங்களால் தடுமாற்றம் அடைவீர்கள்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

அலைச்சல் செலவுகள் என்றிருந்தாலும் அதன்பின் உங்கள் எண்ணங்கள் நிறைவேறும். துணிச்சலுடன் செயல்பட்டு நீங்கள் ஈடுபட்ட முயற்சியில் வெற்றி காண்பீர்கள். உங்கள் செயல்களில் இழுபறி, நெருக்கடி ஏற்பட்டாலும் உங்கள் புத்திசாலித்தனத்தால் எல்லாவற்றையும் சரி செய்வீர்கள். நீண்ட நாள் முயற்சிகள் நிறைவேறும். பகைவர்களின் தொல்லைகள் விலகும் உங்கள் முயற்சிகள் ஜெயமாகும். பண வரவில் இருந்த தடைகள் விலகும்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

செலவுகள் அதிகரிக்கும். முயற்சிகளில் கடினமான நிலை உண்டாகும். அதன்பின் எதிர்பார்த்தவற்றில் நன்மைகள் உண்டாகும். முதலீடுகளில் இருந்து வரவு காண்பீர்கள். அந்நியர்கள் வழியே ஆதாயநிலை உருவாகும். குடும்பத்தினர் உங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள். நெருக்கடிகளில் இருந்து மீளுவீர்கள். செலவுகள் அதிகரித்தாலும் திடீர் வரவுகளால் சமாளிப்பீர்கள்.குடும்பத்திற்காக செலவுகளை சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் உங்கள் நிலை உயரும்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

உங்கள் முயற்சிகளில் நீங்கள் எதிர்பார்த்த நன்மைகளை அடைவீர்கள். வருமானத்தில் தடை உண்டாகும். செலவுகள் அதிகரிக்கும். உங்கள் செயல்பாடுகள் வெற்றியாகும். பிள்ளைகளின் கல்வி, திருமணம் குறித்த முயற்சிகளில் ஈடுபடுவீர்கள்.நண்பர்களுடன் இருந்த கருத்து வேறுபாடுகள் விலகும். வரவும் செலவும் போட்டி போடும். நீங்கள் நினைத்ததை அடைவீர்கள்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

எதிர்பார்த்த தகவல் வந்து சேரும். நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த முயற்சிகள் இந்த வாரம் விறு விறுப்பாக நடந்தேறும். பண வரவு அதிகரிக்கும். உங்கள் முயற்சிகளில் ஆதாயம் காண்பீர்கள். அதன்பின் எதிர்பாராத செலவுகளை சந்திப்பீர்கள். அரசு வழியில் ஆதாயமான நிலை ஏற்படும். ஒரு சிலருக்கு உத்தியோகத்தில் உயர்வு, செல்வாக்கு அதிகரிக்கும்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

நெருக்கடிகள் விலகும். செலவுக்கேற்ற வரவு வந்து கொண்டிருக்கும். வியாபாரத்தில் ஏற்பட்ட சங்கடங்கள் விலகும். எதிர்பாராத வரவுகள் வந்து சேரும். பொருளாதார நிலை உயரும். உறவினர்களின் ஆதரவுடன் உங்கள் முயற்சிகள் வெற்றியாகும். விருந்தினர்களால் மகிழ்ச்சி அதிகரிக்கும். நீங்கள் எதிர்பார்த்தவற்றில் லாபம் காண்பீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். நன்மைகள் உண்டாகும்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

செயல்களில் கவனம் தேவை. முயற்சிகள் தள்ளிப்போகும். அதன்பின் நிலைமை சீராகும். உங்கள் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். சில சங்கடமான சம்பவங்களை சந்திப்பீர்கள். உங்கள் மனம்போன போக்கில் செல்வீர்கள். கட்டுப்பாடுகளால் உங்களை பத்திரப்படுத்திக் கொள்ளுங்கள். அரசு வழியிலான முயற்சிகள் நிறைவேறும். கவனமாகச் செயற்பட்டாலும் தவறுகள் உண்டாகும்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

நினைத்ததை அடைவீர்கள். உங்கள் செயல்களில் சிரமங்கள் உண்டாகும். தெளிவான முடிவுகளை மேற்கொள்ள முடியாமல் போகும். எதிரிகளால் உண்டான தொல்லைகள் விலகும். தம்பதிகளுக்கிடையே கருத்து மோதல் உண்டாகும். கவனமுடன் செயல்படுவதும் நிதானமாக இருப்பதும் நன்மையாகும். செல்வாக்கு உயரும். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

உங்கள் எண்ணங்கள் நிறைவேறும். முயற்சிகள் வெற்றியாகும் குடும்பத்தில் இருந்த நெருக்கடிகள் விலகும். பிரச்சனைகளில் இருந்து வெளியில் வருவீர்கள். செயல்களில் கவனம் தேவை. உங்கள் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நேர்மையான வழியில் வரவுகள் உண்டாகும். அரசு வழி முயற்சிகளிலும் பலன்கள் உண்டாகும். புதிய நட்பினால் சங்கடங்களை விட்டு வெளியில் வருவீர்கள்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

நண்பர்கள் உறுதுணையாக இருப்பார்கள். பண வருவாய்க்குரிய முயற்சிகள் வெற்றியாகும். பூர்வீக சொத்துகளில் இருந்து லாபம் காண்பீர்கள். உங்கள் செயல்கள் இழுபறியாகவே இருக்கும். திட்டமிட்டு செயல்படுவீர்கள். தொழிலை விரிவு செய்ய முயற்சிப்பீர்கள். வாழ்க்கைத் துணையால் நன்மைகளை அடைவீர்கள். துணிச்சலுடன் செயல்பட்டு நினைத்ததை சாதிப்பீர்கள்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]


முயற்சிகளில் சில தடைகளை சந்திப்பீர்கள். அரசு வழியில் நெருக்கடிகள் உண்டாகும். குடும்ப நலனில் அக்கறை செலுத்துவீர்கள். உங்களின் நீண்டநாள் எண்ணம் ஒன்று நிறைவேறும். குடும்பத்தில் இருந்த பிரச்சனைகள் தீரும். தொழில், உத்தியோகம் சிறப்படையும். வரவுகள் அதிகரித்து மகிழ்வீர்கள். உடல்நிலையில் பாதிப்புகள் தோன்றி சீராகும். குடும்பம், சகோதரர்கள் வகையில் நன்மைகள் தோன்றும்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

உற்சாகத்துடன் செயல்பட்டு நினைத்ததை சாதிப்பீர்கள். அதன்பின் உங்கள் முயற்சிகள் நடந்தேறும் என்றாலும் அதில் சில சங்கடங்கள் உண்டாகும். அரசு வகையிலான செயல்கள் ஆதாயமாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். கொடுத்த வாக்கை நிறைவேற்றுவீர்கள். உங்கள் செயலில் வேகம் அதிகரிக்கும். வீடு மனை வாங்கும் சிந்தனை மேலோங்கும்.ஆரோக்கியத்தில் சங்கடம் உண்டாகலாம் என்பதால் உடல் நலனில் கவனம் செலுத்துங்கள்.

# அம்பாந்தோட்டையில் மையங்கொள்ளும் அபாயம்!





சென்னை மடல்
-பகவான் சிங்-

என் இனிய 'ஈழநாடு' நண்பர்களுக்கு மனமார்ந்த வாழ்த்துக்கள். நான் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறேன். காரணம்: இரண்டு நாட்களுக்கு முன் சென்னையில் நடந்த ஒரு சந்திப்பு. கொழும்பில் உயர்தட்டு மக்கள் வசிக்கும் அட்டகாசமான அடுக்கு மாடிக் குடியிருப்பைச் சேர்ந்த பெண்மணி ஒருவர் சொன்ன பொன்னான வார்த்தைகள். அத்தியாவசிய பொருள்களின் பற்றாக் றை குறைந்து வருவதாகவும், தான் சென்னைக்கு வரும் முன் காரில் 20 லீட்டர் பெட்ரோல் கஷ்டமில்லாமல் போடமுடிந்ததாகவும் அவர் சொன்ன தகவல் கடந்த சில மாதங்கள் செவியைத் துளைத்த நெருக்கடி கோஷங்களை மறக்கச் செய்தது.

ஆனால், ஓர் இரண்டு நிமிடங்களுக்கு மட்டுமே.

தனது மகிழ்ச்சியைக் கட்டுப்படுத்தத் திணறிய அந்தப் பெண்மணி தொடர்ந்து கொழும்பு நிலவரம் குறித்து விவரித்ததைக் கேட்ட பிறகு, அவர் செய்திகளைப் பார்ப்பதில்லை என்றும் இலங்கையில் தன்னைச் சுற்றி நடப்பதைக் குறித்தே தெரிந்துகொள்ளாதவர் என்றும் உணர்ந்தேன். அப்படியிருக்க, இலங்கைக்கு வெளியே நடக்கும் விவகாரங்களை அவர் அறிந்திருப்பதெங்ஙனம்? தன் சமையலறையிலும் அடுத்த வீட்டுக்காரர்களை விடச் சுத்தமாகத் தன் வீடு தெரியவேண்டும் என்பதிலும் கவனம் செலுத்துவதுடன், சினிமா நடிகைகளைப் பற்றிய கிசுகிசுக்களைப் பகிர்வதற்குமே நேரம் போதவில்லையே. Ignorance is bliss என்ற ஆங்கிலச் சொல்லடைக்கேற்ப, எதுவுமே தெரிந்து கொள்ளாமல் இருப்பதால், இவர் தான் மிகவும் மகிழ்ச்சியான பெண்மணியாக இருக்க வேண்டும். ஆனால், தன்னைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதை அறியாமலும், அறிந்திருந்தாலும் அது குறித்துக் கவலைகொள்ளாமலும் இருப்பவர்கள் நம்மிடையே பலர் என்பதும் உண்மை தானே?

அந்தத் தோழியிடம், சீன உளவுக் கப்பல் அம்பாந்தோட்டைக்கு வந்திருப்பது குறித்து நான் கேட்ட போது, சற்று தயக்கத்துடன் அது குறித்துத் தனக்கு எதுவும் தெரியாது என்று ஒப்புக்கொண்டார். இப்பொழுது என் விரல்கள் அவசரமாக முதல் பத்திக்குச் செல்ல எண்ணுகிறது. பற்றாக்குறைகள் குறைவதாகவும் பொருளாதாரச் சிக்கல் தீரத் தொடங்குவதாகவும் வாழ்த்துச் சொல்வதில் துரிதம் காட்டிவிட்டேனோ என்று தோன்றுகிறது. பற்றாக்குறைகளைப் போக்க, நீண்ட காலத் தீவிர நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை என்றும் மேம்போக்காக, கடன் தொகையில் எரிபொருள் இறக்குமதி செய்யப்படுகிறது என்பதும் சற்றே கண் திறந்து பார்த்தால் புலப்படும்.

## உலக நாடுகளின் கடனில் 37 வீதம் சீனாவுக்கான கடன்

சர்வதேச செலாவணி நிதியம், உதவித் தொகை வழங்கல் குறித்த பேச்சு வார்த்தைகளைத் தொடர கொழும்பு வரவிருப்பதாக நேற்று( சனிக்கிழமை) ஒரு செய்தியைப் படித்தேன். அந்த வருகையை ஓர் ஆறுதலாக எடுத்துக்கொள்வோமா?

மற்றொரு புறம், எதிர்காலத்தில் இன்னும் பல அச்சுறுத்தல்கள் இருப்பதையும் பார்க்கமுடிகிறது. தற்காலிகமாகத் தாய்லாந்தில் சரண் புகுந்திருக்கும் கோட்டாபய ராஜபக்ஷ மீண்டும் இலங்கை திரும்ப, அதிபர் ரணில் விக்ரமசிங்க ஏற்பாடுகள் செய்திருப்பதாகவும் அடுத்த சில நாட்களில் அவர் கொழும்பு வந்து சேர்ந்து மற்ற ராஜபக்ஷக்களுடன் இணைவார் என்றும் அறிகிறேன். காலிமுக போராட்டக்காரர்கள் மனம் மாறிப் போராட்டத்தைக் கைவிடவில்லை என்பதும், கைதுக்கும் காவல் துறையின் அராஜகத்திற்கும் அஞ்சியே ஒடுங்கியிருக்கிறார்கள் என்பதும்கூடத் தெளிவாகிறது.ஆனால், இந்த நாட்டின் மிகப்பெரிய அபாயம் தென் துறைமுகமான அம்பாந்தோட்டையில் மையம் கொண்டிருக்கிறது.

எனது 'ஈழநாடு' கட்டுரைகளில் நான் பல முறை கூறிவந்ததையே மீண்டும் வலியுறுத்துகிறேன். அண்மைத் தகவல்களையும் உலக அளவில் நடக்கும் நிகழ்வுகளையும் அதனால் இந்துமாக்கடல் பகுதியில் உள்ள சிறிய தீவில் வாழும் நமது வாழ்க்கை எப்படிப் பாதிக்கப்படலாம் என்பதையும் அறிய, மிகவும் மலிவாகிவிட்ட தகவல் தொழில்நுட்பத்தின் துணையைக் கோர வேண்டும் என்பது தான் அது.

## இலங்கையில் சீனாவின் அரசியல் முதலீடு

உதாரணமாக, ஒகஸ்ட் 17, புதனன்று நான் ஏ என் ஐ நிறுவனத்தின் செய்திக் குறிப்பொன்றைப் படித்தேன். அதில், சீனா, பாகிஸ்தானிலும் ஆப்கானிஸ்தானிலும் இராணுவ முகாம்களை அமைத்து, அப்பிராந்தியத்தில் தனது ஆதிக்கத்தை வலுப்படுத்தப்போவதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. பாகிஸ்தானுக்குப் பெருமள கடன் கொடுத்துள்ளதுடன் மட்டுமல்லாமல், சீனா அங்கு 60 பில்லியன் அமெரிக்க டொலருக்கும் (இலங்கை ரூபாயில் 21,600 பில்லியனுக்கும்)அதிகமான மதிப்பில் உட்கட்டமைப்புத் திட்டங்களிலும் முதலீடு செய்துள்ளது. இதனால், பாகிஸ்தான் தனது இருப்புக்கே சீனாவை எந்த அளவு சார்ந்திருக்கிறது என்பது தெளி வாகிறது.

தனது பெல்ட் அன்ட் ரோட் இனிஷியேட்டிவ் மூலம், குறிப்பாக இந்திய எல்லைப்பகுதிகளில் சாலைகளும் பாலங்களும் அமைத்ததுடன் நில்லாமல், பாகிஸ்தானின் இராணுவம் மற்றும் இராஜரீகத் துறைகளிலும் சீனா வலுவான ஆதிக்கத்தைச் செலுத்தி வருகிறது. இப்படி, முக்கிய துறைகளில் பாகிஸ்தானை நெருக்கியுள்ள சீனா, தனது இராணுவ முகாம்களை பாகிஸ்தானில் அமைக்க ஆதரவாக இன்னொரு துருப்புச் சீட்டையும் கையில் எடுத்துள்ளது. பாகிஸ்தானில் பணியாற்றி வரும் சீனர்களைக் குறிவைத்துச் சில தீவிரவாதத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. சென்ற ஆண்டு ஏப்ரல் மாதம் க்வெட்டாவில் நடந்த குண்டு வெடிப்பில் சீனத் தூதர் நாங் ராங் உயிர்தப்பினார்.

சீனாவின் இராணுவ முகாம்களை பிரச்னைகள் நிறைந்த பாகிஸ்தானில் அமைத்து, சீனக் குடியுரிமை பெற்றவர்களையும் சீன முதலீடுகளையும் பாதுகாக்க, அழுத்தம் கொடுத்து இவர், அந்நாட்டுப் பிரதமர் ஷெபாஸ் ஷரீப், அயலுறவுத் துறை அமைச்சர் பிலாவல் புட்டோ மற்றும் இராணுவப் படைத் தளபதி க்வாமர் ஜாவித் பாஜ்வா ஆகியோரைச் சந்தித்துள்ளார் என்பது கவனத்தில் கொள்ளத்தக்கது.

இலங்கைக்கான சீனத் தூதர் க்வி ஜெனாங்க், சென்ற ஆண்டு டிசம்பரில் மேற்கொண்ட சுவாரஸ்யமான யாழ்ப்பாணப் பயணத்தின்போது நடந்து கொண்ட முறையைப் பார்க்கும்போது, பாகிஸ்தானுக்கான தூதரைவிட, இலங்கையில் சீன இராணுவ மையங்களை அமைக்க இவர் அதிகம் ஆர்வம் காட்டுவார் என்பது எதிர்பார்க்கக்கூடியதே. அதன் தொடக்கமே அம்பாந்தோட்டையில் உளவுக் கப்பலை நிறுத்துவது என்று இந்தியா கவலை கொள்வதில் நியாயம் உள்ளது.

இலங்கையின் பல இலாபமீட்டாத திட்டங்களுக்குப் பெரும் தொகையைக் கடனாகக் கொடுத்திருப்பதுடன் நில்லாமல், தனக்கு ஆதரவாக முக்கிய முடிவுகளை அந்நாடு எடுக்கும் வண்ணம், அரசியல் களத்திலும் பெரும் முதலீடுகளைச் செய்துள்ளது சீனா.

உதாரணமாக, யுவான் வாங் 5 நிறுத்தம் தொடர்பாக எடுக்கப்பட்ட முடிவைக் கூறலாம். அரசியல் களத்தில் முதலீடு என்பதன் மூலம் நான் என்ன கூற வருகிறேன் என்பது உங்களுக்குப் புரிந்திருக்கும். தமிழ்த் தலைவர்கள் உட்பட, பெரும்பாலான கட்சிகளின் உயர் மட்ட அரசியல் தலைவர்கள் சீனத் தூதரக அதிகாரிகளுடன் நெருக்கமாகப் பழகுவதைக் குறிப்பிடும் பல செய்திகளைப் பல ஊடகங்களில் பல முறை பார்த்திருக்கிறோம். சீனாவின் பிடி இறுக இறுக, அவர்கள் தங்கள் கட்சிகளையும் கூட்டணிகளையும் இலங்கைப் பாராளுமன்றத்தையும் எப்படி நடத்தினார்கள் என்பதையும் அண்மையில் நாம் பார்த்தோம்.

ஷீ மற்றும் க்வி இவர்களுடன் கை குலுக்குவதில் என்ன தவறு என்றும் மோடி மற்றும் டில்லியுடன் மட்டும்தான் நட்புடன் இருக்க வேண்டுமா என்றும் நீங்கள் கேட்கலாம். இந்தக் கேள்வி எழுவதற்கு முன்னரே இதற்கு நான் பதில் சொல்லி விட்டேன்.

என்னுடைய முந்தைய 'ஈழநாடு' கட்டுரைகளைப் பார்த்தால் தெரியும். சீனா, கடனில் மூழ்கியுள்ள இலங்கையை அடிமையாக்குகிறது என்று குறிப்பிட்டுள்ளேன்.

உங்கள் குழந்தைகளின் எதிர்காலம் கருதியேனும், மேலும் விவரமறிய விரும்பினால், சீனாவின் கடன் வலை குறித்த ஏராளமான ஊடகச் செய்தியறிக்கைகள் இணையத்தில் உங்களுக்காகக் கொட்டிக் கிடக்கின்றன. அதுபோன்ற ஒரு செய்தியை அண்மையில் நான் படித்தேன். ஆபிரிக்காவின் அரசியலில் நுழைய, சீனா கடன் வலை விரிப்பதுடன் மட்டும் அல்லாமல், நேர்மையற்ற அரசியல்வாதிகளுக்கு லஞ்சம் அளித்தும் வழிக்குக் கொண்டுவருவதாக அதில் குறுப்பிடப்பட்டி ருந்தது. உலகின் குறைந்த வருவாய் கொண்ட 74 நாடுகள் மொத்தமாக வாங்கிய 35 பில்லியன் அமெரிக்க டொலர் கடனில் 37 சதவிகிதம்(13.1 பில்லியன் டொலர்) சீனாவின் கடன் மட்டுமே என்று உலக வங்கித் தலைவர் டேவிட் மல்பாஸ் இவ்வாண்டு ஜனவரியில் கூறியதை மேற்கோள் காட்டியது அத்தகைய ஓர் அறிக்கை. இதனால், ஷீ மிகவும் உன்னத தலைவர் என்றோ அவரது சீனப் புத்துணர்ச்சிக் கனவு சிறப்பாகச் செயல்படுகிறது என்றோ பொருளன்று. இவ்வாண்டு இறுதியில் நடைபெறவுள்ள கட்சி மாநாட்டில் அவர் மூன்றாவது முறையாக, ஒருவேளை வாழ்நாள் ஆட்சியாளராகத் தேர்வாவது நிச்சயம் என்று தோன்றுகிறது. ஆனால், உள்நாட்டில் பணவீக்கம், வேலையில்லாத் திண்டாட்டம், கோவிட் ஊரடங்குகள் போன்ற பிரச்னைகளும் அவருக்குப் பெரும் சவாலாக உள்ளன. ஷீயின் சீன விரிவாக்கக் கொள்கையை உலகின் பெரும்பாலான ஜனநாயக நாடுகள், இந்தியா உட்பட, கை கோர்த்துக் கடுமையாக எதிர்த்து வருகின்றன.

நான் விடைபெறும் முன், என் கொழும்புத் தோழியுடனான எனது சென்னைச் சந்திப்பில் அவர் தெரிவித்த இன்னொரு விஷயத்தையும் குறிப்பிட விரும்புகிறேன்.

தனது விரல்களுக்குப் பூசும் சாயத்தைப் பற்றிக் கூறுவதைப் போன்ற ஓர் இயல்பான தன்மையுடன், அவர் சொன்ன ஒரு விஷயம் - தான் வசிக்கும் பல மாடிக் கட்டடமான குடியிருப்பில், 90 சதவிகிதம் பேர் சீனக் குடும்பங்கள்தாம் என்பது. நாட்டின் தலைவர்களே சீனாவின் ஆணைக்குக் கட்டுப்பட்டுச் செயல்பட அஞ்சாதபோது, என் கொழும்புத் தோழி, தன் குடியிருப்பின் நிர்வாகக் குழு தேர்தலில் அடுத்த முறை லியுவும் யிங்கும் பதவியேற்பது குறித்து ஏன்தான் கவலைப்படப்போகிறார்?

மீண்டும் சந்திப்போம். வணக்கம்.

# முன்னாள் ஜனாதிபதிகள்

## பாராளுமன்ற உறுப்பினர்களாகும் இயல்பு மீறிய அரசியல் கலாசாரம்



♦ வீரகத்தி தனபாலசிங்கம்

கடந்த மாதம் மக்கள் கிளர்ச்சியை அடுத்து நாட்டை விட்டு தப்பியோடி மாலைதீவு, சிங்கப்பூர், தாய்லாந்து என்று நாடுவிட்டு நாடு மாறி "வசதியான அஞ்ஞாத வாசம்" செய்யும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச இவ்வாரம் நாடு திரும்பவிருப்பதாக கூறப்படுகிறது. அவருக்கு பாதுகாப்பை உறுதிப்படுத்தி நாட்டுக்கு வருவதற்கான ஏற்பாடுகளை செய்துதருமாறு சிறிலங்கா பொதுஜன பெரமுன ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

அதேவேளை, அவர் பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்படவிருப்பதாகவும் அவரது பாதுகாப்புக்காகவும் வெளிநாட்டு பயணங்களை மேற்கொள்வதற்கு வசதியாக இராஜதந்திர அந்தஸ்தை பெறுவதற்காகவுமே இந்த ஏற்பாடு என்றும் செய்திகள் வெளியாகியிருக்கின்றன. நாட்டை சுபீட்சத்துக்கு வழிநடத்தக்கூடிய தொலைநோக்குடைய தலைவராக கோட்டாபயவை மூன்று வருடங்களுக்கு முன்னர் மக்கள் முன் காட்சிப்படுத்திய "வியத்மக" அமைப்பைச் சேர்ந்த சீதா அரம்பேபொல என்ற பொதுஜன பெரமுனவின் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவி விலகி அவர் பாராளுமன்றம் வருவதற்கு வசதிசெய்யவிருப்பதாகவும் அந்த செய்திகள் கூறுகின்றன.

நாட்டை விட்டு வெளியேறிய பின்னர் தஞ்சமடைவதற்கு நாடொன்றை தேடும் முயற்சிகள் பயனளிக்காமல் போன நிலையிலேயே முன்னாள் ஜனாதிபதி நாடு திரும்ப உத்தேசித்திருக்கிறார். அவரது சகோதரர்கள் அதிகாரப் பதவிகளில் இருந்து இறங்கினாலும் தொடர்ந்தும் இலங்கையில் இருப்பது மாத்திரமல்ல, அரசியலில் மீண்டெழும் நம்பிக்கையையும் மனதில் இன்னமும் கொண்டிருக்கும் நிலையில் நாடு திரும்புவதில் தனக்கு எந்த பாதிப்பும் வராது என்று கோதாபய துணிச்சலை வரவழைத்துக் கொண்டிருக்கிறார்போலும். சிங்கப்பூரும் தாய்லாந்தும் அவரை விருந்தோம்புவதில் அவற்றுக்கு இருக்கக்கூடிய அசௌகரியத்தை சில நிபந்தனைகள் மூலமாக வெளிப்படுத்தியிருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.

**ஜனாதிபதியை "அதிமேதகு" என்று அழைக்கத்தேவையில்லை என்ற ரணிலின் அறிவிப்பு உண்மையில் பொருத்தமானதே**

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்காக கோட்டாபய தனது அமெரிக்க குடியுரிமையை மூன்று வருடங்களுக்கு முன்னர் துறந்த போதிலும், அவரது மனைவி தொடர்ந்தும் அமெரிக்க குடியுரிமையைக் கொண்டவராக இருக்கிறார். ஒரேயொரு மகனும் அமெரிக்காவிலேயே வசிக்கிறார். அதனால் மீண்டும் அந்த நாட்டுக்கு சென்று குடும்பத்தவர்களுடன் வாழ்வதற்கு வசதியாக "கிறீன் கார்ட்" டை பெறுவதற்கான முயற்சிகளில் கோதாபய இறங்கியிருப்பதாக கூறப்படும் நிலையில் இலங்கையில் தங்கியிருக்கப்போகும் நாட்களில் அவரை பாராளுமன்ற உறுப்பினராக்கும் ஏற்பாடுகள் பற்றிய செய்திகள் வந்திருக்கின்றன. நாட்டை வங்குரோத்து நிலைக்கு கொண்டுவந்த ஒரு ஜனாதிபதி எந்தவித அசௌகரியமும் இன்றி இருப்பதற்கான ஏற்பாடுகளை உறுதி செய்வதில் அரசியல் வர்க்கம் எந்தளவுக்கு அக்கறை காட்டுகிறது என்று பாருங்கள்.



முன்னாள் ஜனாதிபதிகள் பாராளுமன்ற உறுப்பினர்களாகும் இயல்பு மீறிய ஒரு அரசியல் கலாசாரம் அண்மைக்காலமாக உரு வாக்கப்பட்டு வருகிறது. அதன் முன்னோடி



ஆட்சிமுறையில் பல தவறான போக்குகளுக்கு வழிகாட்டியவர் மகிந்த ராஜபக்சவே. 2015 ஜனவரி ஜனாதிபதி தேர்தலில் தோல்வியடைந்த பிறகு அவர் அதே வருடம் ஆகஸ்டில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் போட்டியிட்டு பாராளுமன்றத்து வந்தார். அவரையடுத்து மீண்டும் பாராளுமன்ற உறுப்பினராக வந்த அடுத்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன. நாட்டின் அதியுயர் பதவியான நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியை வகித்த இவ்விருவரும் சாதாரண பாராளுமன்ற உறுப்பினர்களாக இருப்பதில் எந்தவிதமான அசௌகரியத்தையும் கொண்டிருக்கவில்லை.

இவர்களுக்கு முன்னர் ஜனாதிபதியாக இருந்தவர்கள் எவரும் இவ்வாறு செய்யவில்லை. முதல் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியான ஜே.ஆர்.ஜெயவர்தன பத்து வருடங்களுக்கும் அதிகமான காலம் பதவியில் இருந்துவிட்டு பிறகு 1988 அக்டோபரில் அரசியலில் இருந்து ஓய்வுபெற்றார். எட்டு வருடங்கள் கழித்து 1996 நவம்பர் 1தனது 90 வது வயதில் அவர் காலமானார்.

அவரையடுத்து 1988 டிசம்பர் ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்று பதவிக்கு வந்த ரணசிங்க பிரேமதாச அவரது முதலாவது பதவிக்காலத்தில் 1993 மே தினத்தன்று கொழும்பில் தற்கொலைக்குண்டு தாக்குதலில் கொல்லப்பட்டார். அதையடுத்து அன்று பிரதமராக இருந்த டி.பி.விஜேதுங்க ஜனாதிபதியாக பதவியேற்றார். 1994 நவம்பர் வரை பதவியில் இருந்துவிட்டு அவரும் அரசியலில் இருந்து ஓய்வுபெற்றுக்கொண்டார். 14 வருடங்கள் கழித்து 2008 செப்டெம்பரில் 94 வது வயதில் அவர் தனது சொந்த ஊரான கண்டியில் காலமானார்.

ஜெயவர்தனவும் விஜேதுங்கவும் தங்களது பதவிகளில் இருந்து இறங்கிய பிறகு அரசியலில் ஈடுபடவேயில்லை.

விஜேதுங்கவுக்கு பிறகு 11 வருடங்கள் ஜனாதிபதியாக ஆட்சியதிகாரத்தில் இருந்த திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க 2005 நவம்பரில் பதவியில் இருந்து இறங்கினார். ஆனால், அவர் முன்னைய இரு ஜனாதிபதிகளையும் போன்று அரசியலில் இருந்து விலகியிருக்கவில்லை. மகிந்த ராஜபக்சவுக்கு எதிராக இரு ஜனாதிபதி தேர்தல்களில் பொதுவேட்பாளரை நிறுத்தும் எதிரணியின் முயற்சிகளில் திருமதி குமாரதுங்க முன்னணியில் நின்று செயற்பட்டார். ஆனால், பாராளுமன்றத்துக்கு மீண்டும் வருவதற்கு அவர் ஒருபோதும் முயற்சிக்கவில்லை. அவ்வாறு பாராளுமன்றம் வருவதற்கு அவருக்கு ஆசையிருந்திருந்தாலும்கூட, அவருக்கு பிறகு சிறிலங்கா சுதந்திர கட்சியின் தலைமைத்துவத்தை தம்வசமாக்கிக் கொண்ட ராஜபக்சாக்கள் அதற்கு ஒருபோதும் இடமளித்திருக்கமாட்டார்கள்.

அடுத்து வந்த இரு ஜனாதிபதிகளும் தற்போது பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கிறார்கள். இப்போது கோட்டாபயவும் பாராளுமன்றத்துக்கு வரக்கூடிய சாத்தியம் குறித்து பேசப்படுகிறது. அவரும் பாராளுமன்றம் வருவாரேயானால் பதவியில் இருந்து விலகிய பிறகு பாராளுமன்றத்துக்கு வருகின்ற மூன்றாவது இலங்கை ஜனாதிபதியாக விளங்குவார்.



உண்மையில், நாட்டின் ஆதியுயர் பதவியில் இருந்துவிட்டு சாதாரண பாராளுமன்ற உறுப்பினராக வருவதென்பது முன்னைய பதவியின் "மேன்மையை" கொச்சைப்படுத்துவது போன்றதாகும்.

(09 ஆம் பக்கம் பார்க்க...)

ஈழநாடு



# கப்பலல்ல, கடன் வலை!

## துறைமுகத்தை சீனாவுக்கு குத்தகைக்கு விட்டதன் பின்விளைவை அனுபவிக்கிறது இலங்கை!!

இலங்கையின் அம்பாந்தோட்டை துறைமுகத்தை வந்தடைந்திருக்கிறது சீனாவின் உளவுக் கப்பலான "யுவான் வாங்-5". "சர்வதேச விதிமுறைகளுக்குட்பட்டே தங்கள் நாட்டு கப்பல் இலங்கைக்கு வந்துள்ளதாகவும், ஆராய்ச்சி நடவடிக்கையில் ஈடுபடும் இக்கப்பலால் எந்த நாட்டின் பாதுகாப்புக்கும் பாதிப்பு ஏற்படாது" எனவும் சீன வெளியுறவுத்துறை விளக்கம் அளித்துள்ளது.



இந்தியப் பெருங்கடலில் அந்நிய ராணுவ கப்பல்கள் பயணிப்பதை இந்தியா தொடர்ந்து எதிர்த்து வருகிறது. அப்படியிருக்கும்போது, முழுக்க முழுக்க வர்த்தகத் துறைமுகமான அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு "யுவான் வாங்-5" கப்பல் வந்திருப்பதை சந்தேகக் கண்கொண்டே பார்க்க வேண்டியிருக்கிறது.

பொதுவாக ஆராய்ச்சிக் கப்பல் எனக் கூறப்பட்டாலும் யுவான் வாங் ஓர் உளவுக் கப்பல்தான். கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளின் விவரங்கள், கடற்படைத் தளங்களின் விவரங்கள் உள்ளிட்டவற்றைக்கூட இக்கப்பலால் பெற முடியும் என அமெரிக்கா தெரிவித்துள்ளது. சீனாவின் தேசிய விண்வெளி ஆய்வு மையத்தால் அக்கப்பல் நிர்வகிக்கப்பட்டு வந்தாலும், ராணுவ ரீதியிலான பல்வேறு பயன்பாடுகளை அக்கப்பல் கொண்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தக் கப்பல் கடந்த ஆகஸ்ட் 11-ஆம் திகதியே அம்பாந்தோட்டை துறைமுகத்தை வந்தடைவதாக இருந்தது. ஆனால், இந்தியாவும் அமெரிக்காவும் ஆட்சேபித்ததையடுத்து, உளவுக் கப்பலின் வருகையை ஒத்திவைக்குமாறு சீனாவை இலங்கை அரசு கேட்டுக் கொண்டது.

சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினருடனும் மேற்கொள்ளப்பட்ட விரிவான பேச்சுவார்த்தையில் உடன்பாடு எட்டப்பட்டதையடுத்து சீன உளவுக் கப்பலின் வருகைக்கு அனுமதி அளிக்கப்பட்டதாக இலங்கை தெரிவித்துள்ளது. இந்த விவகாரத்தில் இலங்கைக்கு இந்தியா அழுத்தம் கொடுத்ததாக வெளியான தகவலை இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் மறுத்துள்ளது. இதிலிருந்து இந்தியாவின் ஒப்புதலை இலங்கை பெற்றிருக்கக் கூடும் என்று சந்தேகிக்க இடம் இருக்கிறது.

சீன உளவுக் கப்பல் விவகாரத்தை இலங்கை அரசு முறையின்றி கையாண்டதாக அந்நாட்டு எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியிருப்பதும் குறிப்பிடத்தக்கது. கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள இலங்கைக்கு இந்த நிலை ஏற்பட, சீனாவிடம் வாங்கிய கடன்தான் காரணம். இலங்கையின் மொத்த கடன் மதிப்பில் சீனாவின் பங்கு மட்டும் சுமார் 20 வீதம் எனக் கூறப்படுகிறது. முக்கியத்துவம் வாய்ந்த அம்பாந்தோட்டை துறைமுகக் கட்டுமானப் பணிக்காக வாங்கிய கடன் தொகையை திருப்பிச் செலுத்த முடியாமல் அதன் 70வீத பங்கை "சீனா மெர்ச்சன்ட்ஸ் போர்ட்" நிறுவனத்துக்கு அளித்துள்ளது இலங்கை. மேலும், அத்துறைமுகத்தை 99 ஆண்டுகால குத்தகைக்கும் சீன நிறுவனத்துக்கு இலங்கை வழங்கியுள்ளது.

2017-ஆம் ஆண்டு அம்பாந்தோட்டை துறைமுகம் சீன நிறுவனத்துக்கு அளிக்கப்பட்டது. உள்நாட்டில் அப்போது எழுந்த கடும் எதிர்ப்பை ஆட்சியாளர்கள் பொருட்படுத்தவில்லை. அம்பாந்தோட்டை துறைமுகத்தில் சீனாவின் உளவுக் கப்பல் ராணுவ ரீதியிலான நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதிக்கப்பட மாட்டாது என இலங்கை அதிபர் ரணில் விக்ரமசிங்க உறுதியளித்திருந்தாலும், முழுக்க முழுக்க சீன நிறுவனத்தின் கட்டுப்பாட்டில் உள்ள அம்பாந்தோட்டை துறைமுகத்தில் இலங்கை அரசின் செல்வாக்கு எந்த அளவுக்கு இருக்கும் என்பது தெரியவில்லை. எரிபொருள் நிரப்புதல் உள்ளிட்ட பணிகளுக்காக வரும் 22-ஆம் தேதி வரை இக்கப்பல் அம்பாந்தோட்டை துறைமுகத்தில் நிறுத்தப்பட்டிருக்கும் எனவும், எந்தவிதமான அறிவியல் ஆய்வையும் நடத்தக் கூடாது என நிபந்தனை விதிக்கப்பட்டிருப்பதாகவும் இலங்கை தரப்பில் கூறப் படுகிறது.

> சீனாவின் உளவுக் கப்பல் வருகையால் இந்தியாவுக்கு நேரடியாக எந்த ஆபத்தும் நேர்ந்து விடப் போவதில்லை. ஆனால், இலங்கையின் இப்போதைய இக்கட்டான பொருளாதார சூழ்நிலையில் தனக்கு தர்மசங்கடத்தை ஏற்படுத்தும் வகையிலான சீனாவின் உளவுக் கப்பலை அனுமதித்திருக்கக் கூடாது.

ஆனால், இந்தக் கப்பலின் வருகை மூலம் சீனா - இலங்கை இடையேயான விண்வெளி அறிவியல், தொழில்நுட்பத் துறைகள் மேம்படும் என கப்பலின் கேப்டன் கூறியதாக அம்பாந்தோட்டை துறைமுக நிர்வாகம் தெரிவித்துள்ளது. அதிலிருந்து சீனாவின் நோக்கமும் இலங்கையின் தர்மசங்கடமும் வெளிப்படுகின்றன.

இலங்கையில் கடந்த பிப்ரவரியில் பொருளாதார நெருக்கடி தலையெடுத்தபோது, முதல் நாடாக அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கான உதவிகளை வழங்கியது இந்தியாதான். கொரோனா, அந்நிய செலாவணி பற்றாக்குறை போன்றவை காரணமாக பாதிக்கப்பட்ட துறை களை மீட்டெடுக்கும் முயற்சியிலும் இலங்கைக்கு இந்தியா உதவி களை அளித்து வருகிறது.

2020-இல் ராஜபட்ச சகோதரர்கள் மீண்டும் அதிகாரத்துக்கு வந்த பின், நீண்டநாள் கூட்டாளியான இந்தியாவைப் புறந்தள்ளி சீனாவுடன் நெருக்கம் காட்டத் தொடங்கினர். அதையெல்லாம் மனதில் வைத்துக் கொள்ளாமல், இலங்கை மக்களுக்கு இந்தியா என்றும் துணை இருக்கும் என்கிற கொள்கையின் உறுதிப்பாட்டுடன் பொருளாதாரச் சிக்கலில் இருந்து மீள்வதற்கு இந்தியா ஏராளமான உதவிகளைச் செய்து வருகிறது.

இப்போது சீனாவின் உளவுக் கப்பல் வருகையால் இந்தியாவுக்கு நேரடியாக எந்த ஆபத்தும் நேர்ந்துவிடப் போவதில்லை. ஆனால், இலங்கையின் இப்போதைய இக்கட்டான பொருளாதார சூழ்நிலையில் தனக்கு தர்மசங்கடத்தை ஏற்படுத்தும் வகையிலான சீனாவின் உளவுக் கப்பலை அனுமதித்திருக்கக் கூடாது. அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு குத்தகைக்கு விட்டதன் பின்விளைவை அனுபவிக்கிறது இலங்கை. **(தினமணி)**

# முன்னாள் ஜனாதிபதிகள்...

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ஜனாதிபதியை இனிமேல் "அதிமேதகு" என்று சிறப்பித்து அழைக்கத்தேவையில்லை என்று தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் அறிவித்தது மிகவும் பொருத்தமானது என்றே தோன்றுகிறது.

இவர்கள் எல்லோரும் சிறப்பான ஆட்சியை நடத்திய பெருமைக்குரியவர்களாக இருந்தால்,நாட்டு மக்களுக்கு நல்வாழ்வைக் கொடுத்தவர்களாக இருந்தால், வாழும் முறையால் வழிகாட்டியவர்களாக இருந்தால் மீண்டும் பாராளுமன்றம் வந்து மக்களுக்கு தொடர்ந்தும் சேவை செய்ய அக்கறை காட்டுகிறார்கள் என்று எடுத்துக்கொள்ளலாம். ஆனால், தவறான ஆட்சிமுறை, அதிகார துஷ்பிரயோகம் மற்றும் பொதுச்சொத்துக்களை சூறையாடுதல் ஆகியவற்றுக்கு பெயர்போன இவர்கள் மீண்டும் பாராளுமன்ற உறுப்பினர்களாக மாத்திரமல்ல, வெறுமனே அரசியலில் தொடர்ந்து ஈடுபடுவது என்பதே ஏற்றுக் கொள்ள முடியாதது. இவர்கள் ஜனாதிபதியாக பதவிவகித்த காலத்தில் பாராளுமன்றத்தை மதித்துச் செயற்பட்டவர்களும் அல்லர். பாராளுமன்ற ஜனநாயக கம்கேலிக்கூத்தாக்கப்பட்டிருக்கிறது.

மக்கள் கிளர்ச்சிக்கு முகங்கொடுக்கமுடியாமல், மே மாத முற்பகுதியில் மகிந்த ராஜபக்ச பிரதமர் பதவியில் இருந்து விலகிய பிறகு அவரது மூத்த சகோதரர் சமால் ராஜபக்ச பாராளுமன்றத்தில் ஒரு தடவை உரையாற்றிய போது தனது சகோதரர் ஜனாதிபதியாக இரண்டாவது பதவிக்காலத்தின் முடிவில் அரசியலில் இருந்து ஓய்வு பெற்றிருக்கவேண்டும் என்று குறிப்பிட்டார்.

இலங்கை ஜனாதிபதிகளில் மக்களினால் மிகவும் மோசமாக வெறுக்கப்பட்டு இடைநடுவில் பதவியில் இருந்து விரட்டப்பட்ட முதலாவது ஜனாதிபதியென்ற அபகீர்த்திக்குள்ளான அடுத்த சகோதரர் கோட்டாபயவுக்கு எத்தகைய ஆலோசனையை சாமல் கூறப்போகின்றார் என்று பார்ப்போம்.



ஈழநாடு



# ரிஷி சுனக்:

## வெள்ளை இனம் அல்லாத பிரதமரை பிரிட்டன் மக்கள் ஏற்க தயாரா?

——— ஜுபைர் அகமது

40-50 ஆண்டுகளுக்கு முன்பு வரை, இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர்கள் பிரிட்டனில் எல்லா வகையான வெளிப்படையான பாகுபாடுகளையும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. பிரதமராகும் கனவு என்பது கற்பனையாக மட்டுமே இருந்தது.

எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சியின் எம்பி வீரேந்திர ஷர்மாவுக்கு 75 வயதாகிறது. அவர் இந்தியாவின் பஞ்சாபிலிருந்து 55 ஆண்டுகளுக்கு முன்பு லண்டனில் குடியேறினார். வெள்ளையர்களிடம் பல வெளிப்படையான பாகுபாடுகளை சந்திக்க நேர்ந்தது என்று பிபிசிக்கு அளித்த சிறப்பு பேட்டியில் அவர் தெரிவித்தார். "60களில் பிரிட்டனின் வீடுகளின் வெளிப்புறத்தில் "வாடகைக்கு வீடு கிடைக்கும். ஆனால் ஆசியர்கள் மற்றும் கறுப்பர்களுக்கு அல்ல" என்று எழுதப்பட்டிருந்தது. கிளப்புகளின் வெளிப்புறத்தில், "நாய்கள், ஐரிஷ்மேன்கள், நாடோடிகள் மற்றும் கறுப்பர்கள் "வர அனுமதி இல்லை." என்று எழுதப்பட்டிருக்கும். ஆங்கிலேயர்கள் இந்தியர்களை பார்க்கும்போது, "இவர்கள் எங்களுக்கு அடிமையாக இருந்தவர்கள். இப்போது எங்களுக்கு சமமாக அமர்ந்துள்ளனர்" என்று கூறி எதிர்ப்பார்கள்," என்று அவர் மேலும் கூறினார்.

ஆனால் இன்று வீரேந்திர ஷர்மாவைப் போலவே, பிரிட்டனில் உள்ள பல எம்.பி.க்கள் இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர்கள் . இதுமட்டுமல்ல, போரிஸ் ஜான்சன் அரசில் உள்ள பல அமைச்சரவை அமைச்சர்களும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர்கள்.

அவர்களில் ஒருவர் இன்று பிரதமர் பதவிக்கான போட்டியில் உள்ளார். அவர் பெயர் ரிஷி சுனக். அவர் நாட்டின் நிதி அமைச்சராகவும் இருந்துள்ளார். கன்சர்வேடிவ் கட்சியின் முக்கிய தலைவர்களில் அவர் ஒருவர். 42 வயதான ரிஷி சுனக் உடன், கட்சியின் மூத்த தலைவரான லிஸ் ட்ரஸ் பிரதமர் பதவிக்கான போட்டியில் உள்ளார். கன்சர்வேடிவ் கட்சியின் 1,60,000 உறுப்பினர்கள் இந்த இருவரில் ஒருவருக்கு வாக்களித்து நாட்டின் அடுத்த பிரதமரை தேர்வு செய்வார்கள். முடிவு செப்டம்பர் 5 ஆம் திகதி வெளியாகும்.

அடுத்த பிரிட்டிஷ் பிரதமர் இந்திய வம்சாவளியை சேர்ந்தவராக இருக்க முடியுமா? இந்திய வம்சாவளியைச் சேர்ந்த வெள்ளையர் அல்லாதவரை இங்குள்ள சமூகம் பிரதமராக்க முடியுமா?

இதைத் தெரிந்துகொள்ள, நாட்டின் பல நகரங்களுக்குச் சென்று, ஒவ்வொரு சமூகத்தினரிடமும், கன்சர்வேடிவ் கட்சியினரிடமும் இது குறித்து கருத்துக் கேட்டோம்.





**ரிஷி சிறந்தவர்**

லண்டனில் இருந்து 100 கிலோமீட்டர் தொலைவில் உள்ள செல்டென்ஹாம் நகரம் பிரிட்டனின் ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சியின் கோட்டையாகும். லண்டன், பர்மிங்ஹாம், மான்செஸ்டர் மற்றும் லிவர்பூல் போன்ற பெரிய நகரங்களுக்கு வெளியே, இதுபோன்ற சிறிய நகரங்கள் மற்றும் நகரங்களில் பன்முகத்தன்மை குறைவாகவே உள்ளது. இது பெரும்பாலும் வெள்ளையர்களின் நகரம். ரிஷி சுனக் பற்றி இளைஞர்கள் குழுவிடம் கருத்துக் கேட்டபோது ஒரு இளம் பெண், "ரிஷி சுனக் பொருளாதாரத்திற்கு சிறந்தவராக இருப்பார். அவர் ஒரு பொருளாதார நிபுணர். எனவே இதன்படி அவருக்கு (பிரதமர் ஆவதற்கு) நல்ல வாய்ப்பு உள்ளது" என்று கூறினார்.

"அவரது கொள்கைகள் அவரைப் போன்ற பணக்காரர்களைத் தவிர வேறு யாருக்கும் உதவாது. அதனால் தான் அவர்களில் யாரையும் நான் ஆதரிக்கவில்லை," என்று உள்ளூர் கல்லூரியில் படிக்கும் அவரது தோழி ஒருவர் குறிப்பிட்டார். நான் ஒரு பெண்ணிடம் "பிரிட்டிஷ் சமூகம் ஒரு வெள்ளையர் அல்லாதவரை பிரதமராக தேர்ந்தெடுக்க தயாராக உள்ளதா" என்று கேட்டேன். "நான் தனிப்பட்ட முறையில் அதைப் பற்றி சிந்திக்கவில்லை. ஆனால் நான் நிச்சயமாக இதற்குத் தயார். எனது ஆதரவு ரிஷி சுனக் நோக்கியே உள்ளது" என்று அவர் கூறினார். நகர சந்தையில் ஒரு நபரிடம்," இங்குள்ள சமுதாயம் ஒரு கருப்பு இன பிரதமருக்கு தயாராக உள்ளது என்று நீங்கள் நினைக்கிறீர்களா" என்று கேட்டேன். அதற்கு அவர் , "நான் நிச்சயமாக தயாராக இருக்கிறேன். எனக்கு வேறு யாரைப்பற்றியும் தெரியாது. ஆனால் அது நன்றாக இருக்கும் என்று நினைக்கிறேன்," என்று தெரிவித்தார்.

பர்மிங்காம் பிரிட்டனின் இரண்டாவது பெரிய நகரம். இங்கு மக்கள் தொகையில் பன்முகத்தன்மை உள்ளது. நகரில் அண்மையில் நடைபெற்ற காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளின் கலாச்சாரக் கொண்டாட்டங்களில் பன்முகத்தன்மை உணரப்பட்டது. இங்கு பாகிஸ்தான் வம்சாவளியைச் சேர்ந்தவர்கள் அதிகம். இந்து மதத்தைப் பின்பற்றும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ரிஷி சுனக்கை பிரதமராகப் பார்க்க பாகிஸ்தானிய வம்சாவளி மக்கள் விரும்புவார்களா? அனைவரும் இதற்கு "ஆம்" என்று பதில் சொல்கிறார்கள். வெள்ளிக்கிழமை தொழுகை முடிந்து மசூதியிலிருந்து வெளியே வந்த ஒருவர், "இப்போது முழு சமுதாயமும் திறமையை அடையாளம் காணும் அளவுக்கு அறிவாளியாகிவிட்டதாக நான் நம்புகிறேன், மனிதனின் இனம், அவனுடைய நிறம், அவன் எங்கிருந்து வந்துள்ளான், எங்கே இருக்கிறான் என்று அது பார்க்காது." என்று அவர் கூறினார். ரிஷி ஒரு திறமையான மனிதர் என்பதை நான் புரிந்துகொள்கிறேன், எனவே அவர் ஒரு நல்ல பிரதமராக இருப்பார் என்று எனக்கு நம்பிக்கை உள்ளது என்று அவர் மேலும் கூறினார்.

சிறிது நேரத்தில் மேலும் பலர் முன் வந்து என்னிடம் பேசினார்கள். கறுப்பு தாடியுடன் இருந்த ஒருவர், "ரிஷி ஒரு சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர். பிரிட்டனின் அடுத்த பிரதமருக்கான சிறந்த வேட்பாளர் அவர் என்று நான் நினைக்கிறேன்" என்றார். பாகிஸ்தானின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள காஷ்மீரில் இருக்கும் மீர்பூர் நகரைச் சேர்ந்த மற்றொரு நபர், "ரிஷி சுனக் பிரதமராக வேண்டும் என்று நான் நினைக்கிறேன். ஏனென்றால் பல ஆண்டுகளாக பெரும்பாலும் வெள்ளையர்களே பிரதமர்களாக வருவதை நாம் பார்க்கிறோம். எனவே ஒரு இந்தியர் அல்லது ஆசிய வம்சாவளியை சேர்ந்தவர் பிரதம மந்திரியாக வரவேண்டும். இதன் காரணமாக நிறைய மாற்றங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது," என்றார்.



ரிஷி சுனக் இந்து மதத்தை பின்பற்றுபவர். 2015ல் முதன் முறையாக நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப் பட்ட பிறகு பகவத் கீதையின் மீது கைவைத்து அவர் சத்தியப் பிரமாணம் எடுத்துக்கொண்டார். அவர் இந்திய வம்சாவளியை சேர்ந்தவர். அவரது வெற்றிக்காக இந்திய வம்சாவளியினர் பிரார்த்தனை கூட்டங்களை நடத்தி வருகின்றனர். ஆனால் அவர் பிரதமராக வருவார் என்ற நம்பிக்கை அவர்களிடம் எந்த அளவுக்கு உள்ளது?

ரிஷி சுனக் 1980 மே 12 ஆம் திகதி சவுத்தாம்ப்டன் நகரில் பிறந்து அங்கு வளர்ந்தார். அவருடைய பெற்றோர் இந்த நகரத்தில் வசிக்கிறார்கள். அவரது தந்தை ஒரு மருத்துவர் மற்றும் தாயார் சமீப காலம் வரை ஒரு மருந்தகத்தை நடத்தி வந்தார். ரிஷியின் குடும்பம் கிழக்கு ஆப்பிரிக்காவில் இருந்து வந்து சவுத்தாம்ப் டனில் குடியேறியுள்ளது. அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் உள்ளூர் கோவிலான "வேதிக் சொசைட்டி இந்து கோவிலுடன்" ஆழமான தொடர்பு உள்ளது.

நான் கோவிலை அடைந்த போது, 75 வயதான நரேஷ் சோன்சாட்லாவை சந்தித்தேன். அவர் ரிஷி சுனக்கை சிறுவயதிலிருந்தே அறிந்தவர். "என்னைக் கேட்டால் அவர் பிரதமராக வருவார் என்று நான் நினைக்கிறேன். ஆனால் ஏதோ ஒரு காரணத்திற்காக அப்படி நடக்கவில்லை என்றால், ஒரு வேளை அது அவரது தோலின் நிறம் காரணமாக இருக்கலாம்," என்று அவர் என்னிடம் கூறினார்.

இந்த கோவிலின் தலைவர் சஞ்சய் சந்தாராணா. ரிஷியிடம் பாரபட்சம் காட்டப்படும் வாய்ப்பு இல்லை என்று அவர் கருதுகிறார்."இந்த நாட்டில் யாருடைய கொள்கை நல்லது, யாருடைய கண்ணோட்டம் சரியானது, யார் இந்த நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வார்கள் என்று பார்க்கப்படுகிறது. நிறம் போன்றவை முக்கியமில்லை" என்று அவர் கூறினார்.

மக்களிடையே ரிஷியின் புகழ் லிஸ் ட்ரஸ்ஸை விட அதிகமாக இருப்பதாகத் தோன்றினாலும், வெற்றி தோல்வியை கட்சி உறுப்பினர்களே முடிவு செய்வார்கள். இதற்கான வாக்களிப்பு தொடங்கிவிட்டது. கன்சர்வேடிவ் கட்சியின் இளைய தலை முறையினர் ரிஷிக்கு ஆதரவாக இருப்ப தாகத் தெரிகிறது. ஆனால் மூத்த உறுப்பினர்கள் ரிஷியைப் பற்றி மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டுள்ளனர். கன்சர்வேட்டிவ் கட்சி நாட்டின் பல்வேறு நகரங்களில் இரு தலைவர்களுக்கும் இடையே விவாதங்களை நடத்தி வருகிறது. இந்த நிகழ்வுகள் " ஹஸ்டிங்ஸ்" என்று அழைக்கப்படுகின்றன.

கருத்து வாக்கெடுப்பில் லிஸ் ட்ரஸ்ஸுக்கு தெளிவான முன்னிலை உள்ளது. ஆனால் ஹஸ்டிங்ஸ் நிகழ்வுகளில் கட்சி உறுப்பினர்கள் லிஸ் ட்ரஸை விட ரிஷி சுனக் பக்கம் அதிக சாய்ந்துள்ளனர். முழு சூழலும் ரிஷிக்கு ஆதரவாக இருப்பது போலவே தெரிகிறது. லிஸ் அணியை விட ரிஷியின் பிரசாரக் குழு அதிக ஒழுங்கமைப்புடன் செயல்படுகிறது. ரிஷியின் அணியில் அதிக இளைஞர்கள் உள்ளனர். எனவே அவர்களின் முகாமில் அதிக உற்சாகம் உள்ளது. லிஸ்ஸின் அணியில் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் அதிகம் உள்ளனர். இவர்கள் வெள்ளையர்கள், வெள்ளையர் அல்லாதவர்களை பிரதமராக ஆக்க இன்னமும் தயங்குபவர்கள். கட்சியில் இளைஞர்களை விட இவர்களின் எண்ணிக்கை அதிகம்.

ஆனால் ரிஷியின் முகாமில் எல்லா இடங்களிலும் ஒரு நேர்மறையான அணுகுமுறை காணப்படுகிறது. ரிச்சர்ட் கிரஹாம், க்ளோசெஸ்டர் தொகுதியின் கன்சர்வேடிவ் கட்சியின் எம்.பி மற்றும் ரிஷி சுனக்கின் வெளிப்படையான ஆதரவாளர் ஆவார். ரிஷியை பிரதமராக ஏற்றுக்கொள்ள மக்கள் தயாராக இருக்கிறார்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்களா என்று நான் அவரிடம் கேட்டேன். "நானும், கூடவே வேறு பலரும் இதற்கு தயாராக உள்ளோம். இவர்களில் கன்சர்வேடிவ் கட்சியின் பெரும்பாலான எம்.பி.க்கள் அடங்குவார்கள். நாடு முழுவதும் உள்ள எங்கள் உறுப்பினர்களில் ஏராளமானோர் இதற்குத்தயாராக இருக்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன். ஆனால் உண்மையான வாக்குப்பதிவு முடிந்த பிறகுதான் முடிவு தெரியவரும். நாங்கள் அனைவரும், நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல சரியான நபர் ரிஷி என்று உறுதியாக நம்புகிறோம். இந்தப்போட்டியின் வெற்றி நிறம் காரணமாக நிர்ணயிக்கப்படும் என்று நான் நினைக்கவில்லை," என்று உற்சாகமாகக் கூறினார்.

லிஸ் ட்ரஸ்ஸுக்கு ஆதரவாகவும் சிலர் பேசினார்கள். "லிஸ் உண்மையான பழமைவாதியாக காணப்படுகிறார் என்று நான் நினைக்கிறேன். அதுதான் இந்த நாட்டில் நமக்குத் தேவை. ரிஷி நம்மில் பெரும்பாலானவர்களிடம் இருந்து விலகியே உள்ளார். அவருடைய பின்னணி என்ன என்பது எனக்கு முக்கியமில்லை. 2010 க்கு பிறகு கடந்த ஐந்து வருடங்களில் நான் உண்மையில் நிறைய மாறிவிட்டேன். தற்போது கறுப்பு நிறத்தால் எனக்கு எந்தப் பிரச்சனையும் இல்லை என்று நான் நினைக்கிறேன்," என்று ஒருவர் குறிப்பிட்டார்.

# இலங்கையில் 25 வருட கால சேவை பூர்த்தியை கொண்டாடும் எஸ்.டி.பி. வங்கி




இலங்கையின் சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சிகளுக்கான வங்கியியல் கட்டமைப்பின் பிரதான செயற்பாட்டாளர்களில் ஒன்றாகத் திகழும் SDB வங்கி, இலங்கையில் தனது சேவைகளை வழங்க ஆரம்பித்து 25 வருடங்களைப் பூர்த்தி செய்துள்ளது. இலங்கையர்களுக்கு வளர்ச்சியை எய்துவதற்கு உதவுவதுடன், மாறிவரும் உலகை எதிர்கொள்வதற்கு அவசியமான ஆதரவையும் வழங்குகின்றது. வங்கியின் 25 ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு, ஊடகவியலாளர் சந்திப்பொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 2022 ஆகஸ்ட் 17 ஆம் திகதி கொழும்பு கிங்ஸ்பரி ஹோட்டலில் இடம்பெற்ற இந்த சந்திப்பில், வங்கியின் தலைமைஅதிகாரி தினிதி ரத்நாயக்க மற்றும் இடைக்கால பிரதம நிறைவேற்று அதிகாரி நிரஞ்ஜன் தங்கராஜா ஆகியோர் உரையாற்றியிருந்தனர். இதன் போது வங்கியின் 25 வருட கால வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பயணம் மற்றும் எதிர்கால செயற்பாடுகள் பற்றி உரையாற்றியிருந்தனர்.

**தற்போதைய மற்றும் எதிர்கால புறத்தோற்றங்கள்**

எஸ்.டி.பி. வங்கியின் 25 வருட பூர்த்தியை முன்னிட்டு, இதுவரையில் வங்கி கடந்து வந்த சிறந்த பயணம் தொடர்பில் மீட்டுப்பார்ப்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றது. ஸ்தாபிப்புக் கொள்கைகளின் பிரகாரம் வங்கி தொடர்ந்தும் செயலாற்றிய போதிலும், அதன் பண்புகள் மற்றும் நோக்கங்கள் போன்றன காலப்போக்கில் மாற்றமடைந்துள்ளன. தற்போது எஸ்.டி.பி. வங்கி தூரநோக்குடைய, பெறுமதி அடிப்படையிலான, தொழில்நுட்ப சார் மற்றும் சமகாலத்துக்குப் பொருத்தமான வங்கியாகத் திகழ்வதுடன், சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சியாண்மைகள், பெண்கள் வலுவூட்டல் மற்றும் டிஜிட்டல் உள்ளடக்கம் போன்ற பிரிவுகளில் பிரதான தந்திரோபாய கவனிப்பையும் கொண்டுள்ளது. தனது ஸ்தாபக் கொள்கைகளுக்கமைய வங்கி தொடர்ந்தும் இயங்கும் நிலையில், தனது பெறுமதிகளின் அடிப்படையில் வங்கி வழிநடத்தப்பட்டு, சகல பங்காளர்களுக்கும் வலுவூட்டும் வகையில் செயலாற்றுகின்றது.

தேசிய பொருளாதார வளர்ச்சிக்கான முன்னணி சேவை வழங்குநர் மற்றும் சிறியளவிலான தொழில்முயற்சியாண்மை மற்றும் பிரத்தியேக நிதி வளர்ச்சி போன்றவற்றுக்கான முன்னணி ஆதரவாளர் எனும் வகையில் வங்கியின் வளர்ச்சி என்பதனூடாக, தொடர்ச்சியான டிஜிட்டல் வங்கி விரிவாக்கத்துக்கு உறுதியான கீர்த்தி நாமத்தை ஏற்படுத்தியுள்ளதுடன், தெரிவுக்குரிய தொழில் வழங்குநராகவும் திகழச் செய்துள்ளது. இவை அனைத்தும் அண்மையில் எஸ்.டி.பி. வங்கிக்கு பல விருதுகளையும் கௌரவிப்புகளையும் பெற்றுக் கொள்வதற்கு ஏதுவாக அமைந்திருந்தன. இவற்றில் பிரான்ட் ஃபினான்ஸின் இலங்கையின் 100 சிறந்த பெறுமதி வாய்ந்த வர்த்தக நாமங்கள் 2020 வரிசையில் முதல் 50 இடங்களுக்குள் காணப்பட்டமையும் அடங்கும்.

கொழும்பு பங்குப்பரிவர்த்தனையின் பிரதான பலகையில் பட்டியலிடப்பட்டள்ளதுடன், BB + (Stable) எனும் ஃபிட்ச் தரப்படுத்தலையும் கொண்டுள்ளது. நாடு முழுவதிலும் விரிவாக்கமடைந்து வரும் வலையமைப்பில் தற்போது 94 கிளைகள் காணப்படுகின்றது. முன்னணி தேசிய வங்கி எனும் நிலையை எய்தும் எஸ்.டி.பி. வங்கியின் பயணத்தில் மாற்றியமைக்கப்பட்ட நுகர்வோர், வணிக மற்றும் அபிவிருத்தி வங்கியியல் மாதிரிகள், கிராமிய, சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சியாண்மைகள் மற்றும் நகரப் பிரிவுகள் போன்ற பல்-வகைப்படுத்தப்பட்ட வாடிக்கையாளர் இருப்பு, வங்கி உட்கட்டமைப்பின் டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் மாற்றியமைக்கப்பட்ட ஊழியர் பெறுமதி வகைப்படுத்தல் போன்றன அடங்கியுள்ளன.

இந்தக் காரணிகளினால் சர்வதேச முதலீட்டாளர் சமூகத்தின் கவனம் ஈர்க்கப்பட்டிருந்ததுடன், உறுதியான, நீண்ட கால முதலீட்டாளர் பங்காண்மைகளை முன்னணி உள்நாட்டு மற்றும் சர்வதேச நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனங்கள் மற்றும் முதலீட்டாளர்களுடன் ஏற்படுத்திக் கொள்ள உதவியாக அமைந்திருந்தது. இவற்றில், சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனம், டச் அபிவிருத்தி வங்கி மற்றும் ஜப்பானை தளமாகக் கொண்ட நிதிச் சேவைகள் குழுமம் - SBI ஹோால்டிங்ஸ் போன்றன அடங்குகின்றன. முன்னணி நிறுவனங்களின் இது போன்ற ஆதரவினூடாக, இலங்கையில் சிறிய நடுத்தரளவு தொழில் முயற்சியாண்மையை ஊக்குவிப்பதில் எஸ்.டி.பி. வங்கியின் நிலையை மேலும் வலிமைப்படுத்த உதவியுள்ளது. இந்தத் துறை நாட்டின் மொத்தத் தேசிய உற்பத்தியை 50சதவீதத்துக்கும் அதிகமான பங்கை தன்வசம் கொண்டுள்ள முக்கியத்துவம் வாய்ந்த பிரிவாக அமைந்துள்ளது.

**வங்கியின் கதை**

எஸ்.டி.பி. வங்கி தனது பயணத்தை 1997 ஆம் ஆண்டில் அபிவிருத்தி வங்கியாக ஆரம்பித்திருந்தது. கூட்டுறவு நடவடிக்கைகளின் கொள்கைகளின் பிரகாரம் ஸ்தாபிக்கப்பட்டதுடன், கிராமிய மட்டத்தைச் சேர்ந்த சமூகங்கள் மத்தியில் கடன் மற்றும் சேமிப்பு, அபிவிருத்தி நிதியளிப்பு போன்ற வசதிகளை வழங்கும் வகையில் தனது செயற்பாடுகளை ஆரம்பித்திருந்தது. அப்போது முதல், வங்கியின் செல்வாக்குச் செலுத்தல் மற்றும் செயற்பாடுகள் வியாபிப்பு போன்றன ஏற்பட்டதுடன், அனைத்து இலங்கையர்களுக்கும் வலுவூட் டும் வகையில் தனது நோக்கத்தையும் அர்ப்பணிப்பையும் மேம்படுத்தியிருந்தது.



2007 ஆம் ஆண்டில் வங்கி தனது 10 வருட பூர்த்தியைக் கொண்டாடியிருந்தது. நாடு முழுவதிலும் தனது கிளை வலையமைப்பை 25 க்கும் அதிகமான கிளைகளாக விஸ்தரித்திருந்தது. 2012 ஆம் ஆண்டில், கொழும்புப் பங்குப்பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்டு வங்கியின் பங்குகள் கைமாறியிருந்தன. எஸ்.டி.பி. வங்கி, தனது முதலாவது உரிமைப் பங்கு பொது வழங்கலை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருந்ததுடன், 2014 ஆம் ஆண்டில் மிகைக் கோரலை எய்தியிருந்தது.

டிஜிட்டல் வங்கியியல் புரட்சிக்கு முகங்கொடுக்கும் வகையில், 2019 ஆம் ஆண்டில் எஸ்.டி.பி. வங்கி, UPay எனும் அடுத்த தலைமுறை டிஜிட்டல் வங்கியியல் கட்டமைப்பை அறிமுகம் செய்திருந்தது. அத்துடன், எஸ்.டி.பி. மொபைல் எனும் வங்கியின் சொந்த மொபைல் வங்கியியல் அப்பையும் அறிமுகம் செய்திருந்தது. 2020 ஆம் ஆண்டில், டிஜிட்டல் உரிமை வழங்கலை முன்னெடுத்திருந்த இலங்கையின் முதலாவது நிறுவனமாக எஸ்.டி.பி. வங்கி திகழ்ந்ததுடன், டிஜிட்டல் வங்கியியல் மற்றும் தொழில்நுட்பத்தில் வங்கியின் ஈடுபாட்டை மேலும் உறுதி செய்வதை பிரதிபலித்திருந்தது. இந்த உரிமை வழங்கலும் மிகைக்கோரலைப் பதிவு செய்திருந்தது. 2021 ஆம் ஆண்டில், எஸ்.டி.பி. வங்கி, யூஎஸ்.டி இன்டர்நஷனல் டிவலப்மன்ட் ஃபினான்ஸ் கோர்பரேஷனிடமிருந்து 40 மில்லியன் அமெரிக்க டொலர்களை பெற்றுக் கொண்டதுடன், அதனூடாக இலங்கையின் சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சி வங்கிக் கட்டமைப்பை மாற்றியமைக்கும் இலக்கை நோக்கிய செயலாற்றியிருந்தது.

**25 வருடப் பூர்த்தியை எய்துவது**

25 வருடங்கள் சேவையாற்றியிருந்தமை எனும் வரலாற்று மைல்கல்லை குறிக்கும் வகை யில், எஸ்.டி.பி. வங்கி பல செயற்பாடுகளை முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளது. குறிப்பாக, நிலைபேறாண்மைக்கான தனது அர்ப்பணிப்பை மேலும் உறுதி செய்யும் வகையில், தனது 25 வருட பூர்த்தி வனாந்தர மீள செய்கைத் திட்டத்தை உடுதும்பர பகுதியில் முன்னெடுக்கும். அதனூடாக சமூக மற்றும் சூழல் நிலைபேறாண்மைக்கான தனது அர்ப்பணிப்பை உறுதி செய்யும். 2022 ஆகஸ்ட் 24 ஆம் திகதி முன்னெடுக்கப்படும் இந்தத் திட்டத்தின் போது, பெருமளவான புதிய மரக்கன்றுகள் நாட்டப்படும். 25 ஹெக்டெயர்களுக்கும் அதிகமான பகுதி மீள்வனாந்தரச் செய்கைக்காக அடையாளமிடப்பட்டுள்ளதுடன், இதற்கு எஸ்.டி.பி. வங்கி ஆதரவளிக்கும்.

**எதிர்காலத்துக்கு முகங்கொடுத்தல்**

இலங்கையில் பொருளாதார அபிவிருத்திக்கு ஆதரவளிக்கும் வகையில் அவசியமான நிபுணத்துவம், அனுபவம் மற்றும் இதர வளங்களை வங்கி கொண்டுள்ளதுடன், சிறிய நடுத்தரளவு தொழில் முயற்சியாண்மைத் துறையில் அதிகளவு கவனம் செலுத்துகின்றது. பெருமைக்குரிய சர்வதேச நிதிச் சேவைகளை வழங்குநர்களுடனும் நிறுவனங்களுடனும் கைகோர்த்துள்ளதுடன், அதனூடாக வலுவூட்டப்பட்ட சமத்துவமான சமூகத்தை ஏற்படுத்த திட்டமிட்டுள்ளது. தற்போதைய சூழலில், சகல இலங்கையர்களுக்கும் புதிய பொருளாதார வாய்ப்புகளை ஏற்படுத் துவது மற்றும் ஏற்றுமதிசார் வியாபாரங்களுக்கு ஆதரவளிப்பது, இலங்கைக்கு பெறுமதி சேர்க்கும் வியாபாரங்களுக்கு கைகொடுப்பது போன்றன தொடர்பில் கவனம் செலுத்தும். ஒரே நோக்குடைய பங்காளர்களுடன் இணைந்து பணியாற்றுவதனூடாக எஸ்.டி.பி. வங்கி, இலங்கையின் சிறிய நடுத்தரளவு தொழில் முயற்சியாண்மைத் துறையை கட்டியெழுப்பும் இலக்கையும் நோக்கையும் நோக்கி பயணிக்கின்றது.

நிதி ஆதரவு மற்றும் வாழ்க்கைக்கும் வியாபாரங்களுக்கும் பெறுமதி சங்கிலி மேம்படுத்தல்கள் மற்றும் நிதி முகாமைத்துவம் போன்றவற் றில் ஆலோசனை வழங்கல் மற்றும் அறிவு பகிர்வு போன்றவற்றினூடாக தமது வாடிக்கையாளர்களுக்கு பரிபூரணமான ஆதரவை எஸ்.டி.பி. வங்கி வழங்கு கின்றது.

சூழல், சமூகம் மற்றும் ஆளுகை நிலைபேறாண்மை போன்றவற்றைப் பொறுத்தமட்டில் நிலைபேறான வியாபார மாதிரிக்கு தன்னை அர்ப்பணித்துள்ளது. வங்கியின் நிதியியல் செயற்பாடுகளில் இந்த அர்ப்பணிப்பு பிரதிபலிக்கப்பட்டுள்ளதுடன், நிலைபேறான வழிமுறையை பின்பற்றும் வியாபாரங்கள் மற்றும் செயற்திட்டங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்கின்றது.



இலங்கையின் சிறிய நடுத்தரளவு தொழில் முயற்சியாண்மைகளுக்கும், பெண் தொழில் முயற்சியாளர்களுக்கு வலுவூட்டி ஆதரவளிப்பதுடன், டிஜிட்டல் வங்கியியல் சேவையை பொது மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கு கைகொடுக்கும் எஸ்.டி.பி. வங்கி, சகல வாடிக்கையாளர்களையும் அவர்களின் வாய்ப்புகளுக்கமைய சமத்துவமான முறையில் நடத்தும் நிதிச் சேவை வழங்குநராக தன்னை நிலைநிறுத்தியுள்ளது.

# ஒஸ்காருக்காக சிபாரிசு




நானி, சாய் பல்லவி உள்ளிட்ட பலர் நடிப்பில் கடந்த ஆண்டு இறுதியில் வெளியான திரைப்படம் 'ஷ்யாம் சிங்க ராய்'. தமிழ், தெலுங்கு மொழிகளில் நேரடியாக ஓடிடியில் இந்த படம் வெளியானது.

விமர்சன ரீதியாகவும் இந்த படம் நல்ல வரவேற்பை பெற்றது. இயக்குநராக விரும்பும் ஓர் இளைஞன் கதை எழுத முயலும் போது அந்த கதையின் இறுதியில் அது தன் முன் ஜென்மத்து கதை என்று உணர்ந்து தன் முன் ஜென்ம நினைவுகளை அறிந்து கொள்வதாக இந்தப் படம் அமைந்தது. நானி, சாய் பல்லவி நடிப்புக்கு ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்தது. கதையும் பாராட்டப்பட்டது.

தற்போது, ஒஸ்கார் விருதுகளுக்கான பட்டியலில் மூன்று பிரிவுகளில் இந்த படம் இணைந்திருக்கிறது. சிறந்த கதைப் படம், பின்னணி இசை மற்றும் சிறந்த பண்பாட்டு படம் என்பது தான் அந்த மூன்று பிரிவுகள்.

# கவர்ச்சி பாதையில் கீர்த்தி!




குழந்தை நட்சத்திரமாக நடிக்க தொடங்கியவர் கீர்த்தி சுரேஷ். இவர், 'இது என்ன மாயம்' என்ற திரைப்படம் மூலம் தமிழ்த் திரையுலகில் அறிமுகமானார். ஆரம்பத்தில் அவர் நடித்த படங்கள் அனைத்தும் பெருவெற்றி பெற்றன.

இதனால், பல முன்னணி நாயகர்களின் கதாநாயாகியாக நடித்தார். கடைசியாக 'சாணிக் காயிதம்' திரைப்படம் வெளியானது. படத்துக்குக் கலவையான வரவேற்பு கிடைத்தாலும், கீர்த்தி சுரேஷின் நடிப்பு பெரும் பாராட்டைப் பெற்றது.

எனினும், அதன் பின்னர் சொல்லிக் கொள்ளும் அளவுக்குச் சிறந்த படங்கள் அவருக்கு அமையவில்லை. இந்நிலை யில், நவீன ஆடை அணிந்து கவர்ச்சிப் படங்களை வெளியிட்டு வருகிறார். அவரின் படங்களுக்கு இணையவாசிகள் மத்தியில் பெரும் வரவேற்பு கிடைத்துள்ளது.



# நாயகியானார் அனிகா



"விஸ்வாசம்" படத்தில் அஜித்தின் மகளான நடித்த அனிகா தற்போது மலையாள திரைப்படத்தில் கதாநாயகியாக அறிமுகமாகிறார்.

2015ஆம் ஆண்டு வெளியான "என்னை அறிந்தால்" படம் மூலம் தமிழ் திரையுலகில் அறிமுகமான அனிகா, பின்னர் 2019-ம் ஆண்டு "சிறுத்தை" சிவா இயக்கத்தில் அஜித் நடித்து வெளியான "விஸ்வாசம்" படத்தில் அஜித்தின் மகளாக நடித்திருந்தார்.

தற்போது இவர், "ஓ மை டார்லிங்" என்ற மலையாளப் படம் மூலம் நாயகியாக அறிமுகமாகிறார். இந்தப் படத்தின் நாயகனான அல் பிரட் டி சாமுவேலும் இந்தப் படத்தில்தான் அறிமுகமாகிறார்.

# டாப்ஸியின் விருப்பம்

தமிழ், தெலுங்கு உள்ளிட்ட திரையுலகில் கவர்ச்சி கன்னியாக வலம் வந்தவர் நடிகை சில்க் ஸ்மிதா. இவரின் வாழ்க்கையை தழுவி ஹிந்தியில் 10 வருடங்களுக்கு முன்பு வெளியான படம் "டார்ட்டி பிக்சர்".

இந்த நிலையில் 10 வருடம் கழித்து தற்போது இந்த படத்தின் இரண்டாம் பாகத்தை உருவாக வுள்ளது.

இந்தப் படத்தில் நாயகியாக நடிக்க கங்கனா ரணவத்தை அணு கியபோது அவர் மறுத்துவிட் டார். இந்நிலையில், டாப்ஸி, கிரீத்தி சனான் இந்தப் பாத்திரத் தில் நடிக்க விருப்பம் தெரிவித் துள்ளனர்.

# உருவாகும் பிரமாண்டம்!

'பொன்னியின் செல்வன்' பாடல் வெளியீட்டு விழாவை பிரமாண்டமாக நடத்த லைக்கா நிறுவனம் திட்டமிட்டுள்ளது. சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் செப்ரெம்பர் 6ஆம் திகதி ஏ.ஆர்.ரஹ்மான் நிகழ்ச்சியுடன் 'பொன்னியின் செல்வன்' பாடல் வெளியீட்டு விழா நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் நடிகர்கள் ரஜினிகாந்த், கமல்ஹாசன் உள்ளிட்ட பலரை லைக்கா மற்றும் இயக்குநர் மணிரத்னம் ஆகியோர் அழைத்துள்ளனர்.

அதில், ரஜினிகாந்த் கமல்ஹாசன் ஆகியோர் கலந்துகொண்டு பாடலை வெளியிடுவார்கள் என கூறப்படுகிறது.

'பொன்னியின் செல்வன்' நிகழ்ச்சிக்கு தமிழக முதல்ர் ஸ்டாலினை அழைத்துள்ளனர். அவர் படத்தின் டிரெய்லரை வெளியிடவுள்ளார்.




**திரைப்படம் - திருச்சிற்றம்பலம்**
**இயக்கம் - மித்ரன் ஆர் ஜவஹர்**
**இசை - அநிருத்**
**நடிப்பு - தனுஷ், நித்யா மேனன், ராஷி கண்ணா, பிரியா பவானி சங்கர்**

ஆண்களின் காதலைத்தான் தமிழ் திரையுலகம் அதிகம் சொல்லியிருக்கின்றது. சொல்லப்படாத பெண்களின் காதல் எவ்வளவோ உண்டு. இந்த "திருச்சிற்றம்பலம்" மறைக்கப்பட்ட ஒரு பெண்ணின் காதல் கதையாக சுவாரசியமும், காதலுமாகக் கலந்து ரசிக்க வைக்கிறது.

இயக்குநர் மித்ரன் ஆர்.ஜவஹர் சற்று இடைவெளிக்குப் பிறகு மீண்டும் வந்துள்ளார். அவரிடம் ஒரு புத்துணர்வு தெரிகிறது. அது படத்திலும் எதிரொலித்துள்ளது.

தாத்தா பாரதிராஜா, மகன் பிரகாஷ்ராஜ், பேரன் தனுஷ் ஒரே வீட்டில் வசித்தாலும் அப்பா மகனான பிரகாஷ்ராஜூம், தனுஸூம் பத்து வருடங்களுக்கு மேலாக கதைக்காமல் இருக்கிறார்கள். ஒரு விபத்தில் தனுஷின் அம்மாவும், தங்கையும் இறந்துபோனதே அதற்குக் காரணம். தனுஸூம், கீழ் வீட்டில் வசிக்கும் நித்யா மேனனும் சிறு வயதிலிருந்தே நண்பர்கள். தனுஸூக்கு பணக்காரப் பெண்ணான ராஷி கண்ணா மீது காதல், ஓரிரு நாளில் அது நிறைவேமலே போகிறது. அடுத்து கிராமத்துப் பெண்ணான பிரியா பவானி சங்கர்மீது காதல், அது ஒரே நாளிலேயே "கட்" ஆகிவிடுகிறது. நித்யா மேனன்தான் உனக்கு பொருத்தமான ஜோடி என தாத்தா பாரதிராஜா சொல்ல அதன்பின் என்ன நடக்கிறது என்பதுதான் படத்தின் கதை.

முக்கிய கதாபாத்திரங்களை பார்த்துப் பார்த்து செதுக்கியிருக்கிறார் இயக்குநர் மித்ரன். அனைவரையும்விட தன்னுடைய மிக இயல்பான நடிப்பால் முழுப் படத்தையும் தாங்குகிறார் நித்யா மேனன். இப்படி ஒரு தோழி தங்கள் வாழ்க்கையில் இருக்க வேண்டும் என 90களில் பிறந்த பலரின் ஆசை, கனவாக இருக்கும். அப்படி ஒரு கனவுத் தோழியை கண் முன் காட்டியிருக்கிறார் நித்யா மேனன். உச்சக் காட்சிக்கு முன்பாக அவர் பொங்கி அழும் காட்சிகள் காதலில் விழுந்த அனைவரையும் கலங்க வைக்கும். நினைத்துப் பார்க்க முடியாத நடிப்பு, நட்பு நித்யா மேனனுடையது.

தமிழில் இதற்கு முன்பு "ஜகமே தந்திரம், மாறன்" என வேறு தடத்தில் பயணித்து ரசிகர்களை ஏமாற்றிய தனுஷ் மீண்டும் சரியான தடத்துக்குத் திரும்பியிருக்கிறார். இதுதான் தனு/க்கான களம். இப்படியான தனுஷைத்தான் பலருக்கும் பிடிக்கும். நம் பக்கத்து வீட்டுப் பையன் தான் திருச்சிற்றம்பலம் என சொல்லும் அளவுக்கு முதல் காட்சியிலேயே நெருக்கமாகி விடுகிறார்.

ராஷி கண்ணா மீதான ஈர்ப்பு, பிரியா பவானி சங்கரின் "வீட்ல பார்த்தா கொன்னுடுவாங்க" என இரண்டு விதமான காதல்களைக் கடந்து வரும் கதாபாத்திரம். நம் அருகில் இருப்பவர்களின் அருமை நம் கண்களை அடிக்கடி மறைக்கும் என்று சொல்வார்கள். அது தனு/க்கும் இப்படத்தில் நடக்கிறது. நாயகத்தனம் என்றெல்லாம் வழக்கமான திரைக்கதை போல் இல்லாமல் தனுஷ் கதாபாத்திரத்தை உருவாக்கியிருக்கிறார் இயக்குநர்.

நாகரிக, பணக்காரப் பெண்ணாக ராஷி கண்ணா. தனு/டன் சிறு வயதில் ஒன்றாகப் படித்தவர். தனுஷ் அவர் மீது காதலில் விழ, அது காதல் இல்லை ஈர்ப்பு மட்டும்தான் எனச் சொல்லி விலகுகிறார் ராஷி. அது ஒரு விதம் என்றால் மற்றொரு விதம் பிரியா பவானி சங்கர் கதாபாத்திரம் போன்றது. ஓரிரு காட்சிகள்தான் என்றாலும் கிராமத்துப் பக்கம் பெண்களின் காதல் பார்வை எப்படியிருக்கும் என்பதைக் காட்டுகிறது. ஒரு படத்திலேயே மூன்று விதமான பெண்கள், குணாதிசயங்கள், அவர்களின் காதல் என இந்தக் கால இளைஞர்களுக்கு ஒரு காதல் பாடத்தை எடுத்திருக்கிறார் இயக்குநர்.

தனுஷின் தாத்தாவாக பாரதிராஜா. தாத்தா, பேரன் இருவருமே ஒன்றாக பியர் குடிப்பதெல்லாம் ஓவர். பேரனுக்கு அடிக்கடி வாழ்க்கையின் பரிமாணங்களைப் புரிய வைக்கும் தாத்தாவாக பாரதிராஜா. தனுஷ் அப்பாவாக இன்ஸ்பெக்டராக பிரகாஷ்ராஜ். அவருக்கான முக்கியத்துவம் கொஞ்சம் குறைவுதான். அப்பா, மகனுக்கிடையில் அவர் கதாபாத்திரம் சிக்கிவிட்டது. படத்தில் நகைச்சுவைக்கு என்று தனியாக யாரும் இல்லை. முக்கிய கதாபாத்திரங்களே அவ்வப்போது சரியான நேரத்தில் வசனங்களைப் பேசி சிரிக்க வைத்துவிடுகிறார்கள். இடைவேளைக்குப் பின் தனுஷ் குடும்பத்தின் கிராமத்துப் பயணம் திரும்புகிறது. ஆனாலும், அங்கு ஒரு காதல் கதையைக் காட்டி கதையை ஓட்டியிருக்கிறார்கள். பின்னர்தான் மீண்டு வந்து சரியாக முடிகிறது.

அநிருத் – தனுஷ் கூட்டணி என்றாலே பாடல்கள் பட்டையைக் கிளப்பும். நீண்ட இடைவெளிக்குப் பின் இணைந்து கூட்டணி பாடல்களில் திருப்தி தரவில்லை. "தாய் கிழவி" மட்டும் கொஞ்சம் ஆட்டம் போட வைக்கிறது. பின்னணி இசை அனைத்தையும் இதற்கு முன்பு கேட்ட ஓர் உணர்ச்சி. தேவையற்ற சண்டை, பிரமாண்டம், ஆபாசம் இல்லாமல் ஒரு யதார்த்த காதல் சேர்ந்த குடும்பக் கதையாக இருப்பது ரசிக்க வைக்கிறது.

# ஆச்சரியப்படுத்தும் கோலியின் சாதனைகள்!



இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரான விராட் கோலி, சர்வதேச கிரிக்கெட் களத்தில் தடம் பதித்து 14 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. அவர் கடந்து வந்துள்ள இந்தப் பாதையில் பதிவு செய்துள்ள சில சாதனைத் தடங்களை மீள்பதிவோம்.

நவீன கிரிக்கெட்டின் மகத்தான வீரராக போற்றப்பட்டு வருகிறார் விராட் கோலி. கிரிக்கெட் உலகின் சாதனைப் புத்தகத்தில் அநேக இடங்களில் அவரின் பெயர் இடம் பிடித்திருக்கும். இன்றைய இந்திய கிரிக்கெட் அணியின் புலிப் பாய்ச்சலுக்கு காரணகர்த்தாவான வீரர்களில் ஒருவர் அவர்.

கடந்த 14 ஆண்டுகளுக்கு முன்னர் (2008) ஒகஸ்ட் 18ஆம் திகதி இலங்கை மண்ணில் நடைபெற்ற ஒருநாள் கிரிக்கெட் தொடரில் சேவாக் மற்றும் சச்சினுக்கு மாற்று வீரராக சர்வதேச கிரிக்கெட் களத்தில் அறிமுக வீரராக விளையாடினார் கோலி.

முதல் போட்டியில் 12 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். ஐந்து போட்டிகள் கொண்ட அந்தத் தொடரின் நான்காவது போட்டியில் 66 பந்துகளுக்கு 54 ஓட்டங்கள் எடுத்திருந்தார். அதுதான் சர்வதேச கிரிக்கெட் அரங்கில் அவர் பதிவு செய்த முதல் அரை சதம்.

உள்ளூர் கிரிக்கெட்டில் அசத்தி 19 வயதுக்கு உட்பட்டோருக்கான இந்திய அணியில் இடம்பிடித்தார் கோலி. மலேசியாவில் நடைபெற்ற 19 வயதுக்கு உட்பட்டோருக்கான உலகக் கிண்ணம் - 2008 தொடரில் அவரின் தலைமையிலான இந்திய அணி சம்பியன் பட்டம் வென்றது. இதன் மூலம் வெளிச்சத்துக்கு வந்தார்.

தொடர்ந்து இந்திய அணியிலும் இடம் பிடித்தார். தனக்கு கிடைத்த வாய்ப்புகளைக் இறுக்கமாகப் பிடித்துக் கொண்டார் கோலி. அதன் மூலம் கிரிக்கெட் விளையாட்டில் தன்னை ஒரு சிறந்த வீரர் என நிரூபித்தார். தனது 14ஆவது ஒருநாள் போட்டியில் முதல் சதத்தை பதிவு செய்தார். 2010-இல் இருபது - 20 மற்றும் 2011இல் டெஸ்ட் கிரிக்கெட்டிலும் அறிமுகமானார்.

இதுவரையில் மொத்தம் 463 சர்வதேச போட்டிகளில் (டெஸ்ட், ஒருநாள் மற்றும் இருபது - 20) விளையாடி உள்ள அவர் 23,726 ஓட்டங்களை எடுத்துள்ளார் இதில் 70 சதங்கள் மற்றும் 122 அரைச்சதங்கள் அடங்கும். ஒருநாள் கிரிக்கெட்டில் 262 போட்டிகளில் விளையாடி 43 சதங்கள் விளாசியுள்ளார். மொத்தம் 12,344 ஓட்டங்கள் குவித்துள்ளார்.

சச்சின் டெண்டுல்கர், சங்ககரா, றிக்கி பொண்டிங், ஜெயசூர்யா, ஜெயவர்த்தன போன்ற ஜாம்பவான்களுக்கு அடுத்ததாக ஒருநாள் கிரிக்கெட்டில் அதிக ஓட்டங்களைக் குவித்துள்ள துடுப்பாட்ட வீரராக கோலி திகழ்கிறார்.

"இதெல்லாம் 14 ஆண்டுகளுக்கு முன்னர் தொடங்கியது. இது எனக்கு கிடைத்த கௌரவம்" என சொல்லி வீடியோ ஒன்றையும் கோலி பகிர்ந்துள்ளார். தற்போது அவருக்கு 33 வயதாகிறது. எப்படி பார்த்தாலும் குறைந்தபட்சம் இன்னும் 3 ஆண்டுகள் அவர் சர்வதேச கிரிக்கெட்டில் துடிப்புடன் விளையாடுவார். அந்த நாட்களில் அவர் மேலும் பல சாதனைகளை படைப்பார் என அவரது ரசிகர்கள் எதிர்பார்த்துள்ளனர்.

> மொத்தம் 463 சர்வதேச போட்டிகளில் (டெஸ்ட், ஒருநாள் மற்றும் இருபது - 20) விளையாடி உள்ள கோலி 23,726 ஓட்டங்களை எடுத்துள்ளார். இதில் 70 சதங்கள் மற்றும் 122 அரைச்சதங்கள் அடங்கும். ஒருநாள் கிரிக்கெட்டில் 262 போட்டிகளில் விளையாடி 43 சதங்கள் விளாசியுள்ளார். மொத்தம் 12,344 ஓட்டங்கள் குவித்துள்ளார்.



# உண்மைக்காக காத்திருங்கள்...!

மன்செஸ்டர் யுனைற்றெட் கழக அணியுடனான தனது எதிர்காலம் குறித்து அடுத்த இரண்டு வாரங்களில் தெரிவிப்பதாக உதைபந்தாட்ட வீரர் றொனால்டோ கூறியுள்ளார். இந்த விவகாரத்தில் ஊடகங்கள் பொய் சொல்லி வருகின்றன என்றும் அவர் சாடியுள்ளார்.

உதைபந்தாட்ட உலகின் நட்சத்திர வீரர்களில் ஒருவர் றொனால்டோ. 37 வயதான அவர் போர்த்துக்கல் நாட்டை சேர்ந்தவர். தற்போது மன்செஸ்டர் யுனைற்றெட் கழகத்துக்காக அணிக்காக விளையாடி வருகிறார். கடந்த 2021இல் இரண்டு ஆண்டுகளுக்கு அவரை ஒப்பந்தம் செய்தது மன்செஸ்டர் யுனைற்றெட்.

2022-23 பிறீமியர் லீக் தொடரில் அந்த அணி லீக் சுற்றின் முதல் இரண்டு போட்டிகளிலும் தோல்வியை தழுவியுள்ளது. இதன் காரணமாக புள்ளிப் பட்டிய லில் கடைசி இடத்தில் உள்ளது அந்த அணி. இந்தச் சூழலில் மன்செஸ்டர் யுனைற்றெட் அணியுடனான எதிர்காலம் குறித்து பேசப்பட்டு வருகிறது.

குறிப்பாக, எதிர்வரும் செப்ரெம்பர் முதலாம் திகதி அன்று நிறைவு பெறவுள்ள கோடை அணிப் பரிமாற்றம் நிறைவு பெறுவதற்குள் றொனால்டோ, மன்செஸ்டர் யுனைற்றெட் அணியிலிருந்து வெளி யேறுவார் என எதிர்பார்க்கப்படுவதாக ஐரோப்பிய செய்தி நிறுவனங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதற்குதான் தற்போது எதிர்வினையாற்றியுள்ளார் றொனால்டோ.

"இது தொடர்பான உண்மை என்னவென்று அடுத்த இரண்டு வாரங்களில் வெளிச்சத்துக்கு வரும். இந்த விவகாரத்தில் ஊடகங்கள் பொய் சொல்லி வருகின்றன. என்னிடம் உள்ள குறிப்புப் புத்தகத்தில் கடந்த சில மாதங்களாக என்னைப் பற்றி வெளி வந்துள்ள 100 செய்திகளில் வெறும் 5தான் சரியானவை" என தெரிவித்துள்ளார்.

அதேநேரத்தில் உண்மையை சொல்ல எதற்கு இரண்டு வாரங்கள்வரை காத்திருக்க வேண்டும். இப்போதே சொல்லலாம் என றொனால்டோவின் சக கழக அணி வீரர் நெவல்லே.



**பி.எச்.அப்துல் ஹமீத்தின்**

எஸ்.கே. ராஜென்

**புலம்பெயர் மடல்**

# வானலைகளில் ஒரு வழிப்போக்கன் நூல் கனடாவில் வெளியிடப்பட்டது!

தமிழ் கூறும் நல்லுலகில் வாசிப்பை நேசிப்பவர்கள் குறைவடைந்து வருகிறார்கள் என்ற கருத்து நிலைபெற்றிருக்கும் காலம் இது.

தமிழ் எழுத்து இணையத்துக்கு வந்த பின்னர் நூல்களைத் தேடி வாசிப்போர் எண்ணிக்கை குறைவடைந்து வருகிறது என்பதும் உண்மைதான்.

ஆனால், வேறு மொழிகளைப் பேசுவோர், எழுதுவோர் எவரும் இவ்வகையான கருத்துக்களைப் பதிவு செய்வதில்லை. அவர்கள் தமது மொழிகளின் வாசிப்புக்கு, எழுத்துக்கு ஏற்ற விடயங்களை நவீனப்படுத்தி வாசிப்பையும் எழுத்தையும் வளப்படுத்திக் கொள்கிறார்கள்.

இது தமிழ் மொழிக்கும் தேவை. தமிழ் மொழியிலும் வளப்படுத்தல்கள் நிகழ்ந்துள்ளன-நிகழ்கின்றன.

ஆனால், தமிழில் வாசிப்பு, எழுத்து, பேச்சு என்பவை பேணப்பட வேண்டும். அப்பொழுதுதான் மொழி ஆளுமை பெறும், இனம் வாழும்.

பத்திரிகைகளைக் காலையில் வாசித்துப் பழக்கப்பட்டுவிட்டால் அந்தக் கடமையை தினமும் மேற்கொள்ள முடியும். இப்பொழுது பத்திரிகைகள் நீங்கள் இருக்கும் இடத்துக்கு உங் கள் கரங்களுக்கே கொண்டு வந்து சேர்க் கப்படுகிறன. அப்படியெனில் வாசிப்பதில் ஏன் சோர்வடைய வேண்டும். வாசிப்போம் பேசுவோம்.

தமிழ் உலகம் பரந்து விரிந்துள்ளது.

உலகின் பல பகுதிகளிலிருந்தும் தமிழ் படைப்புக்கள் வெளியாகின்றன.

அவை பற்றி நாம் அறிந்திருந்தாலும் அவற்றில் கவனம் செலுத்திவது என்பது குறைவாக உள்ள குறைபாடு உடையவர்களாக ஈழத்தமிழர்களாகிய நாம் இருக்கிறோம் என்பது வேதனை தரும் விடயம்.

நம்மிடையே வாழும் ஆளுமையாளர்கள் தமது அனுபவப் பெட்டகத்தைத் திறந்து அதற்குள் இருக்கும் ஆழமான விடயங்களை பிழிந்தெடுத்துப் பதிவிடுகிறார்கள்.



அந்த அனுபவப் பிழிவுகள் எமக்கும் எதிர்காலச் சந்ததிக்கும் தேவையானவை.

எதிர்கால ஆய்வாளர்களுக்கு வேண்டிய துறைசார் விடயங்கள் ஒவ் வொரு படைப்பாளிகள் மூலமாக வெளிக்கொணரப்படுகின்றன.

அந்த வகையில் இலங்கை ஒலிபரப்புத் துறையில் ஆறு தசாப்தங்களுக்கு மேலாகப்பயணிக்கும் உலகத் தமிழ் ஒலிபரப்பாளர் பி.எச்.அப்துல் ஹமீத் முதன் முதலாக எழுதியுள்ள நூல் ‘வானலைகளில் ஒரு வழிப்போக்கன்’ கனடாவிலும் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த நூலின் தரம் புரிந்து முதல் வெளியீடு கடந்த ஜூலை முதல் வாரத்தில் அமெரிக்கா ஃபெட்னாவில் நடைபெற்ற முத்தமிழ் விழாவில் நடைபெற்றது.


‘வானலைகளில் ஒரு வழிப்போக்கன்’ நூலின் கனடா வெளி யீட்டுவிழா கடந்த 12ம் திகதி வெள்ளிக்கிழமை சிறிகாந்தா சோமநாதன் இயக்கிவரும் தமிழோசை சினி மீடியா நிறுவனத்தால் நடத்தப்பட்டது.

12, 13, 14 ஆகிய நாள்க ளில் ஒழுங்கு செய்யப்பட்டி ருந்த கோடையில் ஒரு கொண்டாட்டம் கலைவிழா வின் முதல் நாள் நிகழ்ச்சியாக பி.எச்.அப்துல் ஹமீத்தின் ‘வானலைகளில் ஒரு வழிப் போக்கன்’ நூல் வெளியீடு நடைபெற்றது.

அன்பு அறிவிப்பாளர் பி.எச்.அப்துல் ஹமீத் அவர்கள் மீது அன்பும் மரியாதையும் கொண்ட, கனடா தமிழோசை-சினி மீடியா இயக்குநர் சிறிகாந்தா சோமநாதன், இந்த நூலின் வெளியீட்டை கன டாவில் நிகழ்த்துவதற்கான பணிகளை அயராது மேற்கொண்டு, அதனை நிகழ்த்தியுள்ளார்.

திறந்தவெளியில் பிரமாண்டமான ஏற்பாடுகள். ஒலி, ஒளி சீர்படுத்தலில் தாமதம் ஏற்பட்டபொழுதிலும் நூல் வெளியீடு சிறப்பாக நடைபெற்றது.

பி.எச்.அப்துல் ஹமீத் அவர்களை சிறிகாந்தா சோமநாதன் ஆள் அளவு மலர் மாலை அணிவித்து அரங்கில் வரவேற்றுக்கொண்டார்.



கலாநிதி இளையதம்பி பாலசுந்தரம் தலைமையுரையாற்றினார்.

இலங்கை வானொலியில் பி.எச்.அப்துல் ஹமீத் அவர்களுடன் இணைந்து பணியாற்றிய பி.விக்னேஸ்வரன், வி.என். மதி அழகன், கனேடிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபன இயக்குநர் இளைய பாரதி ஆகியோரும் உரையாற்றினார்கள்.

இளம் ஊடகவியலாளர் உதயன் எஸ்.பிள்ளை நூலின் ஆய்வுரையை வழங்கியிருந்தார்.

கனடா ‘தமிழர் தகவல்’ முதன்மை ஆசிரியர் திரு.எஸ்.திருச்செல்வம், ரூபவாஹினி முன்னாள் செய்தி வாசிப்பாளர் திருமதி மனோகரி சதாசிவம், கனடா உதயன் பத்திரிகை பிரதம ஆசிரியர் திரு.ஆர். என்.லோகேந்திரலிங்கம், ஈஸ்ற் எவ் எம் இயக்குநர் திரு.நடாராஜ் குமார், தென்னிந்தியத்திரைப்பட நடிகர் விதார்த் ஆகியோரும் அரங்கை அலங்கரித்திருந்தனர்.

கனடாவில் நூலின் முதல் பிரதி, இலங்கை வானொலியில் எஸ்.பி.மயில்வாகனன் அவர்களுடன் ஒன்றாகப் பணியாற்றிய முன்னாள் அறிவிப்பாளர் வி.நாகலிங்கம் அவர்கள் கரங்களால், இளைய பாரதி அவர்களுக்கு வழங்கப்பட்டது.

சிறப்புப்பிரதிகளை சிறிகாந்தா சோமநாதன் வழங்க, வைபிரண்ட் ஹொஸ்பிலரிற்றி இயக்குநர், வர்த்தகப் பிரமுகர் சங்கர் நல்லதம்பி பெற்றுக்கொண்டார்.

அவரை அடுத்து பல வர்த்தகப் பிரமுகர்களும், வானொலி, தொலைக்காட்சி ஊடகங்களைச் சேர்ந்தவர்களும், நண்பர்கள், அபிமானிகள் எனப் பலரும் மேடையில் நூலைப் பெற்றுச் சிறப்பித்தனர்.

‘வானலைகளில் ஒரு வழிப் போக்கன்’ வெளியீட்டு விழா நிகழ்ச்சிகளை எஸ்.கே.ராஜென், ஈஸ்ற் எவ் எம் மதுமிதா ஆகியோர் தொகுத்து வழங்கினர்.

பி.எச். அப்துல் ஹமீத் எழுதியுள்ள முதல் நூல் ‘வானலைகளில் ஒரு வழிப்போக்கன்’ வெளியீடுகள் ஒக்ரோபர் 1ம் திகதி சுவிற்சர்லாந்திலும், ஒக்ரோபர் 8ம் திகதி லண்டன் மாநகரிலே புகழ் பூத்த ‘வின்ஸ்டன் சேர்ச்சில்’ மண்டபத்திலும், 16ம் திகதி பரிஸ் மாக்ஸ்டோமுவா தேவாலயக் கலையரங்கிலும் நடை பெறவுள்ளன.

---



**உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி**

**வியுக்தியார் பதில்கள்**
**ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**
viyukthiyar@gmail.com

## வியுக்தியார் பதில்கள்

**கே. சிரோஷன், தன்னாமுனை, மட்டக்களப்பு**

**கேள்வி:**

இந்தியா எவ்வளவுதான் சொல்லியும் இலங்கை கேட்கவில்லையே. கடைசியில் சீனாவின் கப்பலை அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு வருவதற்கு அனுமதி வழங்கிவிட்டதே. இதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்.?

**வியுக்தியார்:**

இப்படித்தான் நடக்கும் என்பது இந்தியாவுக்கும் தெரிந்ததுதான். இலங்கை எல்லாவிடயங்களையுமே இப்படி சிறுபிள்ளைத்தனமாகத்தான் முடிவெடுக்கின்றது என்பது இந்தியாவிற்கு நன்கு தெரியும் என்பதால் அதனை பெரிதுபடுத்தாது என்று நினைக்கின்றேன். கப்பல் அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு வருவதற்காக ஜூலை 12ம் திகதி சீனா அனுமதியைக் கோரியிருக்கின்றது. இரண்டுநாட்களிலேயே அதற்காக அனுமதியை இலங்கையின் வெளிநாட்டமைச்சும் பாதுகாப்பு அமைச்சும் வழங்கியிருக்கின்றன. அதன்பின்னரே கப்பல் சீனாவிலிருந்து கிளம்பியிருக்கின்றது. அப்படியிருக்கையில் அதனை எப்படி தடுக்கமுடியும்? இது இந்தியாவுக்கும் தெரிந்ததுதான். ஆனால் இந்த அனுமதியை சிறுபிள்ளைத்தனமாக வழங்கிய இந்த இரண்டு துறைகளையும் சார்ந்த அதிகாரிகளை “கவனிக்காத“வரை இதுபோன்ற தவறுகள் தொடரத்தான் செய்யும்.

---

**ரமணன் நிரோஷ், அலாலி வடக்கு, அராலி.**

**கேள்வி:**

புலம்பெயர்ந்த அமைப்புக்கள் சிலவற்றின் தடையை அரசாங்கம் நீக்கியிருக்கின்றது. அதனையும் சில புலம்பெயர் அமைப்புக்கள் கண்டிக்கின்றனவே. தடை செய்தாலும் கண்டிக்கிறார்கள். நீக்கினாலும் கண்டிக்கிறார்கள். ஒன்றுமே எனக்கு விளங்கவில்லை.

**வியுக்தியார்:**

ஆயுதப் போராட்டம் தீவிரமாக தொடங்கி நடந்துகொண்டிருந்த காலம். அப்போது ஜே.ஆர். ஜெயவர்த்தனா ஜனாதிபதியாக இருந்தார். அவருக்கு மிக நெருக்கமாக இருந்த ஒரு பிரபல தமிழ் பொலிஸ் அதிகாரி ஜே.ஆரிடம் கூறினாராம், “சேர் நீங்கள் இப்ப தமிழ்ஈழம் தாறன் என்று அறிவித்தாலும், அவர்கள் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கின்றது என்றுதான் சொல்வார்கள்“ என்று. மாகாணசபைக்கு அதிகாரங்கள் போதுமானதாக இல்லாவிட்டாலும், கிடைத்த சில அதிகாரங்ளை பயன்படுத்த தெரியாதவர்கள் தான் நாங்கள்.

---

**ஆ. காந்தன், வெள்ளவத்தை, கொழும்பு.**

**கேள்வி:**

இலங்கையின் கடற்பாதுகாப்புக்கு இந்தியா விமானம் ஒன்றை இலவசமாக வழங்குகின்றது. அதேவேளையில், சீனா தனது உளவுக்கப்பலை இலங்கைக்கு அனுப்புகின்றது. ஒன்றுமே புரியவில்லையே?

**வியுக்தியார்:**

மனைவிக்கும் துணைவிக்கும் வித்தியாசம் தெரியுமா உங்களுக்கு. மனைவி என்பது உத்தியோக பூர்வமாக திருமணம் செய்வதால் கிடைக்கின்ற உறவு. துணைவி என்பது உத்தியோகபூர்வமற்ற உறவால் கிடைக்கின்ற உறவு. முதலாவது எப்போதும்- கணவன் தனக்கு என்ன துரோகம் செய்தாலும், கணவனின் தேவைகளை கவனிப்பவள்.

ஆனால் துணைவி என்பது தனக்கு கணவனிடமிருந்து கிடைக்கின்ற நன்மைகளை மாத்திரம் எதிர்பார்த்து காத்திருப்பவள். இலங்கைக்கு மனைவி என்றால் அது இந்தியா, துணைவி என்றால் சீனா. புரிந்திருக்கும் என்று நினைக்கின்றேன்.

---

**ஆர். ஜெயபாரதி, குறுக்கு வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.**

**கேள்வி:**

நாட்டின் தேசிய ஐக்கியம் மற்றும் இனப்பிரச்னை தீர்வு தொடர்பிலும், ஊழலற்ற நிதி நிர்வாகம் தொடர்பிலும் ஒரு குறைந்தபட்ச பொது கோட்பாடுகளை இலங்கை அரசுபுலம்பெயர் இலங்கையர்களை நோக்கி உத்தரவாதமாக அறிவித்தால் புலம்பெயர் இலங்கையர்களை சந்தித்து பேசி இலங்கையின் 55 பில்லியன் டொலர் கடன் பிரச்னைக்கு தீர்வுகாண உதவுவதற்கு தான் தயாராக இருப்பதாக மனோ கணேசன் கூறுகிறாரே?

**வியுக்தியார்:**

அவர் கேட்கின்ற விடயங்களை அரசாங்கம் செய்யமாட்டாது என்பதை நூறுக்கு இருநூறு வீதம் தெரிந்துகொண்டவர் மனோ கணேசன். நாட்டின் கடனை மாத்திரமல்ல, இன்னும் 55 பில்லியன் அதிகமாக சேர்த்து வருகிறேன் என்றே அறிவித்திருக்கலாம்.

கே.எஸ்.சுதாகர்

# பூவண்ணம்



"சாகித்தியா" நீ ஒண்டுக்கும் யோசியாதை. எல்லாம் நல்லபடியா நடக்கும். நான் ஒருக்கா ரெலிபோன் பூத் வரைக்கும் போட்டு வாறன்." படுக்கையில் இருந்த என்னைக் கட்டிப் பிடித்துக் கொஞ்சினாள் பமீலா. கண்ணீரைத் தன் கைகளினால் துடைத்துவிட்டாள். இரவு முழுவதும் நான் உறங்கவில்லை என்பதை அவள் அறிவாள்.

"இண்டைக்கு கனடாக் கோல் வருமெண்டு ராஜன் அண்ணா சொன்னவரா?"

"ஓம் சாகித்தியா" கொஞ்ச நேரத்துக்கு முன்னாலை வந்து சொல்லிட்டுப் போனவர். நான் மாத்திரம் போய்க் கதைச்சிட்டு வாறேன்."

நான் சென்றால் அழுது ஒப்பாரி வைப்பேன் என்பதால், என்னைக் கூட்டிச் செல்வதைத் தவிர்த்தாள் பமீலா. அவள் படிகளில் இறங்கிக் கீழே போகவும், நான் படுக்கையில் இருந்து எழுந்து மாடிமுகப்புக்குப் போனேன். கீழே நின்று, கையைக் காட்டிவிட்டு நடக்கத் தொடங்கினாள் பமீலா.

பமீலா என்னைவிட மூன்று வயது சிறியவள். என்னுடன் கணினித் துறையில் செயல்முறைப் பயிற்றாசிரியராக வேலை செய்கின்றாள். நான் இந்த வாடகை வீட்டில் இரண்டு வருடங்களாக இருந்து வருகின்றேன். எட்டு மாதங்களுக்கு முன்னர் தான், நான் பமீலாவை இங்கே கொண்டு வந்து சேர்த்தேன்.

மூன்று நாட்களுக்கு முன்னர், கனடாவில் இருந்து ரமணனின் கடிதம் வந்தது முதல் நான் செயலற்றுப் போனேன். என்னால் எதையுமே செய்ய முடியவில்லை. வேலைக்கும் போகவில்லை. இந்த மூன்று நாட்களில் ரொயிலற் பாத்றூம் என நான்கு தடவைகள் தான் நான் அறையை விட்டு வெளியே போனேன்.

ஹஎன்னை மறந்துவிடு சாகித்தியா' கடிதத்தில் இருந்தது இதுதான்.

உடனே ரமணனுடன் தொடர்பு கொள்ள முயற்சித்தேன். அவனுக்கான ரெலிபோன் இணைப்பு துண்டிக்கப்பட்டிருந்தது. அதற்குப் பின்னர் பல தடவைகள் ஹகொமியூனிக்கேசன் சென்ரர்' சென்று முயற்சித்தும் பலன் கிடைக்கவில்லை. எமது வீட்டுக்கு இடப்புறமாக, இரண்டு வீடுகள் தள்ளி, ஒழுங்கையின் கடைசி வீட்டில் இருக்கும் ராஜன் அண்ணா கொமியூனிக்கேசன் சென்ரரில் வேலை செய்வதால், அவரும் பல தடவைகள் முயற்சித்துப் பார்த்துவிட்டார்.

"உன்ரை தங்கைச்சிமாரை, அம்மாவை யோசிச்சுப் பார். நீதானே வீட்டிலை மூத்த பிள்ளை" உன்னோடை கதைக்கப் பிடிக்காதவனை, வாழப்பிடிக்காதவனை நினைச்சு ஏன் வருந்துகிறாய்? சில மாதங்களாகப் பழகிப் பிரிந்தவனை நினைச்சுக் கலங்காதை! விட்டுத்தொலை!" என்கின்றாள் பமீலா.

இப்பிடிச் சொன்ன பமீலா தான், பின்னர் எனக்கு உதவ முன் வந்தாள். அவளுக்கு கனடாவில் உறவினர்களும் சில நண்பர்களும் இருந்தார்கள். நண்பி ஒருவர் மூலம் ரமணனைப் பற்றி அறியும் முயற்சியில் தொடர்பு கொண்டாள். அவள் ரமணனைப் பற்றி அறிந்துவிட்டு தொலைபேசி எடுப்பதாகச் சொல்லியிருந்தாள். பமீலா என்ன செய்தியுடன் வருவாள்? என் இரு தயம் பலமாக அடிக்கத் தொடங்கியது. மண்டை வெடித்துவிடுமாப் போல தலை விட்டுவிட்டு வலித்தது.

வெளியே எட்டிப் பார்த்தேன். பமீலா, எங்களது ஒழுங்கையில் இருந்து ஹபிக்கறிங்ஸ் வீதிக்கு' அடியெடுத்து வைத்துக் கொண்டிருந்தாள். பிக்கறிங்ஸ் வீதியிலிருந்து வலதுபுறம் திரும்பி, கொட்டகேன வீதிக்குச் சென்றால் ஹகொமியூனிக்கேசன் சென்ரர்' வரும். அங்கு சென்றுவர குறைந்தது அரை மணி நேரமாவது எடுக்கும்.

என் மனம், ரமணனை முதன் முறையாகச் சந்தித்த நிகழ்விற்குத் தாவியது.

எமது குடியிருப்பு ஹபிக்கறிங்ஸ்' வீதியிலிருந்து ஒரு கிளையாக நீட்டிக்கொண்டிருக்கும் ஒழுங்கையில் இருந்தது. சில மாடிவீடுகள் உட்பட, இருபத்தி இரண்டு வரை வீடுகளுக்கு இலக்கங்கள் இடப்பட்டிருந்தன. சிங்களவர் தமிழர் என பலரது குடியிருப்புகள். ஒரு வாகனம் இன்னொரு வாகனத்தை விலத்த முடியாத ஹநோ எக்ஷிற்' ஒழுங்கை.

அப்பெல்லாம் நாட்டுச் சூழ்நிலையினால் மக்கள் - இத்தாலி, சுவிஸ், பிரான்ஸ், ஜேர்மனி, கனடா என்று வெளிநாடுகளுக்குப் போகத் தொடங்கி, முழத்துக்கு முழம் ஹகொமியூனிக்கேசன் சென்ரர்கள்' உருவாகியிருந்தன. வீடுகளில் தொலைபேசி இருந்தாலும் ஹஇன்கமிங்' அழைப்பு மாத்திரம் தான் இருந்தது. வெளிநாட்டில் உள்ளவருடன் கதைக்க வேண்டுமாயின் கொமியூனிக்கேசன் சென்ரருக்குத்தான் போக வேண்டும். ஹஉலகத்திற்கு அதிகளவு அகதிகளை உற்பத்தி செய்த நாடு இலங்கை தான்' என்று அப்பா அடிக்கடி சொல்வார்.

இன்னொரு பக்கம் பொலிசும் இராணுவமும், தலைநகர் கொழும்பிலும் அதைச் சூழ்ந்துள்ள பிரதேசங்களிலும் புலிகளைத்தேடி தமிழ் மக்களை வேட்டையாடித் திரிந்தார்கள். நள்ளிரவில் கொட்டகேன பொலிஸ் ஸ்ரேசனுக்கு அண்மையாகக் கிழம்பும் நாய்க்குரைப்பு, மெல்ல விசாலித்து ஊருக்குள் பவனி வரும். விடியப் பேப்பரைப் பார்த்தால் ஹஇத்தனை பேரைப் பிடிச்சிருக்கினம்' என்று நியூஸ் வரும். எங்கள் ஒழுங்கையில், இரண்டாம் நம்பர் வீட்டில், ஒரு ஹகாக்கும் கடவுள்' இருக்கின்றார். அவர் ஒரு தமிழ்ப் பொலிஸ். ஒழுங்கையில இருக்கிற அத்தனை வீடுகளையும், தன்னுடைய கண்காணிப்பில வைச்சிருக்கின்றார். அவரின் கருணையாலை எங்கட ஒழுங்கைக்குள்ளை தேடுதல் வேட்டைக்கு ஒருத்தரும் வாறதில்லை. நானும் பமீலாவும் மூசி மூசி இரவு நித்திரை கொள்வோம்.

ஒரு ஞாயிற்றுக்கிழமை காலை. மொட்டைமாடியிலிருந்து காற்று வாங்கிக் கொண்டிருந்தேன். மொட்டை மாடியில் சில பூச்சாடிகளும் இரண்டு பிளாஸ்ரிக் கதிரைகளும் இருக்கின்றன. தூரத்தே பர்ணசாலையில் இருந்து பிரித் ஓதும் சத்தம் கேட்குமளவுக்கு சுற்றாடல் அமைதியாக இருந்தது. பமீலா இன்னும் நித்திரை விட்டு எழவில்லை. தூரத்தே ஒரு முச்சக்கரவண்டி வந்துகொண்டிருந்தது. எமது வீட்டுக்கு நேர் எதிராகவிருந்த வீட்டின் முன்பாக நின்றது. அதற்குள்ளிருந்து ஒரு தாயும் மகனும் சில பொதிகளுடன் இறங்கினார்கள். அவர்களது தோற்றங்கள் எனக்கு அப்படித்தான் உணர்த்தின. கடந்த மூன்று மாதங்களாக அந்த வீடு பூட்டிக் கிடந்தது. கேற்றின் சங்கிலியில் தொங்கிய பூட்டை அந்தப் பெண்மணி திறந்தார். பின்னர் குதிக்கால் எத்தலுடன், கழுத்தை உயர்த்தி பறவை போல சுற்றுமுற்றும் பார்த்தார். உள்ளே போய்விட்டார். மகன் ஒவ்வொரு பொதிகளாக உள்ளே எடுத்துச் சென்றான். அவர்கள் கண்களுக்கு நான் மொட்டை மாடியில் இருந்தது தெரியவில்லை. அந்த வீட்டில் பெரும்பாலும் ஆக்கள் இருப்பது குறைவு. உரிமையாளர் புத்தளத்தில் ஒரு கடை வைத்திருப்பதாகவும், கொழும்பு வரும் வேளைகளில் அங்கு வந்து தங்கிக் கொள்வார்கள் எனவும் அறிந்தேன். சில வேளைகளில் அவர்களின் உறவினர்கள் வந்து தங்கிச் செல்வதுண்டு.

சற்று நேரத்தில் உள்ளே சென்ற பையன் ஒரு தேநீர்க் கோப்பையுடன் வெளியே வந்தான். கேற்றைப் பிடித்துக் கொண்டு சுற்றுமுற்றும் தேடுதல் செய்தான். கருகருவென்று அடர்ந்த மீசை, தலைமுடியையை கோடை காலத்துக்கு ஏற்றவாறு அளவாக வெட்டியிருந்தான். அவனைப் ஹபாஸ் போர்ட்' அளவில் படம் பிடித்தால் நடிகர் அரவிந்த சாமி போலவும், முழுப்படத்தில் அகத்தியர் போலவும் இருப்பான்.

அந்த நேரத்தில் மொட்டை மாடியிலிருந்த றோசாச்செடியிலிருந்து ஒரு பூவை இழுத்து முகர்ந்து கொண்டிருந்தேன். கேற்றில் ஹடங் டங்' என்று சத்தம் கேட்டது. சத்தம் வந்த திசை நோக்கிப் பார்க்கையில் அவன் என்னையே பார்த்தபடி நின்றான். லேசாகச் சிரித்தான். திடீரென்று என் கைகளைப் பிடித்த பமீலா, என்னை உள்ளே அறைக்குள் இழுத்தாள். நான் அந்தப் பையன் பற்றி பமீலா விடம் சொன்னேன்.

"அதற்குள்ளேயே கண் போட்டு விட்டாயா?" கேலி செய்தாள் பமீலா. பின்னர் இரு வருமாக வெளியே வந்து பார்த்த போது, தன் வீட்டு முற்றத்தில் ஒரு கதிரையைப் போட்டு புத்தகம் ஒன்றை விரித்துப் பார்த்தபடி இருந்தான் அவன்.

மறுநாள் அதிகாலையில் விழித்தெழுந்த அவன், நானும் பமீலாவும் வேலைக்குப் போவதைப் பார்த்தபடி நின்றான். இரண்டாம் நாள் எங்களைப் பின் தொடர்ந்தான். மூன்றாம் நாள் எங்களுக்கு முன்பாகவே போய், பஸ் ஸ்ராண்டில் காத்து நின்றான். நாங்கள் ஏறிய பஸ்சிலே அவனும் ஏறிக் கொண்டான். பமீலா என்னைப் பார்த்துச் சிரித்தாள். நாங்கள் இருவரும் விறுவிறெண்டு பின்புறம் நகர்ந்து சென்று, பின் இருக்கை களில் அமர்ந்து கொண்டோம். தூரத்தே நின்று எங்களைப் பார்த்தான். எனது இருக்கைக்கு அருகில் ஒரு வெற்றிடம் இருந்தது. மெதுவாக நகர்ந்து வந்து அதில் அமர்ந்து கொண்டான். அவன் உடல் என்னைச் சிறிது நெருக்கியது. பமீலா என் தொடையில் பலமாகக் கிள்ளினாள்.

"வேலைக்குப் போகின்றீர்களா?" என்னைப் பார்த்துக் கேட்டான் அவன். நான் பேசாமல் வாய் மூடி மௌனமாய் இருந்தேன்.

"கட்டாயம் தெரிந்து கொள்ள வேண்டுமோ?" பமீலா எரிந்து விழுந்தாள்.

நான் பமீலாவின் கையை அழுத்தி, பேசாமல் இருக்குமாறு ஜாடை செய்தேன். அதன் பிறகு அவன் ஒன்றும் பேசவில்லை. ஹகிராண்ட்பாஸ்' வீதிக்கு அருகாமையில் இறங்கிக் கொண்டான்.

வேலை முடிந்து மாலை வீட்டிற்கு வந்து கொண்டிருந்தபோது, தனது வீட்டு வாசலில் நின்று எங்களைப் பார்த்தபடி நின்றான். இருவரும் நேநீர் தயாரித்து எடுத்துக் கொண்டு மொட்டை மாடிக்குச் சென்றோம். அப்போது அவனது கண்கள் மொட்டைமாடி நோக்கி விரிந்திருந்தன. பமீலா தன் இரண்டு கைகளையும் ஒன்றாக இணைத்து, குழந்தை ஒன்றைத் தாலாட்டுவது போல அபிநயித்து உனக்குக் குழந்தை வேண்டுமா? என்று சைகையால் கேட்டாள். அவன் வெட்கம் தாளாமல் வீட்டிற்குள் ஓடினான்.

அந்தக் காலங்கள் கொஞ்சம் அட்டகாசமானது. இளம் கன்று பயமறியாது அல்லவா? ஆனாலும் பமீலா இதில் சூடு கண்ட பூனை. அக்கறையுடன் அவதானமும் கொண்டவள் அவள்.

"சாகித்தியா" அவன் உன் மீதுதான் கண் போட்டிருக்கின்றான். நான் உள்ளே போகின்றேன்."

பமீலா உள்ளே சென்றதும், அவன் மீண்டும் வெளியே வந்தான். கைகளில் அபிநயம் பிடித்து ஏதோ கேட்டான். என்னை நடனம் ஆடச் சொல்கின்றானா? பூவைப் பறித்து தன்னிடம் எறியச் சொல்கின்றானா? புரியாதது போல நின்றேன். உள்ளே சென்றவன் புத்தகம் ஒன்றுடன் திரும்பி வந்தான்.

(மிகுதி அடுத்த வாரம்....)




**கடந்த வாரம் வெளியான சிறுகதையை எழுதியவர் முருகபூபதி. அவரது பெயர் தவறவிடப்பட்டதற்கு வருந்துகின்றோம். (ஆ-ர்)**

# தணலாய் தகிக்கும் ‘டைக்ரே’ மக்கள்:

## மௌனித்து நிற்கும் ஆபிரிக்க தேசம் இனஅழிப்பை தொடரும் எத்தியோப்பியா...

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

எத்தியோப்பிய கூட்டாட்சி அரசின் இராணுவத்திற்கும், டைக்ரே பிராந்தியத்தை ஆளும் “டைக்ரே மக்கள் விடுதலை முன்னணி” இடையே, கடந்த ஒரு வருடமாக உள்நாட்டுப் போர் நடந்து வருகிறது.

பெற்றோரை இழந்து நிற்கும் குழந்தைகள், சொந்த நாட்டை விட்டு வெளியேறும் அகதிகள், பசி, வறுமை, போர், குண்டுகளுக்கு பலி கொடுக்கப்படும் அப்பாவி உயிர்கள், ஆகியவைதான் ஆப்பிரிக்கா கண்டம் என்றதும் நம் மனக் கண்களில் வந்து நிற்கின்றன.

இவை இயல்பாகிப்போன, வறுமையின் குறியீடாக நாம் பொதுவில் அறிந்து வைத்திருக்கும் ஆப்பிரிக்க கண்டத்தில், இரண்டாவது பெரிய நாடான எத்தியோப்பியா, அங்கு கடந்த 12 மாதங்களாக நடைபெறும் உள்நாட்டுப் போரினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

**எத்தியோப்பியாவின் ஆக்கிரமிப்பு:**

இதனால் அந்நாட்டில் ஒரு பதற்றமான சூழல் இருந்துவந்த நிலையில், கொரோனா தொற்றுக் காரணமாக கடந்த ஆகஸ்ட் மாதத்தில் நடக்கவிருந்த தேர்தலும் ஒத்திவைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

இதனை எதிர்த்த டைக்ரே மக்கள் முன்னணி, தான் ஆளும் டைக்ரே பிராந்தியத்தில் மட்டும் தேர்தலை நடத்தி, பிரச்சினையைத் தீவிரமாக்கியது. இத்தேர்தலைச் சட்டவிரோதமானது என்று எத்தியோப்பியா அறிவித்திருந்த நிலையில், நவம்பர் 4, 2020 அன்று அதிகாலையில் டைக்ரே மக்கள் விடுதலை முன்னணி, டைக்ரேயில் உள்ள கூட்டாட்சி அரசு இராணுவ முகாம்கள் மீது தாக்குதல் நடத்தியது.

இத்தாக்குதலுக்கு பதிலடி கொடுக்குமாறு இராணுவத்திற்கு உத்தர விட்டார் எத்தியோப்பிய பிரதமர் அபி அகமது. எத்தியோப்பிய படைகள் டைக்ரே பிராந்தியத்தை நோக்கி தாக்குதலைத் தொடர்ந்தன. இப்படிக் கடந்த நவம்பரில் தொடங்கிய இந்த உள்நாட்டுப் போர், கடந்த பல மாதங்களாக நடந்து வருகிறது.

ஆப்பிரிக்க கண்டத்தில் பூகோள முக்கியத்துவம் வாய்ந்த நாடாக எத்தியோப்பியா இருக்கிறது. இந்நாடு பூகோள ரீதியாக கிழக்கு மற்றும் தெற்கு சூடான், சோமாலியா, எரித்திரியா, சிபூத்தி, கென்யா ஆகிய நாடுகளின் எல்லைகளோடு இணைக்கப்பட்டுள்ள - நிலத்தால் சூழப்பட்ட நாடாகும்.

20-ம் நூற்றாண்டில் ஆப்பிரிக்க கண்டத்தில் முதல் தன்னாட்சி பெற்ற ஐ.நா வின் உறுப்பு நாடாகவும், ஆப்பிரிக்க ஒன்றியத்தின் தலைநகரமாகவும் (அடிஸ் அபாபா - எத்தியோப்பியாவின் தலைநகர்) எத்தியோப்பியா விளங்குகிறது.

**போரின் கொடூரம்:**

இதுவரை ஆயிரக்கணக்கானோர் இப்போரினால் கொல்லப்பட்டுள்ளனர். 5000 குழந்தைகள் பெற்றோருடனான தொடர்பை இழந்துள்ளனர். 2 மில்லியன் மக்கள் தங்கள் சொந்த வீடுகளை விட்டு அகதிகளாக வெளியேறியுள்ளனர். 60,000 பேர் அண்டை நாடான சூடானின் அகதி முகாம்களில் தஞ்சமடைந்துள்ளனர். இதில் பெண்களின் மீது இராணுவத்தால் நடத்தப்படும் கோரமான பாலியல் வன்கொடுமைகளும் அடங்குவதாக சர்வதேச மன்னிப்புச் சபை அறிவித்துள்ளது.

**டைக்ரே மக்கள் விடுதலை முன்னணி**

டைக்ரே மக்கள் முன்னணி அமைப்பானது வடமேற்கு டைக்ரேயில் உள்ள டெடெபிட்டில் 18 பிப்ரவரி 1975 இல் நிறுவப்பட்டது, 16 ஆண்டுகளுக்குள், அது எத்தியோப்பியாவில் மிகவும் சக்திவாய்ந்த விடுதலை இயக்கமாக வளர்ந்தது. இது 1989 முதல் 2018 வரை எத்தியோப்பிய மக்கள் புரட்சிகர ஜனநாயக முன்னணி என்ற அரசியல் கூட்டணியை வழிநடத்தியது.




எரித்ரியன் மக்கள் விடுதலை முன்னணியின் உதவியுடன், டைக்ரே மக்கள் முன்னணி ஆனது எத்தியோப்பியாவின் மக்கள் ஜனநாயகக் குடியரசின் அரசாங்கத்தைக் கவிழ்த்து, 28 மே 1991 அன்று எத்தியோப்பியாவை ஆட்சி செய்த புதிய அரசாங்கத்தை நிறுவியது. பின்னர் 2018 இல் கூட்டாட்சி அரசாங்கத்தின் அதிகாரத்திலிருந்து வெளியேற்றப்பட்டது

**ஒடுக்கப்பட்ட டைக்ரே மக்கள் :**




1889 ஆம் ஆண்டு ஷெவாவின் இரண்டாம் மெனெலிக் பேரரசர் ஆன பிறகு, எத்தியோப்பியாவிற்குள் டைக்ரே மக்கள் ஓரங்கட்டப்பட்டதன் விளைவாக டைக்ரே மக்கள் முன்னணி’ எழுச்சி பெற ஆனது. டைக்ரேன் பாரம்பரிய உயரடுக்கு மற்றும் விவசாயிகள் ஒரு வலுவான பிராந்திய அடையாளத்தைக் கொண்டிருந்தனர் மற்றும் டைக்ரேயின் வீழ்ச்சியால் ஆழமாக வெறுப்படைந்தனர்.

இரண்டாம் உலகப் போரில் இத்தாலிய ஆக்கிரமிப்பிற்குப் பிறகு ஏகாதிபத்திய ஆட்சியை மீண்டும் நிறுவுவதற்கு எதிரான 1942-43 முதல் ஆயுதமேந்திய கிளர்ச்சி நிகழ்ந்தது.

**2020 டைக்ரே தேர்தல் :**

2020 டைக்ரே பிராந்தியத் தேர்தல் 9 செப்டம்பர் 2020 அன்று நடைபெற்றது. இது சர்வதேச பார்வையாளர்களுக்கும் திறந்திருந்தது. 2.7 மில்லியன் மக்கள் தேர்தலில் பங்கேற்றனர். பிரதம மந்திரி அஹமட், மத்திய அரசாங்கம் தேர்தல் முடிவுகளை அங்கீகரிக்காது என்றும், தேர்தலை ஆவணப்படுத்து வதற்காக வெளிநாட்டு பத்திரிகையாளர்கள் டைக்ரேக்கு செல்வதை தடை செய்தது என்றும் கூறினார்.

**மீள டைக்ரே போர்:**

நவம்பர் 2020 இல், டைக்ரே மக்கள் முன்னணி’ மற்றும் எத்தியோப்பியன் தேசிய பாதுகாப்புப் படை இடையே ஒரு உள்நாட்டு மோதல் வெடித்தது. டைக்ரே மக்கள் முன்னணி வடக்குக் கட்டளைத் தலைமையகத்தைத் தாக்கியது. இதன் பின் பலர் டைக்ரே மக்கள் முன்னணி உறுப்பினர்களாக இணைந்தனர்.

இந்த மோதல் நாட்டின் பல பகுதிகளில் மனிதாபிமான நெருக்கடியை ஏற்படுத்தியது, மேலும் இறப்பு எண்ணிக்கை ஆயிரக்கணக்கில் பெருகியது. மார்ச் 2021 வரை, சுமார் 2 மில்லியன் மக்கள் நெருக்கடியால் இடம்பெயர்ந்துள்ளனர், ஆனால் நெருக்கடியின் முழு அளவு தெரியவில்லை.

**டைக்ரே மக்கள் முன்னணி**

எத்தியோப்பிய படைகள் மீது போர்க்குற்றங்கள் இருப் பதாக குற்றம் சாட்டியுள்ளது. ஆனால் அரசாங்கத்தால் திணிக்கப்பட்ட ஊடக இருட்டடிப்பு காரணமாக இந்த கூற்றுக்களை சுயாதீனமாக சரி பார்ப்பது கடினமாகும்.

**அமெரிக்காவின் இராணுவ உதவி :**

எத்தியோப்பிய அரசுடன் போரிட்டுக் கொண்டிருக்கும் டைக்ரே மக்கள் முன்னணி தற்போது அமெரிக்காவின் இராணுவ உதவிகளைப் பெறுவதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் பொருளாதார மற்றும் இராணுவ உதவியோடு தன்னுடைய இராணுவத்தை பலப்படுத்திக்கொண்ட டைக்ரே மக்கள் முன்னணி அருகில் உள்ள எரித்திரியாவில் நடத்திய ஆக்கிரமிப்பு, சோமாலியாவின் மீதான படையெடுப்பு, தெற்கு சூடானில் மத்தியஸ்தம் என்ற பெயரில் உள்நுழைவது என அமெரிக்க அரசின் அடியாள் படையாகவே செயல்பட்டது என்றும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

டைக்ரே மக்கள் முன்னணி தேர்தல் தோல்வியை சூடான், சோமாலியா, எரித்திரியா, லிபியா ஆகிய நாடுகள் ஆதரித்ததே இதற்கு ஒரு முக்கியமான சான்றாகும். அதுமட்டுமன்றி 1991 முதல் 2018 வரை டைக்ரே மக்கள் முன்னணி ஆட்சி செய்த 30 ஆண்டுகளில் எத்தியோப்பியாவில் கொலை, இனப்படுகொலை, பெருமளவில் மக்கள் இடம்பெயர்வது, போர்கள், பாலியல் வன்முறை, ஊழல், மோசடி - என மனித உரிமை மீறல் கோரத்தாண்டவம் ஆடியது என்றும் பரவலாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

**இன அழிப்பும் போர்க்குற்றமும்:**

அதேபோல் டைக்ரே பிராந்திய இன மக்களின் நலன்களுக்காக ஒதுக்கப்படும் நிதியைத் தன்னுடையை இராணுவத்துக்காக பயன்படுத்துவதன் மூலம் சொந்த பிராந்திய மக்களின் நலன்களுக்கு எதிரான கட்சியாகவும் டைக்ரே மக்கள் முன்னணி இருந்தது எனவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.



மேலும், “டைக்ரே மக்கள் பசியில் வாடுகின்றனர், அவர்களுக்கு இப்போது உதவி தேவைப்படுகிறது, பெரிய பஞ்சம் வரப்போகிறது, எத்தியோப்பியாவின் அருகில் படைகளால் பெண்கள் பாலியல் வன்புணர்வுக்கு ஆளாக்கப்படுகின்றனர்” என அடுக்கடுக்கான அறிக்கைகளின் மூலம், எத்தி யோப்பியாவைய கண்டித்தனர். தற்போதைய எத்தியோப்பியாவிற்கு பொருளாதார மற்றும் பாதுகாப்பு உதவிகள் வழங்குவதில் மேற்குலக நாடுகள் கடுமையான கட்டுப்பாடு களை விதித்துள்ளன.

# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி


மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

1) C 2) E 3) F


24. மூன்று கால் மேசை ஒன்றைச் சுற்றி நாற்காலிகள் மூன்று உள்ளன. அங்கு காணப்படும் கால்களின் எண்ணிக்கை யாது?
1) 16 2) 15 3) 13

25. சத்தி, நிஷான், விஜய், அருண் ஆகிய நால்வரில் விஜயிலும் உயரம் குறைந்தோர் இருவர் மட்டுமே உள்ளனர். நிஷானிலும் உயரம் குறைந்தோர் ஒருவர் மட்டும் உள்ளார். சத்தி மாத்திரம் நிஷானிலும் உயரம் குறைந்தவர் ஆவார். நால்வரில் உயரம் கூடியவர் யார்?
1) விஜய் 2) நிஷான் 3) அருண்


26. ஒரு வரிசையில் கமலா முன்னாலிருந்து 7 ஆவதாகவும் விமலா பின்னாலிருந்து 4 ஆவதாகவும் உள்ளனர். அவர்கள் இருவருக்குமிடையில் இரண்டு பேர் உள்ளனர். அவ்வரிசையில் மொத்தம் எத்தனை பேர் உள்ளனர்?
1) 13 2) 14 3) 15


27. 
உருவில் உள்ள வடிவத்தைப் புள்ளிக்கோட்டின் வழியே வெட்டும்போது கிடைக்கும் முகத்தின் வடிவம்
1) சதுரம் 2) செவ்வகம் 3) அரியம்

28. மகனை விட அப்பா உயரம் கூடியவர் என்பது
1) எப்பொழுதும் உண்மையானது
2) சில சமயம் உண்மையானது
3) எப்பொழுதும் பொய்யானது

29. இச் சிறிய முக்கோணத்தின் சுற்றளவு 9cm எனின்  இம்முக்கோணியின் சுற்றளவு யாது?
1) 12cm 2) 18cm 3) 36cm

30. படகு ஒன்றில் 30 பேர் பயணிக்கலாம் எனின் 100 பேர் பயணிப்பதற்கு எத்தனை படகுகள் தேவை?
1) 3 2) 2 3) 4

31. 


ஆகுமெனில் 

வெறுமையான கட்டத்துக்குப் பொருத்தமான எண் யாது?
1) 14 2) 10 3) 12

32. அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு விடையளிக்குக.


| பூக்கள் | பழங்கள் | D |
|---|---|---|
| A | மாம்பழம் | கத்தரி |
| மல்லிகை | அன்னாசி | வெண்டி |
| செவ்வந்தி | C | தக்காளி |

அட்டவணையில் ACD ஆகியவற்றுக்குப் பொருத்தமான விடைகள் முறையே
1) நித்திய கல்யாணி, பலாப்பழம், காய்கறிகள்
2) முருங்கை, காய்கறிகள், வெண்டி
3) கீரை, பருப்பு, சோயா

33. 


நித்திய கல்யாணிப் பூவைக் குறிக்கும் எழுத்து
1) அ 2) ஆ 3) இ

❖ 34, 35 ஆம் வினாக்களுக்கு தரப்பட்டுள்ள உருவைக் கொண்டு விடையளிக்குக.

34. 


பிள்ளை காலையில் தான் நிற்கும் இடத்திலிருந்து பாடசாலை நோக்கிச் செல்லும்போது எத்தனை தடவை தெற்கு பக்கமாகச் செல்ல வேண்டும்?
1) 2 தடவைகள் 2) 3 தடவைகள் 3) 4 தடவைகள்

35. இப் பிள்ளை காலையில் பாடசாலைக்குச் செல்லும்போது இவரது நிழல் எத்தனை தடவை முன்னால் விழுந்தது?
1) தடவைகள் 2) 5 தடவைகள் 3) 4 தடவைகள்

36. 
இவ்வுருவில் $\frac{3}{8}$ நிறம் தீட்ட வேண்டும் எனின் மேலும் எத்தனை துண்டங்களுக்கு நிறம் தீட்ட வேண்டும்?
1) 2 2) 3 3) 4

## விடைகள்

| | | |
|---|---|---|
| 24. 2 | 28. 2 | 32. 1 |
| 25. 3 | 29. 2 | 33. 1 |
| 26. 1 | 30. 3 | 34. 2 |
| 27. 2 | 31. 1 | 35. 1 |

கல்வி tv CHANNEL-1

**21.08.2022**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English வினாத்தாள் |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு வணிகப்பிரிவு |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் வினாத்தாள் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 04.30 | தரம்-10 | English |

கல்வி tv CHANNEL - 2

**21.08.2022**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | English |
| 09.00 | தரம்-02 | அழகியல் |
| 09.45 | தரம்-03 | English |
| 10.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 01.15 | தரம்-05 | English |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | அழகியல் |
| 06.00 | தரம்-03 | English |
| 06.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-05 | English |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | English |
| 12.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | தரம்-05 | English |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# மரண அறிவித்தல்

## திருமதி
## பரநிருபசிங்கம் இராசம்மா
## (செல்லம்மா)



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 18-02-1934 | 19- 08-2022 |

யாழ். புங்குடுதீவு 7ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பு கொட்டாஞ்சேனையை வசிப்பிடமாகவும் கொண்ட பரநிருபசிங்கம் இராசம்மா நேற்று முன்தினம் 19-08-2022 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் – தையமுத்து தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மாணிக்கம் – சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பரநிருபசிங்கம் அவர்களின் அருமை மனைவியும், காலஞ்சென்ற தவயோகராசா, பரமேஸ்வரி (பிரான்ஸ்), யோகேஸ்வரி (பிரான்ஸ்), இராஜகோபால் (சுவிஸ்), சத்தீஸ்வரி (இலங்கை), உலகநாதன் (சுவிஸ்), அமிர்தலிங்கம் (கனடா), மாணிக்கராசா (நோர்வே), மோகனேஸ்வரி (சுவிஸ்), கனகலிங்கம் (சுவிஸ்), ஜெகதீஸ்வரி (சுவிஸ்), மங்களேஸ்வரி (பிரித்தானியா) ஆகியோரின் அன்புத் தாயாரும்,கில்டா(இலங்கை), குணரெட்ணம் (பிரான்ஸ்), குமாரகுலசிங்கம் (பிரான்ஸ்), நாகேஸ்வரி (சுவிஸ்), காலஞ்சென்ற இராசரெட்ணம், யோகம்மா(சுவிஸ்), கெங்காதேவி(கனடா), வசந்தலதா (நோர்வே), காலஞ்சென்ற பத்மநாதன், சுசியானந்தி (சுவிஸ்), முருகானந்தன் (சுவிஸ்), விஷ்வநாதன் (பிரித்தானியா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும்,காலஞ்சென்ற இராசையா, தனபாக்கியம், காலஞ்சென்ற கனகசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம், அம்பலவாணர் அருணாசலம், நல்லதம்பி, சுந்தரிபிள்ளை மற்றும் புவனேஸ்வரி, காலஞ்சென்ற பாலசுப்ரமணியம் ஆகியோரின் அன்பு மைத்துனியும்,பேரப்பிள்ளைகளின் அன்புப் பேத்தியும்,பூட்டப்பிள்ளைகளின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :

**கோபால் - மகன்** - Mobile : + 41793928533
**குணம் - மருமகன்** - Mobile : + 33651921826
**லிங்கம் - மகன்** - Mobile : + 16479952989
**சந்திரன் - மகன்** - Mobile : + 4790557879

தகவல்:
**குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்

## திருமதி
## அன்னம்மா தருமதுரை



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 04-11-1931 | 15- 08-2022 |

யாழ். முள்ளானை இளவாலையைப் பிறப்பிடமாகவும், கனடா Scarborough வை வசிப்பிடமாகவும் கொண்ட அன்னம்மா தருமதுரை கடந்த 15.08.2022 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம் – சின்னாச்சிபிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அருளம்பலம் – பார்வதியம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற அருளம்பலம் தருமதுரை அவர்களின் அன்பு மனைவியும், சந்திரலீலா, காலஞ்சென்ற இந்திரலீலா, புஸ்பலீலா, வசந்தலீலா, இராசாக்கிருஷ்ணன், காலஞ்சென்ற அசோக்குமார் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ் சென்றவர்களான கண்ணாத்தைபிள்ளை, நடராசா, நல்லபிள்ளை, இராமசேது, இராசமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், கனகரட்னம், விக்னேஸ்வரராஜா, சிறிஸ்கந்தராஜா, ராஜலஷ்மி ஆகியோரின் அன்பு மாமி யாரும், காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை, கனகாம்பிகை, தம்பிராசா, சதாசிவம், நவரத்தினம், நாகேஸ் வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும், நாகம்மா, தவமணி ஆகியோரின் அன்புச் சகலியும், கஜந்தன், செந்தூரன், அபிராமி, தணி காஷ், தெவின், கஸ்தூரி, துர்சிகா, சிந்துஜன் ஆகியோரின் அன்புப் பேத்தியும், சஞ்ஜனா அவர்களின் அன்புப் பூட்டியும் ஆவார்.

*பார்வைக்கு :*
Saturday, 20 Aug 2022 5:00 PM - 9:00 PM
Sunday, 21 Aug 2022 2:00 PM - 3:00 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada.

*கிரியை :*
Sunday, 21 Aug 2022 3:00 PM - 5:00 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada.

*தகனம் :*
Sunday, 21 Aug 2022 5:30 PM
Highland Hills Crematorium 12492 Woodbine Avenue, Gormley, Ontario, L0H 1G0, Canada.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
**077 283 3627**
இல. 41/15, முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

தகவல் :
**வசந்தலீலா (மகள்),**
**சிறிஸ்கந்தராசா (மருமகன்)**

# கிழக்கில் 18 உயர் அதிகாரிகளுக்கு ‘வட்ஸ் அப்’பில் இடமாற்ற உத்தரவு!

## ஜனாதிபதியிடம் முறைப்பாடு

*திருமலை, ஓக. 21*

*கிழக்கு மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளின் செயலாளர்கள் 18 பேருக்கு அவசரமாக “வட்ஸ் அப்“ மூலம் திடீர் இடமாற்றக் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.*

*ஆளுநர் அனுராதா யகம்பத்தின் அறிவுறுத்தலுக்கு அமைய கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் ஆ.மன்சூர் இடமாற்றத்துக்கான உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.*

*ஆனால், இடமாற்றக் கொள்கைக்கு முரணான வகையிலான இந்த உத்தரவுகளை உடனடியாக இரத்துச் செய்ய வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை இலங்கை அரச சேவை மற்றும் மாகாண அரச சேவை தொழிற்சங்க சம்மேளனம் கடிதம் மூலம் கோரியுள்ளது.*

*இந்தக் கடிதத்தைச் சம்மேளனத்தின் தலைவர் எஸ். லோகநாதன் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளார்.*

*(அ)*

# மரண அறிவித்தல்



## இரத்தினம்
## கோபாலகிருஸ்ணன் (ஆசன்)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 02 - 02 - 1939 | 17 - 08 - 2022 |

யாழ். கொக்குவில் நந்தாவிலைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில், சாவகச்சேரி, அவுஸ்திரேலியா சிட்னி ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட இரத்தினம் கோபாலகிருஸ்னன் அவர்கள் 17.08.2022 புதன்கிழமை அன்று அவுஸ்திரேலியாவில் இறைபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்ற இரத்தினம், அழகம்மா தம்பதிகளின் இளைய மகனும், காலஞ்சென்ற சுப்ரமணியம், அன்னலச்சுமி தம்பதிகளின் பாசமிகு மருமகனும், சிவனேஸ்வரி (வனிதா) அவர்களின் அன்புக் கணவரும், வனுஷ்யா (லண்டன்), சிந்துஜா (லண்டன்), துஸ்ஜா (கட்டார்), பிரியா (அவுஸ்திரேலியா), கோபிராஜ் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், உதயராஜ், அகிலேஸ்வரன், திருஞானசம்பந்தர், முகுந்தன், நிறஞ்சி ஆகியோரின் அன்பு மாமனாரும், சரன்ராஜ், பிரிவின்ராஜ், மாதேஷ், விபித்திரா, ஜீவித்தா, நிதுக்சன், அனிஷ், கிரிஷ், கசிக்கா, அக்சிகா, டக்சிகா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற பூபதி, தர்மலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவராசா, சிவராணி, சிவமணி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.08.2022) ஞாயிற்றுக்கிழமை அன்று Corner and Roads, Delhi Rd & Plassey Rd, North Ryde NSW 2113, Australia நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
**குடும்பத்தினர்.**

தொடர்புகளுக்கு :
**சிவனேஸ்வரி (வனிதா, மனைவி)** – 0061410771055
**பிரிவின்ராஜ் (பேரன்)** – 00447917370023
**அகிலேஸ்வரன் (மருமகன்)** – 00447944911230
**திருஞானசம்பந்தர் (மருமகன்)** – 0097455547952
**முகுந்தன் (மருமகன்)** – 0061402069165
**கோபிராஜ் (மகன்)** – 00447465987533

## கூடுதலான...

கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

அங்கு கூடுதலான அமைச்சரவை அமைச்சர் பதவிகள் மற்றும் இராஜாங்க அமைச்சர் பதவிகள் வழங்கப்படவேண்டும் எனக் கோரப்பட்டது.

இதன்போது சில பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பதவிகளை வழங்க பல அரசியல் கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளதாக ஜனாதிபதி தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட வேண்டிய பதினாறு பாராளுமன்ற உறுப்பினர்களின் பட்டியலை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சமர்ப்பித்துள்ளது.

அதில் குறிப்பிட்டுள்ள நாமல் ராஜபக்ஷ, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, ரோஹித அபேகுணவர்தன மற்றும் மஹிந்தானந்த அளுத்கமகே ஆகியோருக்கு அமைச்சுப் பதவிகளை வழங்க வேண்டாம் என எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளனர்.

எவ்வாறாயினும், அமைச்சுப் பதவிகளை பெற்றுக் கொள்வதற்காக ஜனாதிபதியுடன் தனித் தனியாக பேச்சுவார்த்தை நடத்தாமல் கட்சியாக பேச்சுவார்த்தை நடத்தவேண்டும் என அக்கட்சியின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ஷ உறுப்பினர்களுக்கு அறிவித்துள்ளார்.

சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பது தொடர்பாக அரசியல் கட்சிகளுடன் மேலும் கலந்துரையாடல்களை மேற்கொள்ள ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

இதற்கிடையில், இம்முறை இராஜாங்க அமைச்சர்களின் எல்லைகளை வர்த்தமானியில் வெளியிடக்கூடாது என்ற யோசனையும் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (அ)

## நாணய நிதிய...

நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான சிரேஷ்ட தூதுவர் பீற்றர் புருயர் மற்றும் இலங்கை குழுவின் தலைவர் மசாஹிரோ நொசாகி ஆகியோர் தலைமையில் இந்தக் குழு வழிநடத்தப்படவுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதி ஏற்பாட்டுக்கான, பணிக்குழாம் மட்ட ஒப்பந்தத்தை நோக்கி முன்னேறுவதே இந்த விஜயத்தின் நோக்கமாகும்.

இலங்கையின் பொதுக் கடன் நிலைத்தன்மையற்றது என மதிப்பிடப்படுவதால், சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுக் குழுவின், விரிவாக்கப்பட்ட நிதி வசதி திட்டத்தின் ஒப்புதலுக்கு, கடன் நிலைத்தன்மையை மீட்டெடுப்பதற்காக, இலங்கையின் கடன் வழங்குநர்களின் போதுமன உத்தரவாதங்கள் அவசியமாகும்.

இந்த விஜயத்தின்போது, சர்வதேச நாணய நிதிய அதிகாரிகள், ஏனைய பங்குதாரர்களுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்த உள்ளதாக அதன் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## கொரோனா...

குறைக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதானோம், "கொரோனாத் தொற்றுடன் வாழக் கற்றுக்கொண்டதால் தொற்றுப் பாதிப்பு இல்லை என்று எடுத்துக்கொள்ள முடியாது. தற்போது பாதிப்பு அதிகரித்து வருகின்றது. நம்மைப் பாதுகாத்துக் கொள்ளவும், மற்றவர்களைப் பாதுகாக்கவும் பாதுகாப்பு நடவடிக்கைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

உலகம் முழுவதும் கடந்த நான்கு வாரங்களில் கொரோனா, குரங்கம்மை உள்ளிட்ட உலகளாவிய நோய்கள் தொடர்பான இறப்புக்கள் 35 வீதத்தால் அதிகரித்துள்ளன. கடந்த வாரம் மட்டும் கொரோனாவுக்கு 15 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர். தடுப்பூசி, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் இருக்கும்போது இது ஏற்றுக்கொள்ள முடியாதது.

எனவே, அனைவரும் தடுப்பூசி செலுத்திக்கொள்ளுங்கள். சமூக இடைவெளி, முகக்கவசம் அணிதல் ஆகியவற்றைப் பின்பற்றுங்கள்" என்று கூறினார்.

மேலும், குரங்கம்மை குறித்து பேசிய அவர்,கடந்த வாரம் 7,500 பேருக்கு குரங்கம்மை தொற்று உறுதியாகியுள்ளது. முந்தைய வாரத்தைவிட பாதிப்பு 20 வீதம் அதிகமாகும். தற்போது வரை 92 நாடுகளில் 35 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 12 பேர் உயிரிழந்துள்ளனர்-என்றார். (அ)

## மணல் கடத்தி...

இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவத்தில் துன்னாலை குடவத்தையைச் சேர்ந்த ஜெ.ஜெயந்தன் (வயது-27) என்ற இளைஞனே பலியாகியவராவார். மணல் கடத்தி வந்த கப் ரக வாகனம் கட்டுப்பாட்டை இழந்து புரண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதில் படுகாயங்களுக்கு உள்ளான இளைஞர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதன வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.

சடலம் யாழ் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ-02)

## யாழ். வந்தார்...

கொழும்பு - யாழ்ப்பாணம் ரயில் சேவையில் நேற்று மதியம் யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தை வந்தடைந்த அமைச்சரை, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஆகியோர் வரவேற்றனர்.

தொடர்ந்து யாழ்ப்பாணம் ரயில் நிலைய அதிபரை சந்தித்த அமைச்சர், காங்கேசன்துறை - கொழும்பு ரயில் சேவையை மேம்படுத்துவது மற்றும் சேவைகளை அதிகரிப்பது தொடர்பில் கலந்துரையாடினார்.

அத்துடன், இரவு தபால் சேவையின் மீள் ஆரம்பம், அறிவியல் நகர், சாவகச்சேரி நிலையங்களில் உத்தரதேவி ரயில் சேவை தரித்து நிற்கும் என இந்தச் சந்திப்பில் உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

## இலங்கை...

அவரின் வருகை அடுத்த மாதம் (செப்ரெம்பர்) வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் இடையில் நேற்று முன்தினம் முக்கிய தொலைபேசி உரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

அதன் பின்னரே, கோட்டாபய ராஜபக்ஷ இந்த மாத இறுதியில் நாடு திரும்பும் தனது முடிவை பிற்போடப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, கோட்டாபய ராஜபக்ஷவின் வீடு அமைந்துள்ள மிரிஹான பகுதியிலும், அதனைச் சூழவுள்ள பகுதியிலும் பாதுகாப்பு ஏற்பாடுகளை அதிகரிக்குமாறு பொலிஸார் மற்றும் புலனாய்வு அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதியின் வீட்டைச் சுற்றியுள்ள பகுதிகள் விசேட கண்காணிப்பில் வைக்கப்படவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ)

## நாடு முழுவதும்...

டுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 12ஆம் பிரிவினால், ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நாளை திங்கட்கிழமை முதல் 25 மாவட்டங்களிலும் பாதுகாப்புக்காக முப்படையினரையும் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என அதிவிசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# போதைவஸ்து பிரச்னைகள் குறித்து சகலரும் கவனம் செலுத்தவேண்டும்

## ஆறு திருமுருகன் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 21

போதைவஸ்து பிரச்னைகள் தொடர்பாக யாழ். பிராந்தியத்துக்கு பொறுப்பாக இருக்கின்ற பொலிஸ் அதிகாரிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள், ஆளுநர் மற்றும் சமூக அமைப்புக்களின் தலைவர்கள், பிரதேச செயலர்கள் தடுத்து நிறுத்தும் வழிமுறைகளை கையாளாது காலம் கடத்தினால் பெரிய ஆபத்தை எங்கள் பகுதி சந்திக்கும் என்பதில் ஐயமில்லை என சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் தெரிவித்தார்.

போதைவஸ்துப் பாவனை தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வடபகுதியில் குறிப்பாக யாழ்.குடாநாட்டில் சமீபத்தில் ஏற்பட்டுள்ள மிக முக்கியமான பிரச்சனை போதை வஸ்து பிரச்சனையாகும். ஒரு சில மாதங்களுக்குள் 8 இளைஞர்கள் போதைவஸ்துக்கு அடிமையாகி அதிகமான போதை ஊசிகளையேற்றிய காரணத்தினால் மரணத்தை சந்தித்திருக்கிறார்கள்.

இந்தக் கொடுமையான சம்பவம் கலை பண்பாட்டுக்கு பேர்போன யாழ்ப்பாணத்தில் இடம்பெறுவது மிக கவலையானது. மக்கள் பிரதிநிதிகள், கல்விமான்கள், பொறுப்பாளர்கள் இவ்விடயம் சார்ந்து சரியான அக்கறை எடுக்காத காரணத்தினால் போதையினால் கொடூரமான சம்பவங்கள் வடக்கில் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது.

குறிப்பாக பெரிய கல்லூரிகள், பல்கலைக்கழகச் சூழல்கள் மற்றும் யாழ்ப்பாணத்தில் போதைவஸ்து வணிகத்துக்குரிய இடங்கள் என்று கூட சில இடங்களை பலரும் சுட்டிக்காட்டுகின்றனர்.

போருக்கு பின்னால் எவ்வளவோ இளைய தலைமுறையை இழந்திருக்கின்ற நிலையிலே தொடர்ந்து இளைய தலைமுறை அநியாயமாக போதை வஸ்தால் மரணத்தை சந்திக்கின்றார்கள்.

போதைவஸ்து பாவனை கட்டுக்கடங்காமல் இளைய தலைமுறை இடையில் அதிகரித்து காணப்படுகின்றது. யார் இதை செய்விக்கின்றார்கள் , போதை வஸ்து எவ்வாறு குடா நாட்டுக்குள் வந்து சேர்கின்றது, போதை வஸ்துக்கு அடிமையானவர்களுக்கு மாற்று வழி என்ன என்பது தொடர்பாக கேள்வி காணப்படுகிறது.

போதைவஸ்து முற்றுமுழுதாக வடக்கிலோ கிழக்கிலோ மலையகத்திலோ இலங்கையினுடைய எந்த பாகத்திலாவது உடனடியாக தடுப்பதற்கான வழிகளை கையாள விட்டால் மிகப்பெரிய ஆபத்தை இந்த நாடு சந்திக்கும். குறிப்பாக தமிழ் மக்களை பொறுத்தவரை பல இழப்புகளைச் சந்தித்தவர்கள். இன்று எமது சனத்தொகை மிகவும் வீழ்ச்சி அடைந்திருக்கின்றது. வடக்கில் சனத்தொகை என்றும் இல்லாதவாறு குறைந்திருக்கின்றது.

குறிப்பாக வடக்கு-கிழக்கு மாகாணங்களில் மாணவர் தொகை குறைவு காரணமாக பல பாடசாலைகள் மூடப்பட்டு வருகிறது. அதுமட்டுமல்ல புலம்பெயர் தேசங்களை நோக்கி எம்மவர்கள் செல்வதனால் எங்களது சமுதாயத்தில் பிறப்பு வீதம் மக்கள் தொகை என்பது ஈடு செய்ய முடியாத அளவுக்கு குறைந்து கொண்டே சொல்கின்றது. எனவே இந்த நிலையில் இருப்பவர்களையாவது நல்லவர்களாக வல்லவர்களாக நாட்டுக்கு உகந்தவர்களாக சமுதாயத்தினுடைய பொறுப்புடையவர்களாக காப்பாற்ற வேண்டிய கடமை அனைவருக்கும் முன்னுள்ள தலையாய கடமையாகும்.

போதைவஸ்துகள் பிடிபட்டதாக செய்திகள் வந்தாலும் அவர்களுக்கு வழங்கப்பட்ட தண்டனை தொடர்பாகவோ அவர்களை சமூகத்தில் பிணையில் விடுகின்ற போது அவர்கள் சமூகத்தோடு மீண்டும் தங்களுடைய தொழிலை செய்ய தொடங்குகின்றபோது வருகின்ற பாதிப்பு என்பது எல்லை இல்லாதது. எனவே பல தடவை மதிப்புக்குரிய நீதிமன்றங்கள் நீதிபதிகளெல்லாம் எச்சரிக்கை செய்திருக்கிறார்கள். யாழ்ப்பாணத்து சூழ்நிலை எவ்வாறு போகின்றது என்று பொறுப்பு வாய்ந்த நீதிமன்றங்கள் நீதிபதிகள் எல்லாம் போதை வஸ்து செயலில் ஈடுபடுபவர்களை கண்டித்து இருக்கிறார்கள். ஆனால் சமூகத்தினுடைய முக்கிய பொலிஸ் பொறுப்பு அதிகாரிகள் மற்றும் பிரதேச செயலாளர்கள், மதிப்பார்ந்த பிரதிநிதிகளாக நாடாளுமன்றம் சென்றவர்கள் இந்த விடயங்கள் தொடர்பில் இதுவரை ஆக்கபூர்வமான முடிவையும் எடுக்காத காரணத்தினால் எங்கள் சமுதாயம் மிகக் கேவலமான நிலைக்கு வந்துவிட்டது.- என்றார். (அ)

## 30 அமைச்சர்...

படவுள்ளன என்றும் தெரியவருகின்றது.

புதிதாக நியமிக்கப்படவுள்ள அமைச்சரவை அமைச்சர்களுக்கு தலா ஒரு அமைச்சு மாத்திரமே வழங்கப்படவுள்ளதாகவும், மேலதிக அமைச்சுக்களை இராஜாங்க அமைச்சர்களுக்கு பகிர்ந்தளிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திட்டமிட்டுள்ளார் என்றும் கூறப்படுகின்றது.

அத்துடன் இராஜாங்க அமைச்சர்களை மாதத்துக்கு ஒரு தடவை அமைச்சரவை கூட்டத்துக்கு அழைக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் கூறுகின்றன. (அ)

## மிக மோசமான...

பாதித்துள்ளதாகவும் ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மின் உபகரணங்கள், மருந்து பற்றாக்குறை என்பன காரணமாக நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடியினால் கர்ப்பிணிப் பெண்கள் போஷாக்கற்ற உணவு மற்றும் உணவுத் தட்டுப்பாட்டால் பாரிய விளைவுகளை சந்திக்க நேரிடும் என ஐ.நா. சபை தெரிவித்துள்ளது. (அ)

## அரசுக்கு...

கண்டித்து தேசிய மக்கள் சக்தி கொழும்பில் நேற்று பிற்பகல் ஆர்ப் பாட்டப் பேரணியை முன்னெடுத்தது.

நுகேகொடை சந்தியில் ஆரம்பமான ஆர்ப்பாட்டப் பேரணி விஜேராம சந்தி வரை சென்றது.

இதன்போது ஆர்ப்பாட்டக்காரர்கள் அரசுக்கு எதிரான கோஷங்களை எழுப்பினர்.

அத்துடன் 'பொருட்களின் விலை வானத்தை நோக்கி மக்கள் சட்டியிலிருந்து அடுப்பை நோக்கி', 'மக்களின் சிக்கல்களுக்கு அடக்குமுறையால் தீர்வு தேடுவதைக் கண்டிகின்றோம்' உள்ளிட்ட வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளையும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் ஏந்தியிருந்தனர். (அ)

## தீர்க்கமான...

னர்கள், நேற்று அநுராதபுரத்துக்கு பயணம் மேற்கொண்டனர்.

ருவன்வெலிசாய உள்ளிட்ட வழிபாட்டு தலங்களுக்குச் சென்று வழிபட்டதுடன், மகாசங்கத்தினரையும் சந்தத்து ஆசி பெற்றனர்.

அதன் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே பீரிஸ் இவ்வாறு கூறினார்.

"அநுராதபுரம் என்பது வரலாற்று சிறப்புமிக்க இடமாகும். அந்த ரஜரட்ட மண்ணில் இருந்து எமது செயற்பாடு ஆரம்பமாகின்றது." - எனவும் குறிப்பிட்டார் பீரிஸ். (அ)

ஈழநாடு
Eelanadu

# இலங்கை மக்களுக்கு உதவுவதற்கு விரைவான நடவடிக்கை வேண்டும்

## அமெ.காங்கிரஸ் உறுப்பினர்கள் கோரிக்கை

நியூயோர்க், ஒக. 21

**இலங்கை மக்களுக்கு தேவைப்படும் உதவிகளை செய்வதற்கு இந்த நேரத்தில் கூடுதல் விரைவான நடவடிக்கையை இலங்கைக்கு வழங்குமாறு அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் 10 பேர், இராஜாங்கச் செயலாளர் அன்டனி பிளிங்கன் மற்றும் யு.எஸ்.எய்ட் நிர்வாகி சமந்தா பவர் ஆகியோரிடம் வலியுறுத்தியுள்ளனர்.**

யு.எஸ்.எய்ட் நிர்வாகி மற்றும் இராஜாங்கச் செயலாளருக்கு அனுப்பிய கடிதத்தில், காங்கிரஸின் 9 ஆண் மற்றும் ஒரு பெண் உறுப்பினர் ஆகியோர், இலங்கையின் ஸ்திரத்தன்மைக்கு ஆதரவான நடவடிக்கைகளை முழுமையாக இணைக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

பிராந்தியத்துக்கான அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கை இலக்குகள் இலங்கைக்கு கிடைக்கவேண்டும் என்று அவர்கள் கோரியுள்ளனர்.

புதிதாக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவசரகாலச் சட்டத்தை அறிவித்தார். நாட்டை ஊரடங்குச் சட்டத்தின் கீழ் கொண்டு வந்தார். மேலும் போராட்டங்களை அடக்குவதற்கு உத்தரவிட்டார் என்பதைச் சுட்டிக்காட்டியுள்ள காங்கிரஸ் உறுப்பினர்கள், இலங்கையின் மீது அனைத்து இராஜதந்திரங்களையும் தொடர்ந்து பயன்படுத்துமாறு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அமைதியான ஆர்ப்பாட்டக்காரர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு எதிரான வன்முறையைப் பயன்படுத்தாமல், துன்புறும் பிரஜைகளின் உரிமையை இலங்கை அரசாங்கம் பாதுகாப்பதை உறுதி செய்வதற்கான வழிமுறைகள் உள்ளன என்பதை இலங்கைக்கு வலியுறுத்துமாறும் அவர்கள் கேட்டுள்ளனர்.

(அ)

# கோட்டாபயவுக்கு எதிராக அமெரிக்காவில் வழக்கு!

கொழும்பு, ஒக. 21

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக அமெரிக்கா நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக கொழும்பு சிங்கள ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

கோட்டாபய ராஜபக்ஷ, அமெரிக்க குடியுரிமையை இரத்துச் செய்யும் முன்னர் நடந்த சில சம்பவங்களை அடிப்படையாக கொண்டு இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட உள்ளது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய தற்போது தாய்லாந்து தலைநகர் பாங்கொக்கில் தங்கியிருக்கின்றார். அவர் விரைவில் இலங்கை வரவுள்ளார். அத்துடன் நீண்டகாலத்துக்கு அமெரிக்காவில் குடியேற முயற்சித்து வருவதாகவும் தகவல்கள் வெளியாகி இருந்தன.

தாய்லாந்தில் தங்கியிருக்கும் கோட்டாபய எதிர்வரும் 24 ஆம் திகதி இலங்கை திரும்புவார் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ்

# வசந்த முதலிகே உள்ளிட்ட மூவரை தடுத்துவைத்து விசாரிக்க அனுமதி

கொழும்பு, ஒக 21

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே, கல்வெவ சிறிதம்ம தேரர் மற்றும் ஹஷந்த ஜவந்த குணதிலக்க ஆகியோரைப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் 90 நாட்களுக்குத் தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொள்வதற்குப் பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் நேற்று முன் தினம் மாலை கொழும்பில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின்போது, ஆர்ப்பாட்டக்காரர்கள் 19 பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

முறையற்ற விதத்தில் ஒன்றுகூடிய குற்றச்சாட்டில் அவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

கறுவாத்தோட்டம், கொம்பனித்தெரு, பொரளை பொலிஸ் பிரிவுகள் மற்றும் களனிப் பிராந்திய குற்ற விசாரணைப் பிரிவு என்பனவற்றால் சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்களில் வசந்த முதலிகே உள்ளிட்ட மூவரைத் தவிர ஏனைய 16 பேரும் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இதேவேளை, வசந்த முதலிகே உள்ளிட்ட மூவர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்படுவதைச் சர்வதேச மன்னிப்புச் சபை கண்டித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. (அ)

ரணிலின் வீடு எரிப்பு:

# சஜித்தின் சகோதரி நேற்று வாக்குமூலம்

கொழும்பு, ஒக. 21

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வீடு தீக்கிரையாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் சகோதரி துலாஞ்சி பிரேமதாஸ நேற்று கொழும்பு குற்றவியல் விசாரணை திணைக்களத்துக்குச் சென்று வாக்குமூலமளித்தார்.

இதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துரைத்த அவர், "ஜனாதிபதி ரணிலின் வீடு தீக்கிரையாக்கப்பட்ட அன்று ஆர்ப்பாட்ட இடத்தில் நானும் நின்றிருந்ததால் விசாரணைக்காக என்னை அழைத்திருந்தனர்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறே கோரினர்.

அதற்கமைவாக நான் எனது பதிலை வழங்கினேன். மிகவும் சுமுகமான முறையில் விசாரணை இடம்பெற்றது.

வாக்குமூலமளித்த பின்னர் விசாரணை எனது விசாரணை முடிவுற்றது. எவ்வித பிரச்னையும் இருக்கவில்லை." - என்றார்.

(அ)

# பஸில் விடுத்த அழைப்பை நிராகரித்தார் ஜி.எல்.பீரிஸ்!

கொழும்பு, ஒக. 21

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் ஒன்றிணைந்து செயற்படுமாறு அதன் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ விடுத்த அழைப்பை பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் நிராகரித்துள்ளார்.

பாராளுமன்றத்தின் ஊடாக ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் வாக்கெடுப்பில் பொதுஜன பெரமுன ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கத் தீர்மானித்துள்ளது எனப் பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் உத்தியோகபூர்வமாக அறிவித்திருந்தார். இருப்பினும் பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பேராசிரியர் ஜி.எல் பீரிஸ் எதிர்த்தரப்பு வேட்பாளரான பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் டலஸ் அழகப்பெருமவுக்கு ஆதரவு வழங்கியிருந்தார்.

அத்துடன் ஜனாதிபதியால் அமுல்படுத்தப்பட்ட அவசரகாலச் சட்டத்துக்கும் எதிராக அவர் வாக்களித்திருந்தார்.

இவ்வாறான காரணிகளால் பொதுஜன பெரமுனவின் பெரும்பாலான உறுப்பினர்கள் ஜி.எல் பீரிஸுக்குக் கட்சி மட்டத்தில் ஒழுக்காற்று நடவடிக்கையை முன்னெடுக்குமாறும், கட்சியின் தவிசாளர் பதவியில் இருந்து அவரை நீக்குமாறும் பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷவிடம் வலியுறுத்தியுள்ளனர்.

பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பதவியில் மாற்றத்தை ஏற்படுத்துமாறு பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் முன்வைக்கப்பட்ட கோரிக்கையைத் தொடர்ந்து கட்சியின் முக்கிய பதவிகளை மறுசீரமைக்க கட்சியின் உயர்மட்டம் தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் நவம்பர் மாதம் கொழும்பில் இடம்பெறவுள்ள பொதுஜன பெரமுனவின் வருடாந்த மாநாட்டின் முக்கிய தீர்மானங்கள் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் என்று பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பேராசிரியர் ஜி.எல் பீரிஸ், முன்னாள் அமைச்சர் டலஸ் அழகப்பெரும மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான நாலக கொடஹேவா, சன்ன ஜயசுமன, டிலான் பெரேரா உட்பட பொதுஜன பெரமுனவின் 10 உறுப்பினர்கள் பொதுஜன பெரமுனவின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து தனித்துச் செயற்படும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளார்கள்.

இந்நிலையில், பொதுஜன பெரமுனவுடன் மீண்டும் ஒன்றிணைந்து செயற்படுமாறு பஸில் ராஜபக்ஷ, பேராசிரியர் ஜி.எல் பீரிஸுக்கு அழைப்பு விடுத்துள்ளார். அதனை ஜி.எல். பீரிஸ் நிராகரித்துள்ளார். (அ)

# 80 அரசியல்வாதிகளுக்கு எதிராக இலஞ்சம், ஊழல் குற்றச்சாட்டுகள்

கொழும்பு, ஒக. 21

இலஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுக்கள் சம்பந்தமாக அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் என பல்வேறு தராதத்தில் உள்ள 80 அரசியல்வாதிகள் உட்பட 386 பேருக்கு எதிராக புதிதாக விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக இலஞ்ச அல்லது ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதனை தவிர முறைகேடான முறையில் சொத்துக்களை சம்பாதித்த குற்றச்சாட்டு சம்பந்தமாக முன்னாள் அமைச்சர் ஒருவர் உட்பட 42 பேருக்கு எதிராக விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாக ஆணைக் குழுவின் உயர் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

கடந்த ஜனவரி முதலாம் திகதி முதல் ஜூன் 30 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அத்துடன் இந்த காலப்பகுதியில் இலஞ்சம் பெற்றமை சம்பந்தமான 22 சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஊழல், மோசடிகள், இலஞ்சம் பெற்ற மற்றும் முறைகேடான முறையில் சொத்து சம்பாதித்தமை தொடர்பாக இலஞ்ச ஆணைக்குழு இந்த வருடத்தில் பல வழக்குகளை தாக்கல் செய்துள்ளது.

இதனிடையே பொருளாதார நெருக்கடி சூழ்நிலை காரணமாக நாடு முழுவதும்இஞ்சம் பெறும் சம்பவங்கள் அதிகரித்திருப்பதை காணமுடிவதாக ஆணைக்குழுவின் தகவல்கள் கூறுகின்றன. (அ)

# முட்டைக்கு விலை நிர்ணயம்

கொழும்பு, ஒக. 21

கோழி முட்டைகளுக்கான அதிகபட்ச சில்லறை விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவரின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, வெள்ளை முட்டைக்கான அதிகபட்ச சில்லறை விலை 43 ரூபாவா ஆகவும், சிவப்பு முட்டைக்கான அதிகபட்ச சில்லறை விலை 45 ரூபா ஆகவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. (அ)

# மூதூர் உழவு இயந்திரம் தடம் புரண்டதில் விபத்து

## மூவர் உயிரிழப்பு

திருமலை, ஒக. 21

திருகோணமலை பச்சனூர் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் மூவர் உயிரிழந்துள்ளனர்.

மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 64ஆம் கட்டை-பச்சனூர் பகுதியிலுள்ள விகாரைக்கு சேறுவில பிரதேசத்திலிருந்து சிரமதான பணிக்காக உழவு இயந்திரத்தில் சென்றபோது உழவு இயந்திரத்தின் கொக்கை கழன்று விழுந்ததாகவும் இதன்போது மூவர் உயிரிழந்துள்ளனர். மேலும் மூவர் அதிதீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அத்துடன் சிறு காயங்களுக்கு உள்ளானவர்கள் மூதூர் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்விபத்து தொடர்பில் மூதூர் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 21.08.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.